உ

குருபரன்றுணை.

கலியுகமாராட்டம்

# கண்கட்டுவித்தைகள்

என்னும்

# கைபுரட்டு ஜாலம்.

முதற்பாகம் - முன்னைந்நூறு.

இஃது

செழுமணவைச் - சித்திரக்கவி,

தேவேந்திரநாத பண்டிதர்

அவர்களாலியற்றப்பட்டு,

ஷையார் சகோதரர்

சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரவர்களால்

தமது,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

**Registered Copy Right.**

**1901.**

இதன் விலை அணு 6.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

# அறிவிப்பு.

---

இதனாற் சகலர்க்கு மறிவிப்ப தியாதெனில், இக்கலியுகமாராட்ட மென்னும் கண்கட்டுவித்தைக ளெனப் பெயர்வகித்த விந்நூலை, நூதனமாய்ச் செழுமணவைச் - சித்திரகவி, தேவேந்திரநாதபண்டிதரவர்க ளியற்றிய முதற்பாகம் - முன்னைந்நூறு விந்தைகளை, சென்னை சூளை தொட்டிக்கலை குமாரப்பமுதலி தெருவில் 9 - வது நெம்பர் கிருகத்தில் ஸ்தாபித்துள்ள சிவகாமிவிலாச அச்சியந்திரசாலையிற் பதிப்பித்து வெளிவிடப்பட்ட இந்நூலானது 1901 - ம் வருஷத்திய 25 - வது ஆக்டின் 20 - வது செக்ஷனில் 9 - வது பிரிவின்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்திருக்கின்றமையால், எனதனுமதியின்றி யாதொருவரும் வேறுபதிப் பச்சியற்றவும், மறுபாஷையில் மொழிபெயர்க்கவுங்கூடாது. இதற்கடுத்தாற்போல் இரண்டாம்பாகம் பின்னைந்நூறு - விந்தைகளையுந் தொன்றுதொட்டு ஏற்கெனவே யச்சியற்றி வெளியிற் பிரசரிக்கப்படும்.

இப்படிக்கு,

சிறுமணவூர் - முனிசாமிமுதலியார்,

பிரம்பர் போஸ்டு மதராஸ்.

உ

சிவமயம்.

# பொருளகராதி


| பெயர்கள். | பக்கம். |
|---|---|
| அக்கினிஜொலிப்பிங்கி ... | 90 |
| அச்சுப்படத்தைமறுபதிப்பெடு | 67 |
| அணைத்தவிளக்கெரிய ... | 23 |
| அதிகங்காய்காய்க்க... ... | 37 |
| அதிகசாதமுண்ண ... ... | 7 |
| அதிகம்பூபூர்க்க .. . ... | 37 |
| அபிமோக்குநயநீதஞ்செய்ய ... | 66 |
| அம்மியெழும்ப ... ... | 71 |
| அயத்தூளுலாவ ... .. | 85 |
| அரமுதலியவை துலையவிட.. | 11 |
| அரிசிவேகாதிருக்க ... ... | 23 |
| அலைமிருதுவடக்க ... . . | 31 |
| அலையாணதடங்க ... | 31 |
| அல்யூமினியம்பாத்திரஞ் சுத்தி | 33 |
| அவல் மெல்லாதிருக்க ... | 44 |
| அவித்தண்டோட .. ... | 91 |
| அவித்தவிளக் கெரிய.. ... | 7 |
| அழியாத இங்கி ... ... | 90 |
| அன்னுசிப்பழம்விர்த்தியாக ... | 11 |
| ஆடாமுனியாட . ... | 82 |
| ஆடைகட் ரச்சாயமேற்ற ... | 68 |
| ஆடையிலிரும்புகறையகல .. | 39 |
| ஆடையி லெண்ணைகறையகல. | 39 |
| ஆட்டுக்கூட்ட மசையாதிருக்க. | 6 |
| ஆயுதங்களிற் பேர்போட ... | 43 |
| இங்கிபட்டகறையெடுக்க ... | 39 |
| இண்டியன் இங்கி ... ... | 45 |
| இந்திரியங்கட்ட ... ... | 46 |
| இந்திரியமிருக ... ... | 6 |
| இயந்திரவிவரம் ... ... | 47 |
| இரகசியகடிதமெழுதுமிங்கி . . | 26 |
| இரத்தக்கறை யெடுபட ... | 39 |
| இரத்தக்குழாய்காட்ட , ... | 83 |
| இரப்பர்செய்ய ... ... | 45 |
| இரப்பர் ஸ்டாம்புசெய்ய. ... | 73 |
| ஷை சிவப்பிங்கி ... ... | 74 |
| ஷை ஊதாயிங்கி ... ... | 74 |
| ஷை நீலயிங்கி ... ... | 74 |
| ஷை கறுப்பிங்கி .. . | 74 |
| இராஜமோகனம் . ... | 72 |
| இராஜவசியம். ... ... | 59 |
| இராவுற்பத்தியாக ... ... | 45 |
| இருட்டிற்பேயைக்காட்ட ... | 70 |
| இருளில்வாசிக்கமை... | 50 |
| இரும்பிற் செம்புகிலிட்ட... | 76 |
| இரும்பிற்பொன்கிலிட்ட .. | 92 |
| இரும்பொட்டாதிருக்க | 91 |
| இரெக்கக்கதிராக கிரியைக | 47 |
| இலக்குமிசோப் புகை. | 16 |
| இலைகள்மூங்கில்கட்குசாயமிட | 63 |
| மற்றொருவிதம் ... .. | 63 |
| இலோகம்பெருக்க ... . . | 91 |
| இலைபூகாயதிகரிக்க... ... | 37 |
| இலைபூகாயுதிர ... ... | 37 |
| இலெளகாரங் கெட்டிப்பட . | 39 |
| ஈடுவசியம் ... ... ... | 51 |
| ஈயக்குண்டு நெருங்க. ... | 76 |
| ஈயக்குண்டு பொருந்த ... | 76 |
| ஈய்கொசுகுநசிய ... ... | 78 |
| உடம்பெறிய. ... ... | 21 |
| உடைந்த கருங்கல்லொட்ட... | 29 |
| உடைந்த பீங்கான்களை ஒட்ட. | 40 |
| உப்புக்கிண்ணிசெய்ய | 19 |
| உப்புச்சலத்தை நல்லசலமாக்க. | 10 |
| மற்றொருவிதம் ... ... | 10 |
| உருவம்பெருத்திருக்க. ... | 45 |
| உரோமங்கறுக்க ... ... | 54 |
| உரோமமுதிர ... ... | 6 |
| உலோகப்பிரிவினை ... ... | 19 |
| உளிதுவையவிடும்விதம் ... | 11 |
| ஊசி சலத்தில் மிதக்க. ... | 76 |
| ஊசியஸ்திரம். ... ... | 68 |
| ஊசியைக் கோர்ப்பது. ... | 16 |
| ஊதா இங்கிசெய்ய ... ... | 25 |
| ஊனிற்புகைக்கவசியம். ... | 50 |
| எண்ணெயுட்கலந்த தண்ணீரை | 46 |
| எண்ணைவெண்ணெயா ... | 86 |
| எதிரிகள்கெட .. ... | 59 |
| எலிகள் ஓடிவிட ... ... | 7 |
| எலிப்புழுவேக ... ... | 36 |
| எலிகள்விலக ... ... | 5 |
| எலுமிச்சம்பழங்கெடாதிருக்க. | 8 |

| பெயர்கள். | பக்கம். |
|---|---|
| எவ்வளவேனுந்தின்பதற்கு ... | 4 |
| எழுதுங்கறுப்பிங்கிசெய்ய ... | 24 |
| வேறு கறுப்பிங்கிசெய்ய... | 24 |
| மற்றொரு கறுப்பிங்கிசெய்ய | 24 |
| மேலாகியகறுப்பிங்கிசெய்ய | 24 |
| எழுதும் இறகுகளைகெட்டிசெ | 46 |
| எழுத்துகளைத்தெரியாமற்செய் | 17 |
| எழுத்துகள் ஈரத்திற்றெரிய... | 70 |
| எழுத்துகள் மறைய... | ...7, 70 |
| எறியதைத்தணிக்க ... ... | 18 |
| எறும்புபுத்தடங்க ... ... | 89 |
| என்கிரோவர்செய்ய .. ... | 61 |
| ஐம்மலம் ... ... ... | 48 |
| ஒட்டுக்கல் .. ... ... | 72 |
| ஒட்டுத்திராகைஷமூன்றுவர்ண. | 8 |
| ஒருகோலையிரண்டாகக்காட்ட. | 83 |
| ஒருபுறங்காய்க்க ... ... | 37 |
| ஒருமரத்தில் இருவகைகாய்கா. | 7 |
| கக்குவான்வராதிருக்க. ... | 5 |
| கசப்பினிக்க. ... ... | 81 |
| கடிகாரம்நிற்க. ... ... | 86 |
| கடிதந்தறறிவர ... ... | 85 |
| கடிதத்தப்பஞ்சுட. ... | 87 |
| கடிதம்பிழங்க.. ... ... | 91 |
| கடித மெறியாதிருக்க. ... | 23 |
| கடிதம்மகர ... ... ... | 91 |
| கடிதாசிகட்குமெருகிட ... | 15 |
| கடித்தபல்லுதிர ... ... | 29 |
| கண்குருடுநீங்க ... ... | 59 |
| கண்ணாடிபுட்டியை வெட்ட... | 89 |
| கண்ணாடிமீதுபென்சலாலெழு | 43 |
| கண்ணாடிமேலெழுதுமிங்கி. | 26, 85 |
| கண்ணாடியிற்பென்சலாலெழு. | 86 |
| கண்ணாடியைப் பொடிசெய்ய. | 89 |
| கண்புகைபடலந்தீர ... ... | 29 |
| கண்மாறல்தீர ... ... | 58 |
| கத்திகளின்றுருபோக்க ... | 63 |
| கத்திமுதலியவைகட்கு துவை | 10 |
| கம்பளிச்சட்டை ... ... | 82 |
| கயற்றின்மேல் நடக்க. ... | 84 |
| கரக்கும்பா லுதிரமாக. ... | 88 |
| கரிபூச்சற ... ... ... | 36 |
| கருணைக்கிழங்குகாரல்மாற ... | 16 |
| கருமூலிகை. ... ... | 9 |
| கரைத்தசர்...லெடுக்க ... | 72 |
| கர்ப்பந்தரிக்க. ... | 14, 54 |
| கர்ப்போற்பத்திவித்தை. ... | 71 |
| களர்நிலமாற. ... ... | 71 |
| கறுப்பு அரக்குசெய்ய. ... | 84 |
| கறுப்பெழுத்துமறைய. ... | 75 |
| கற்கண்டுசெய்ய. ... ... | 20 |
| கற்களையுடைக்கும்விதம் ... | 10 |
| கற்சிலைபால்குடிக்க ... ... | 40 |
| கற்சிலையழுகிறதற்கு. ... | 40 |
| கற்பூரச்செடி. ... ... | 81 |
| கற்குறிசொல்ல. ... ... | 69 |
| கனவில்விந்துநஷ்டமற ... | 29 |
| கனவுகாணாதிருக்க ... ... | 29 |
| காகப்பொன் றொட்டும்பிசினி | 74 |
| வேறொருபிசினிசெய்ய ... | 75 |
| காகித எண்ணெமாற... ... | 32 |
| காக்கைகள்தியங்க ... ... | 6 |
| காசுமறைய... ... .... | 69 |
| காசுவிழிப்பு. ... ... | 61 |
| காச்சலொழிய. ... ... | 13 |
| காப்பர்பிளேட் பதிக்க ... | 66 |
| காப்பிங் இங்கிசெய்ய. ... | 26 |
| மற்றொருவிதஞ்செய்ய ... | 26 |
| இன்னுமொருவிதஞ்செய்ய. | 26 |
| காற்றில் விளக்கவியா திருக்க. | 92 |
| கிண்ணத்திலோசைகேட்க ... | 83 |
| கிரீஸணையில்தீபம் ஜ்வலிக்க ... | 65 |
| ஷை பர்னர் சுத்தமாக. ... | 65 |
| கிலிட்டுசெட்ட அழுக்கைப்போக் | 41 |
| கிளாசுருவிற்பித்தளையொட்ட. | 64 |
| மற்றொருவிதம் ... ... | 64 |
| கிளாஸ்புட்டி இதுகளைகத்திரிப் | 63 |
| மற்றொருவிதம் ... ... | 64 |
| இன்னொருவிதம் ... ... | 64 |
| கிரிக்கூண்டு. ... ... | 70 |
| கிறுக்கியயெழுத்துதெரிய ... | 64 |
| குங்குமஞ்செய்ய ... ... | 20 |
| குடியோட்ட. ... ... | 53 |
| குத்துவெட்டாறுதிருக்க ... | 57 |
| குருத்துப்புழுவற ... ... | 36 |
| குருவிக்கூச்சல் காண. ... | 77 |
| குலைப்புத்திர. ... ... | 57 |
| குழந்தைகளிளைத்தலுக்கு. ... | 13 |
| குழந்தைகள் பிணிக்கு ... | 13 |
| குளமுடையாதிருக்க. ... | 81 |
| குளத்தில்வைக்கவசியம் ... | 50 |
| குளிசங் குதிக்க ... ... | 92 |

| பெயர்கள். | பக்கம். |
|---|---|
| குறித்தீபக்கூட்டு ... ... | 79 |
| கெந்தகக்கிண்ணிசெய்ய ... | 19 |
| கெந்தகஞ்சுத்திசெய்ய ... | 19 |
| கேழ்வரகுமுளைக்க ... | 88 |
| கையில்நெருப்பெடுக்க ... | 22 |
| கையில் மழுவெடுக்க. ... | 23 |
| கொடியானற ... ... | 37 |
| கோழிமடிய ... ... | 35 |
| சண்டாளக்கரு ... ... | 9 |
| சத்துருகுடிகெட ... ... | 55 |
| சத்துருசெயம் ... | 52, 58 |
| சத்துரு ஸ்தம்பனம் ... | 58 |
| சத்துருதேய ... ... | 55 |
| சத்துருயாவுங்கெட ... | 56 |
| சரிகையிலழுக்கெடுக்க ... | 43 |
| சர்க்கரைசக்க ... ... | 29 |
| சர்க்கரைக்ஷீரபத்துசெய்ய ... | 20 |
| சர்ப்பத்தைக்கட்ட. ... | 80 |
| ஜர்மன்சில்வர்நகைகட்கு மெருகு | 40 |
| சர்வஜனவசியம் ... ... | 54 |
| சர்வதோஷந்தீர ... ... | 28 |
| சர்வபீடைநீங்க ... ... | 28 |
| சர்வலோக வசியம். ... | 56 |
| சர்வவசியம் ... ... | 56 |
| சர்வாஞ்சனம் ... ... | 62 |
| சலத்துள் ளிருப்பதைக் காண. | 17 |
| சலத்தொனி ... ... | 23 |
| சலபூதக் கண்ணாடி. | 16 |
| சலவாயுவின்வேகப்பரீட்சை... | 18 |
| சவலைபிள்ளைக்கு . ... | 14 |
| சாணைச்சக்கிரஞ்செய்ய ... | 21 |
| சாதாரணகறைமாற ... | 40 |
| சாமான்கட்குபூசு மெருகெண் | 36 |
| சாமான்கட்குவெள்ளிகில்ட்டி | 42 |
| சாயமெடுக்க ... ... | 81 |
| சாராய்புட்டிவெடிக்க ... | 38 |
| சாராயிறங்காதிருக்க ... | 80 |
| சாராயெறியாதிருக்க ... | 79 |
| சாவலைசாக ... ... | 62 |
| சித்தியுண்டாக ... | 60 |
| சிவப்பிங்கிலீசெய்ய... ... | 25 |
| சிவப்பு அரக்குசெய்ய ... | 34 |
| சீடைப்புழுக்கள்மடிய ... | 67 |
| சீலையுடன்சாயமிட ... | 46 |
| ஸ்ரீசூரணஞ்செய்ய ... | 18 |
| ஸ்ரீதேகஞ்சிறுக்க... ... | 53 |
| ஸ்ரீதேகந்தழைக்க ... | 54 |
| ஸ்ரீதேகம்பெருக்க ... | 53 |
| ஸ்ரீகள்நோயகல ... ... | 55 |
| சுக்கிலஸ்தம்பனநெய் ... | 52 |
| சுடுகைநீர்குளிர ... ... | 31 |
| சுத்தியாற்றட்டுவெடி ... | 81 |
| சுரமகல. ... ... | 28 |
| சுனையில்மாதளைமுளைக்க ... | 11 |
| சூதுவெல்ல ... ... | 22 |
| சூரியகிரகணத்தைப்பார்க்க ... | 17 |
| சூரியன்கிரணத்தால்நெருப்பெ | 16 |
| மற்றொருவிதம் ... | 16 |
| சூளைநொருங்க ... ... | 87 |
| செக்கெண்ணை வாராதிருக்க... | 80 |
| செடிகளையுலறச்செய்ய ... | 67 |
| செடிகள்புஷ்பங்கள்நிறமாற .. | 12 |
| செந்நிறத்தீபம் ... ... | 81 |
| செய்தொழில் ... ... | 47 |
| செல்லுசிதற ... ... | 33 |
| வேறொருவிதம் ... | 33 |
| செல்லுபிடிக்காதிருக்க ... | 9 |
| சொக்கட்டான்சூதுவெல்ல ... | 29 |
| சொக்குப்பொடி ... ... | 49 |
| சோடாவாட்டர்செய்ய ... | 19 |
| மற்றொருவித சோடாவாட் | 20 |
| சோடுபிரிவு ... ... | 53 |
| சோதியெழுத்து ... ... | 27 |
| சோர்கரிவேகாதிருக்க ... | 55 |
| தகரச்செடி ... ... | 81 |
| தட்டோடுகுலைய... ... | 62 |
| தண்ணீர்சிற்றட்டுநாதம் ... | 17 |
| தண்ணீரைப் பாணக்கமாக்குவ | 4 |
| தண்ணீர்நெய்யாக ... | 83 |
| தலைசுற்றிப்பேயாட ... | 62 |
| தலைநோயகற்ற ... ... | 82 |
| தலையிற்கல்லுடைக்க ... | 46 |
| தழைதழைக்க ... ... | 38 |
| தார்பூசும்விதம் ... ... | 26 |
| தானாய்ப்பேயாட... ... | 22 |
| திகைப்புண்டாக... ... | 56 |
| தித்திப்புமாதளைபுளிப்பாக | 8 |
| திருட்டைப்பிடிக்க ... ... | 30 |
| திருமகள்சேர ... ... | 51 |
| திணைமாற்ற ... ... | 38 |
| தீபஜலம் ... ... | 92 |
| தீபசுக்கிலஸ்தம்பனம் ... | 53 |

| பெயர்கள். | பக்கம். |
|---|---|
| திமைகள்நீங்க ... ... | 56 |
| துணிகள் நூல்கட்டு சிமைசாய | 44 |
| துணிசாயங்கெடாமற்றுவைக். | 34 |
| தெய்வமோகனம்... ... | 71 |
| தேகம்பெருக்க ... ... | 13 |
| தேங்காய் வெடிக்க ... | 86 |
| தேவஸ்தம்பனம் .. ... | 78 |
| தேவதைகளகல ... ... | 38 |
| தேவர்களைத்தரிசிக்க ... | 88 |
| தேவிசக்கிரம் ... ... | 78 |
| தேள்செனிக்க ... ... | 37 |
| தேள்விஷமிறங்க .. ... | 14 |
| தோல்கட்டுப்பூசும்வார்னிஷ்... | 35 |
| நகைகட்கு வெள்ளிகிலிட்டிட. | 41 |
| நரைமயிர்கப்பு ... ... | 30 |
| நரைமாற ... | 30, 55 |
| நாடிபோட்டங்காண ... | 76 |
| நாணயமுருக ... ... | 86 |
| நாட்டுசோப்புசெய்ய | 27 |
| நாய்க்குலையாதிருக்க | 24 |
| நாள்நான்குபதினொரறையில் 51. | 12 |
| ஷை அடைக்க ... | 12 |
| ஷை சக்கிரத்தடைவு | 12 |
| நாவடக்கம் ... | 27 |
| நித்திரையற்றிருக்க. ... | 30 |
| நீரிலண்டவிநோதம் ... | 23 |
| நீரில்மிதக்கும்லோகம் ... | 71 |
| நீரிற்றீபமெறிய ... ... | 87 |
| நீரைத்தேடமுட்டை ... | 27 |
| நீரைப்பாலாக்க ... ... | 80 |
| நீரொட்டாதிருக்க ... | 61 |
| நீர்க்குமிழிபந்து ... ... | 85 |
| நீர்க்குமிழிவிநோதம் ... | 85 |
| நீர்மட்டங்காண ... ... | 84 |
| நீர்மேல்நடக்க ... ... | 59 |
| நீர்மேல்மிதக்க ... ... | 62 |
| நீல அரக்குசெய்ய ... | 34 |
| நீல இங்கிசெய்ய ... ... | 25 |
| நீல எழுத்துமறைய ... | 75 |
| நெகிழுமகுணமற .. ... | 36 |
| நெய்வெண்ணெயாக ... | 86 |
| நெருப்பில்நடக்க .. ... | 22 |
| நெருப்பின்றி வைக்கோலெரிய | 6 |
| நெருப்புண்டாக்கும்விதம் ... | 15 |
| நெருப்புமிதிக்க ... ... | 71 |
| நெருப்பைவாயிலெடுப்பது ... | 5 |

| பெயர்கள். | பக்கம் |
|---|---|
| நெல்லிக்காய்துவரல்மாற ... | 16 |
| நேத்திரப்பரீட்சை ... | 69 |
| நோய்பசாசுதீர ... ... | 58 |
| பகலில்நக்ஷத்திரங்களைப்பார்ப். | 16 |
| பக்கம்பூசுவசியம்... ... | 52 |
| பசாசுபூதமகல .. ... | 58 |
| பசியற்றிருப்பதற்கு ... | 4 |
| பச்சான்பட ... ... | 26 |
| பசியாதிருக்க ... ... | 52 |
| மற்றொருவிதம் .. | 34 |
| பச்சை இங்கிசெய்ய ... | 25 |
| பச்சைப்பால்கட்டிவிட ... | 24 |
| பச்சை எழுத்துமறைய ... | 70 |
| படங்கள் அழுக்கைப் போக்க. | 41 |
| படைமுறியக்கடகம் ... | 49 |
| பட்டவாயுதமழுங்க ... | 57 |
| பட்டாடை எண்ணெய்ச்சிக்கலற. | 39 |
| பட்டாணியந்தரஞ்சேக .. | 78 |
| பட்டுத்தீபமெரிய .. | 87 |
| பட்டுத்துணியிற் கறையெடுக்க. | 39 |
| பயிர்கள்செழிக்க .. .. | 31 |
| பரிசரோமமறிய .. ... | 85 |
| பந்தமெறியக்கையேந்த ... | 79 |
| பலகோடிதீபவித்தை | 3 |
| பலநிறகுங்குமஞ்செய்ய ... | 19 |
| பலநோயகல .. ... | 55 |
| பலவர்ணங்காட்ட ... | 92 |
| பலவழக்குகள்வெல்ல ... | 58 |
| பழங்கள்மெத்தவுமினிக்க ... | 8 |
| பனிக்கட்டிசெய்ய ... | 21 |
| பன்றியைக்குத்த .. ... | 22 |
| பாகற்காய்கசப்பகல .. | 15 |
| பாஷைச்சிவன்கள் ... | 47 |
| பாஷைமூலிகைகள் ... | 47 |
| பாஷையிலக்கணம் .. | 47 |
| பாம்புகள்சாக .. ... | 5 |
| பாம்புக்குடம் ... ... | 72 |
| பாம்பொடுங்க ... ... | 70 |
| பாம்புவிஷமீள ... ... | 89 |
| பாலானதுதயிராக | 87 |
| பாலைச்சர்க்கரையாக்கும்விதம் | 41 |
| பாலைத்தண்ணீராக்குவது .. | 4 |
| பால்முட்டையாக ... | 33 |
| பித்தளைச்சாமான் கண்ணாடியி | 88 |
| பித்தளைப்பாத்திரங்களைச்சுத்தி. | 32 |
| மற்றொருவிதம் ... | 32 |

| பெயர்கள். | பக்கம். |
|---|---|
| இன்னொருவிதம் | 32 |
| பிரசவிக்க | 28 |
| பிரதிபிம்பபேதம் | 69 |
| பிரதிபிம்பமறைய | 69 |
| பிரதிபிம்பமச்சிட | 66 |
| பிரம்புச்சாட்டணம் | 44 |
| பிரியாயிடு | 48 |
| பிரைகணக்கெடுக்க | 88 |
| பிணிசூனியமகல | 10 |
| பிள்ளைகள்கரைய | 28 |
| புகைவசியம் | 50 |
| புகைமோதிரம் | 77 |
| புட்டிநீரிற்புழுவாக | 33 |
| புட்டியிற்கற்சுழல | 81 |
| புட்பக்கிளைபதனம் | 80 |
| புணரப்பொடிவசியம் | 60 |
| புணரவசியம் | 59 |
| [illegible] | 54 |
| புதுகத்தி துருப்பிடிக்காதிருக்க. | 63 |
| புத்தகங்கட்குக் கிலிட்டுபோட. | 41 |
| புருடர்தேகந்தழைக்க | 59 |
| புரைகுத்துமுபாயம் | 26 |
| புளிப்புமாதளைதித்திப்பாக | 8 |
| பூசணையிற்கதிரிமுளைக்க | 11 |
| பூதஸ்தம்பனம் | 75 |
| பூனையிற்றீப்பொரிபட | 91 |
| பெருஞ்சப்தவோசை | 78 |
| பெரும்பாடுதீர | 13 |
| பேய்பிசாசோட | 9 |
| பேய்விலக | 56 |
| பேன்மாள | 71 |
| பைத்தியம்விட | 13 |
| பொய்முட்டைப்பரக்க | 23 |
| போர்வெல்ல | 52 |
| மகுடிகுழைமடைக்க | 21 |
| மச்சக்கல்சித்து | 14 |
| மஞ்சளிற்பூசுவசியம் | 59 |
| மஞ்சள் இங்கிசெய்ய | 25 |
| மஞ்சள் ஸ்ரீசூரணஞ்செய்ய | 16 |
| மஞ்சள்தீபம் | 91 |
| மணலை இனிப்பாகத்தின்பது. | 4 |
| மணியிலோசைகேட்க | 77 |
| மண்ணுப்புச் செய்யும்விதம் | 9 |
| மண்[illegible]ண்டங்களிற் புழுவுமடி | 15 |
| மண்பாண்டச் சில்லி யடைய | 9 |
| மதில்மரம்பட | 33 |

| பெயர்கள் | |
|---|---|
| மரங்களுக்குப்பூசும் வார்னிஷ். | 35 |
| மற்றொருவார்னிஷ் | 35 |
| வேறொருவார்னிஷ் | 35 |
| மரங்களுலர | 45 |
| மரச்சாமான்கட்குவர்ணங்கொ | 65 |
| மரந்தந்தமாக | 79 |
| மருந்திடு | 51 |
| மலநீங்க | 58 |
| மலர்களின்வர்ணமாற | 7 |
| மறைப்புமை | 22 |
| மறைவிங்கிசெய்ய | 92 |
| மாங்கொட்டைமுளைக்க | 72 |
| மாதளஞ்செடிவிரத்தியாக | 8 |
| மாம்பழங்கள் நாட்படவிருக்க. | 6 |
| மாம்பழங்கள்விரத்தியாக | 11 |
| மார்பிஸ்கிலிட்டு | 79 |
| மீன்களையடுக்கவர | 30 |
| மீன்கள்மிகுந்திட | 88 |
| மீன்படாதிருக்க | 30 |
| மீன்வலையிற்பட | 31 |
| முகம்பூசுவசியம் | 50 |
| முகவசியத்துக்கு | 13 |
| முட்டைகூத்தாட | 33 |
| முட்டையின்மேலெழுத | 63 |
| மும்மலக்கரு | 61 |
| முயல்களோட | 57 |
| முருங்கைக்காய்புழுவாக | 87 |
| மூலமந்திரம் | 48 |
| மூன்றுலோகவசியம் | 49 |
| மெழுகைச்சுத்திசெய்ய | 67 |
| மேற்பூசுவசியம் | 51 |
| மோகினி மெறிப்பதைவிலக்க | 5 |
| மோகினியகல | 62 |
| மோடிவைக்க | 10 |
| மோதிரமுடைய | 45 |
| மோரானதுதயிராக | 87 |
| ரூபாயநகராதிருக்க | 4 |
| ரோசாப்பூமஞ்சளாக | 80 |
| லிகிதப்பதிப்பு | 61 |
| லோகவசியம் | 48 |
| வசிகரமை | 49 |
| வசியக்காப்பு | 28 |
| வசியச்சந்தனம் | 48 |
| வசியத்திலர்தம் | 82 |
| வசியப்புடவை | 51 |
| வசியமோதிரம் | 29 |

| பெயர்கள். | பக்கம். |
|---|---|
| வசியவீடு ... ... | 51 |
| வச்சிரமென்றுமினாதியிருக்க ... | 65 |
| வடக்குத்தெற்குக்காட்ட ... | 84 |
| வர்ணம்பூசும்வகை ... | 65 |
| வர்த்திரோக்குகட்டிவர்ணமேற். | 15 |
| வழக்குவெல்ல ... ... | 52 |
| வாடைவகை ... ... | 28 |
| வாணப்பாம்பாட... ... | 83 |
| வாத்துநீந்தியோட ... | 84 |
| வாயில்நெருப்புக்கக்கும்வித்... | 3 |
| வாயில்நெருப்பெறிக்க ... | 80 |
| வாழைப்பழமறுபட்டிருக்க ... | 82 |
| வானவில்தோன்ற ... | 84 |
| விசித்திரகாகிதப்படம் ... | 89 |
| விசேஷம் வெண்ணெயெடுக் ... | 26 |
| விஷக்கடிமீள ... ... | 5 |
| விஷமறநசியம் ... ... | 57 |
| விஷமீள ... | 54, 57 |
| விரற்புரட்டு ... ... | 61 |
| விளக்கேற்றிக்கூட ... | 52 |
| விளைவுகெட ... ... | 36 |
| விளைவுபலிக்க ... ... | •32 |
| விற்காவுடைமைவிற்க ... | 27 |
| வீடுகளிற்சுண்ணாம்படிக்க ... | 38 |
| வீட்டிற்புதைக்கவசியம். ... | 50 |
| வெட்டுறுதிருக்க... ... | 49 |
| வெண்கலத்தோசைகேட்க ... | 77 |
| வெந்நீர்தேத்தண்ணீராக ... | 83 |
| வெள்ளரிக்காய்கசப்பகல ... | 16 |
| வெள்ளரிச்செடி நன்றாய்பலித | 8 |
| வெள்ளிச்செடிமுளைய ... | 75 |
| வெள்ளிநகைகள்சுத்தமாக ... | 44 |
| வெள்ளை இங்கிசெய்ய ... | 25 |
| வெள்ளைச்செம்புசெய்ய ... | 31 |
| வேறுவிதஞ்செய்ய ... | 32 |
| மற்றொருவிதஞ்செய்ய ... | 32 |
| வேப்பெண்ணை நல்லெண்ணை | 3 |
| வேர்க்கடலைக்கசக்க ... | 30 |
| வேறு - கண்ணாடியிங்கி ... | 90 |
| வேறு - டிராயிங்கிங்கி ... | 90 |
| வேறு - பளபளப்பிங்கி ... | 90 |
| இலக்கக்கக்ஷ வியந்திர படம் - | 1 |


முதற்பாகம் முன்னோந்நூரின்
பொருளகராதி - முற்றிற்று.

---


## விளம்பரம்.

☞ ஷை செ. சி. தே. பண்டிதரவர்களாலியற்றிய நூல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அற்பலவற்புத ஜாலவிநோதத்திரட்டு, 1 - ம் பாகம் விலை ரூபாய் | | 1 | 0 | 0 |
| ஷை ஷை 2 - ம் பாகம் | ,, | 1 | 0 | 0 |
| வைத்தியாநந்தலஹரி - ந, 32 - படலம் அடங்கியது. | ,, | 1 | 0 | 0 |
| சமுதாயகுண சத்தகராதி, வாதவைத்தியத்துதவியது. | ,, | 0 | 4 | 0 |
| சகாதேவர் சோதிடநாடி, துவாதசபாகமுள்ளது. | ,, | 0 | 4 | 0 |
| சுருக்குபஞ்சபட்சி, ஆரூடகாண்டம். | ,, | 0 | 2 | 0 |
| வாக்திபேதிதிவாண சிகிற்சாசாரநிதி. | ,, | 0 | 2 | 0 |
| புதையெடுப்புக்குறி நிதிநிக்ஷேபநூல். | ,, | 0 | 2 | 0 |

ஈதொவ்வொன்றிற்குந் தபாற்சார்ஜ் ரூபாய்க் கணு-1, அணுவிற்கு ஸ்ப-6.

இவை வேண்டுவோர் சென்னை-சூளை அஷ்டபுஜந்தெருவு:23-ம் நம்பர் இருகத்தில் ஷை பண்டிதரிடம், அல்லது எமதிடம், மூட்டுப்பூச்சிகள் நசியு மியந்திரமுதலியது கேரில் அல்லது தபால்மூலமாய் வாங்கிக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
சிறுமணலூர் - முனிசாமிமுதலியார்.
பிரம்பூர் போஸ்ட் மதராஸ்

# முகவுரை.

இந்நூலைக்கண் இதுகாறும் காணற்கரிய கலிகாலமாராட்டமென்னும் ஓர்புதியநூலாகிய கண்கட்டுவிநோதவித்தையை ஒருருவாய்த் திரட்டியதில், அது யாவருக்கும் வெகுமனோரம்மியத்தைத் தருமாதலால், இதையெவ்வொருவரும் கையாளப் பாராட்டுவார்களெனக்கருதி, இதை யச்சியற்றி வெளியிற் பிரசுரப்படுத்தலாயினன். இதில் இதற்குமுன் சிலர் வெளிவிடுத்த நூலைப்பார்க்கினும் அதியுன்னதவிஷயாக்ஷரங்களை எளிதிற்செய்துமுடிக்க விவேகபஞ்சங்கள் யாவருமுபயோகிப்பதில் மிக நன்மைவிளைக்கும் ஆயினும், இந்நூலோ அநந்த வித்தைகளடங்கிய சப்தார்த்த பதார்த்த விஷயார்த்தங்களைச் சாதுரியமா யமைத்து சாங்கோபாங்கமா யிருப்பதினும், தமிழ் மலையாளம், இங்கிலிஷ், பிரெஞ்சு, சைனமுதலிய தேசாதேச பாஷாந்தரங்களிலிருந்து ஒன்றுசேர்த்து சமஸ்தமதஸ்தருங் கொண்டாடத்தக்க கண்காட்சியைப்புகட்டி, செழுமணவை - சித்திரகவி தேவேந்திர நாதபண்டிதர் என்பவரால் இயற்றியதை, கருவாளிகள் முற்றுமுணர்ந்து கையாண்டனுபவிக்க ஏதோர் கருவியாகின்றமையால், இதை யாவரும் பரிபாலித்துவருவார்களென இங்கு பிரசுரப்படுத்தலாயிற்று.

மேலும் இந்நூலில் கண்கட்டுவித்தைகள் கண்கெட்டவித்தைகள், கைமாற்றுவித்தைகள், அஸ்தலாவித்தைகள், செப்பிடுவித்தைகள், சிலம்பவித்தைகள், எக்ஷணிவித்தைகள், அவதானவித்தைகள், அஷ்டகர்மவித்தைகள், சாதனவித்தைகள்முதலிய பற்பல வற்புதங்களைத் தொன்றுதொட்டு அமைக்கப்பட்டிருக்கின்றது.

பின்னுள்ள **500** வித்தையும் இரண்டாம்பாகத்தில் வெளியிடப்படும்.

இப்படிக்கு,
சிறுமணவூர் முனிசாமிமுதலியார்
பெரம்பூர் போஸ்டு மதராஸ்

MUNUSAWMY MUDALIAR.

PERAMBUR POST MADRAS.

இவ்விடத்தில், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ்பாடசாலை புஸ்தகம்,
ஆயுள்வேத அவுஷதம், ரப்பர் சீல்முத்திரை, ஜர்மன்ஸில்வர்
நகைகளும், விலாசமாய் விற்கப்படும்.

உ

சிவராமஜெயம்.

# கலியுகமாராட்டமென்னும்

# கண்கட்டுவித்தைகள்.

## 1. பலகோடி தீபவித்தை.

சுவர் முள்ளாங்கியென்னும் மூலிகையை இடித்து சாறுபிழிந்து அதில் வெள்ளை அபிரேக்கை சிறுபொடிகளாகக் கத்தரித்துப்போட்டு ஒருஇரவு முழுதும் ஊறவைத்து காலையில் யெடுத்து தண்ணீர்விட்டு மூன்றுதிரம் அலம்பி மறுபடியும் முன்சாற்றை விட்டுப்பிசைந்து தண்ணீர்விட்டு அலம்பியெடுக்க மிகவும் வெளுத்து சுத்தமாயிருக்கும் இவ்விதமாய் சுத்திசெய்த அபிரேக்குப்பொடியை சுண்ணாம்பு நீரிற் கலந்து ஜலம்விட்டுக் கறைத்து சுவருக்கு வெள்ளையடிப்பதுபோல் வீடு, கூடம், முதலிய சுவர்களில் பூசி உலர்ந்தபின் பிரகாசமான இரண்டொரு விளக்குகள் அதாவது மேம் அல்லது வால்சேட்டு முதலிய கண்ணாடி விளக்குகளை நடுவில் மாட்டி விட்டால் அந்த வீட்டிற்குள் யார்வந்தபோதிலும் வழிதெரியாமல் திகைப்பார்கள். எந்தப்புறம் பார்த்தபோதிலும் கோடாகோடி விளக்குகளாகத்தெரியும் இந்த வித்தையை கச்சேரி, காலட்சேபம் முதலிய சுபதினங்களிற் செய்தால் வெகு ஜென ஆச்சரியமாயிருக்கும்.

## 2-வாயில் நெருப்பு கக்கும்வித்தை

பொட்டுலுப்பைக் கொஞ்சம் நீரிற்போட்டு அது நன்றாய்க் கரைந்தபின் இலவம்பஞ்சை அதிற்போட்டு நனைத்து நனைத்து அந்நீரை யெல்லாம் அதிலூட்டி உலர்த்தியபின் அதிற்கொஞ்சம் எடுத்துக் கந்தைத்துணியிற் சுருட்டி வாயிற்போட்டு ஊத துணியுமெரியும், புகையுங் கிளம்பும், வாயுஞ் சுடாது.

## 3. வேப்பெண்ணை நல்லெண்ணையாக்கும் வித்தை

இவ்வுலகின்கண் வேப்பெண்ணையானது மெத்தவும் கசப்பாகையால், அக்கசப்பு மாறி நல்லெண்ணையைப்போலாவதற்கு அந்த வேப்பெண்ணையைக்காச்சி அதிற்கொஞ்சம் குன்றிமணியிலையை அரைத்து அடைதட்டிப் போட்டு அது நன்றாய்க் காய்ந்து முறியும் பதத்தில் அடை விழுதை எடுத்தெறிந்துவிட்டு அதில்எவ்வித பண்டம் பலகாரங்கள் சுட்டுத்தின்றாலும் உருசியாகவேயிருக்கும் முன்னுள்ள கசப்பிராது.

### 4. மணலை இனிப்பாகத்தின்பது.

முற்கூறிய குன்றிமணியிலையில் கொஞ்சம் பறித்து வாயில் மென்றாலுஞ்சரி, அல்லது ஒருபிடி மணலுக்குள் கொஞ்சம் வைத்தாலுஞ்சரி தானே மெல்ல, அல்லது வேறொருவர் வாயிற்போட்டாலும் மெல்ல இனிப்பாய் சர்க்கரைப்போலிருக்கும்.பல்லசையாது இந்த வெத்திலைபோர்கள் எவ்வளவு தின்றாலும் தின்னலாம்.

### 5. தண்ணீரை பாணக்கமாக்குவது.

முன்மணலைமென்று தின்னவாயில் சும்மாய் வெறும் நல்ல தண்ணீரைக் குடித்தாலுஞ்சரி, அல்லது வேறு இலையைத்தின்று தண்ணீர்குடித்தாலுஞ்சரி அதுஇனிப்பாம் பாணக்கம்போலிருக்கும். வாய்தெகிட்டாது அது வாயில் நெடுநேரம் இனிப்பாகவேயிருக்கும்

### 6. ரூபாய் நகராதிருக்க.

தரையில் கொஞ்சம் கற்பூரத்தைக்கொளுத்தி அதின்பேரில கொஞ்சம் படிகாரத்தூளைத்தூவி அது வெந்ததும் வேகாததுமாயிருக்கையில் அதின்மேல் ஒரு ரூபாயை வைத்து அழுத்திவிடவும் அது கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும். அந்த ரூபாயை யாவராகிலுஞ்சரி தன் விரலினால் தள்ள அது அசையாது அது அசையவேண்டுமாகில் கொஞ்சம் தண்ணீரைவிடவும் உடனே கையோடே வந்துவிடும் ரூபாய்க்குப்பதிலாக அல்லது அணாவையும் வைக்கலாம்.

### 7. பசியற்றிருப்பதற்கு.

நாயுருவியிலையை ஆய்ந்து அதைப் பசும்பாலிலரைத்துக் குடித்துவிடவும் அவருக்கு எட்டுநாள் வரையிற் பசியில்லாதிருக்கும் குடித்தபோதிலும் வீண்காலம் போக்காது யோகம் அல்லது ஞானநிலையில் நின்று சாதிக்கவும் நல்லது அதின்பிறகு பசியெடுக்க ஒருபிடிக்கு சாப்பிடவும்

### 8. பாலை தண்ணீராக்குவது.

பசும்பால் அல்லது வேறுவித பாலையாகிலுஞ் சரி அதில் தாமரையின் விதை மணியையிடித்துப் பொடியாக்கி அந்தப்பாலினிற் தூவிவிடவும் அப்பாலெல்லாம் தண்ணீராய்விடும் அதிலுங்கொஞ்சமாய்த் தூவிப்பார்க்க பால்வேறு தண்ணீர் வேறாய்ப் பிரிந்துவிடும்

### 9. எவ்வளவேனும் தின்பதற்கு

ஒரு மானிடன் கழுதைக்குதிரையின் மூக்கை தனதுகைக்குட்டையின் ஒருமூலையில் கெட்டியாய் முடிந்து வைத்துக்கொண்டு அவனுக்குவேண்டிய சாதம்போட்டாலும் அதைச் சாப்பிட்டபிறகு தன் கைக்குட்டையின் முடியை முகர, அச்சாதமெல்லாம் பசியாய் மறுபடியும் பசியாயிருக்கும் இப்படி எத்தனை விசை சாதம் பரிமாறினாலும் முகர முகர அவ்வளவு சாதம் புசிப்பான்

## 10. நெருப்பை வாயிலெடுப்பது.

யாதாமொருவன் நெருப்பினை வாயில் மெல்லவேண்டுமாகில் அவன் நவாச்சாரமும் அக்கிராகாரமும் இரண்டும் ஒன்றாயரைத்து வாய் உதட்டிற் பூச அல்லது வாயிற் குதப்பி நெருப்பையெடுக்க அல்லது வாயில் மெல்ல வாய் சுடவே சுடாது.

## 11-விஷக்கடி மீள.

வெள்ளைநிறமுள்ள கம்பளி சகலாத்தைக் கத்தரித்துப் பஞ்சுபோற் பண்ணி அதிற்காசிடை யொன்றுயெடுத்து நல்லவெல்லத்தினுள் வைத்து மூடி (நசிமசி) என்று ௱அ உருசெபித்து நாய்க்கடியுண்டவன் வாயிற்போட்டுவிட்டு மற்ற வெல்லத்தை சிறுபிள்ளைகட்குக் கொடுத்துவிடவும் அது ஒரே வேளையில் விடதந்தீரும்.

## 12. பாம்புகள் சாக.

பாம்பானது உயிர்விடவேண்டுமாயின் அதின் வாயில்படிகாரத்தூளைப் போட அது உடனே யிறந்துவிடும். அப்பாம்பை அடித்து நசுக்கி யெறிந்து விட்டாலும் கொளுத்தினாலன்றி உயிர்போகமாட்டாது. ஈதன்றி, பாம்பின் படத்தின் சூலத்தினடியில் ஒரு துடைப்பச் சுப்பலாற்குத்த உடனே அப்பாம்பு கீழேவிழுந்து இறந்துவிடும்.

## 13-எலிகள் விலக.

ஒரு எலியைப்பிடித்து அதின்மேல் மினிமினிப் பூச்சியை யரைத்து முதுகில் பூசிவிட்டுவிடவும் அவ்வெலியானது சஞ்சரிக்குமிடத்தில்இதைக் கண்ட மற்ற எலிகளெல்லாம் பயந்து கிலேகுலைந்து கூட்டோடே அயலிடக்குடியேறிப்போய்விடும்.

## 14-மோகினிமெறிப்பட்டதை விலக்க

ஈதா ஒருவனை மோகினிமெறித்து வருவது விலகவேண்டில், அவனது இடதுள்ளங்கையில் விளக்கெண்ணெயானது பனைவிடையளவா யதைத் தடவி இராத்திரியில் படுத்துக்கொண்டிருக்கவும் அம்மோகினியானது அவனருகில்வாராது நெறிக்காது அகன்றுவிடும் இப்படியேஒருபக்ஷம் சடு-நாள் வரையிற் தடவிவரவும் நன்மை.

## 15-கக்குவான் வராதிருக்க.

இதற்கியந்திரமானது நெடுக்கில் ச-கோடும், குறுக்கில் அ-கோடும்கீறிப்பாரிக்கவும். உடு-அறைகளிருப்பதற்கு நடுவீற்றறை கடைசியில் ஓறறை அதிகமாய்க்கீறி ருடு-அறைகளிலும் (௫) இந்த எழுத்தொன்றையே யெழுதி பனையோலையில் அல்லது செப்புத்தகட்டில் வரைந்து அதைதூபதீப நைவேத்தியத்துடன் பூசித்துக் குளிசமாடி ஒவ்வொருகுழந்தைகட்கும் கக்குவான் என்கிற இருமல் ஒட்டுமாமொட்டி தொத்துவியாதி வருவதற்குமுன் இதை கட்டிவிடவும் சொக்காய கக்குவான் வராது

## 16-காக்கைகள் தியங்க.

தாளகம் அல்லது அரிதாரம் அதை வெண்ணெயும் நெய்யுஞ் சேர்த்த ரைத்து உடனே சோற்றிற்கலந்து காகங்கள் முன் வைக்கவும் அதைத்தின்ற காகமானது மயங்கி அசையாது அங்ஙனே நின்றுவிடும். அதுதெளிய வேண்டுமாகின் அதின்மேல் தண்ணீரைத்தெளிக்கவும் அம்மயக்கந்தெளிந்து பறந்தோடிப்போய்விடும்.

## 17-உரோமமுதிர.

மனுஷர்களின் தலை முதலிய வுடம்பிலுள்ள உரோமங்களைப்போக்க வேண்டுமாயின் தாளகமும் கற்சுண்ணாம்பும்கலந்தரைத்து இராத்திரி உதிர வேண்டிய உரோமங்களின் மீது தடவிவிட்டு காலையில் வெந்நீர்விட்டுக்கழுவவும் இதைப்பூனைவரையில் பொட்டாயுதிர்ந்துவிடும்.

## 18. மாம்பழங்களை நாட்படவிருக்க.

மாம்பழங்களை யலம்பி ஈரமில்லாமற் றுடைத்து வாயகன்ற புட்டியிற்போட்டு அதினிறைய நல்ல அப்பட்டமாகிய தேனைவார்த்து காற்றுப்புகவொட்டாமல் வைத்துக்கொண்டிருக்குமிடத்தில் அது எத்தனைநாளிருந்தாலும் கெட்டுப்போகாமலேயிருக்கும். ஈதன்றி, மாதளம்பழ முதலானதும் இதைப்போலவே செய்தால் வெகுநாள்வரைக்கும் வைத்துக்கொண்டிருக்கலாம்.

## 19-இந்திரியமிருக.

சரிஸ்மக்கியின் வேரை சிறு சிறு துண்டுகளாய் நறுக்கெடுத்து அதில் ஒருதுண்டை தன்னிடப்பினிடமாய் அரைஞாண்கயிற்றில் வலப்புறங்கட்டிக்கொண்டு போகிக்கவும் இந்திரியமானது இறுகிகட்டிவிடும் வேடு. வேரினை இடப்புறந்தள்ளினாலுஞ்சரி, அல்லது, அதை அவிழ்த்துவிட்டாலுஞ்சரி உடனே இந்திரியங் கலிதமாய்விடும்.

## 20-நெருப்பின்றிவைக்கோலெரிய.

நீரிலுள்ள ஆகாசத்தாமரை ஆதாவது நீர்மேல் நெருப்பையுலர்த்தி வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு அதிற்கொஞ்சம் வாயிற்போட்டு மென்று தாடையிலடக்கிக் காற்றுவாடை மார்க்கமாய் வைக்கோலின்மேல் ஊத அவ்வைக்கோலெல்லாம் திகிலென்று பற்றி யெறியும்

## 21-ஆட்டுக்கூட்டம அசையாதிருக்க.

கள்ளிச்செடியின் வடக்குவேரை வெட்டிநட்டி வெள்ளாட்டு மூத்திரத்திலரைத்து அதை தனது வலதுகாலிற்பூசி ஆட்டுமந்தையைச் சுற்றிவந்து அதுகளைக் கடலென்றுபோய்விடவும் ஆடுமாடுகளெல்லாம் அசையாது அப்படியே குண்ணியிருக்கும். அதுகள்சினம்பாது. அதற்குமாந்து சுராமீன்தலையையரைத்து அவன்காலில் அல்லது செருப்பில் தடவி இடப்பாரிசமாய்ச் சுற்றிவந்து எழுந்துபோவென்றால் ஆடுமாட்டுக்கிடை கிளம்பும்.

## 22 அதிகசாதமுண்ணுவது.

ஒருவன் அதிக சாதமுண்ணவேண்டுமாகில் குப்பைமேனியின்வேர் சிறுகண்பூளைவேர் இரண்டும் தன் வாயில்போட்டு மென்று தாடையிலடக்கி தண்ணீராக்குடித்துப் பிறகு சாதத்தையுண்ணவும் அதிகமாய்ப் புசித்திடுவன் அவனுக்கப்போது பசியுமிருக்கியாயிருக்கும்.

## 23. எழுத்துகள்மறைய.

எவவிதபாஷைகளிலாவதுஎவ்வித கடிதத்தின் மேலெழுதியஎழுத்துகளிற்படியும்படி படிகாரத்தைத் தூள்செய்து அத்தூளிற் கொஞ்சமெடுத்து முன்னெழுதிய எழுத்துகளின்மேற் றூவியபின், அதை ஐந்தாறுநாள் பொருத்துப்பார்க்க வேறுங்கடிதாசியா யிருக்குமேதவிர-முன்னெழுதிய லிபிகளொன்றுமதிலிராது.

## 24-ஈக்கள் ஓடிவிட.

சுரிஸ்டக்கி யென்பது ஓர்வித பூண்டு அதின் பூவினில் ஈகளானது மொய்க்காது-அப்பூவை யாதாமொருவர் வீட்டில் பூமியிற்புதைத்தாகிலும், அல்லது போட்டாகிலும் வைக்கவும், அதைக்கண்ட ஈகளெல்லாம் விலகிசெடுந்தூரம் ஓடிப்போய்விடும்.

## 25-அவித்த விளக்கெறிய.

ஆகாசத்தாமரையை யுலர்த்தி பொடிசெய்து வைத்துக்கொண்டு ஒரு அகலில் எவ்வித எண்ணெயையாவது வார்த்து விளக்கேற்றி அதை மறுபடியும் அவித்து உடனே முன்பொடிசெய்ததூளை அதின்மேற்றூவவும் அவித்துபோன விளக்கு குபீலென்று பற்றியெறியும்.

## 26. மலர்களின் வர்ணமாற.

சிவந்நிறமுள்ள ரோஜாபுஷ்பத்துக்கு கெந்தகப்புகையைக் காட்டின மாத்திரத்தில் வெள்ளைமாறிப்போய்விடும். பின்பு வெல்லத்தினுடைய புகையை அதற்குக் காட்டினமாத்திரத்தில் முன்னுள்ள சிவப்புநிறம் வந்துவிடும். அதன்றி, குங்குமப்பூவைத் தண்ணீர்விட்டரைத்து வெள்ளைநிறமுள்ள புஷ்பத்தின்மீது தெளித்தமாத்திரத்தில் அது மஞ்சள்நிறமாய்விடும். அதனையே சிவப்புநிறமுள்ள புஷ்பத்தின்மீது தெளித்தவுடன் பொன்னிறமாகவிருக்கும்.

## 27. ஒருமரத்தில இருவகை காய்காய்க்க.

வெள்ளையுஞ் சிவப்புமுள்ள இரண்டு ஜாதி செடிகளின் கொம்புகளையாகிலும், அல்லது இரண்டு ஜாதி வாழைச்செடிகளையாகிலும், வேறெவ்வித இரண்டு ஜாதி மாஞ்செடிகளையாகிலும் சமனாக அறுத்து இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து மெழுகுச்சிலைசுற்றி நன்றாக ஒட்டவைத்துப் பொருத்தக் கட்டிநட்டுவைக்குமிடத்தில் ஒரு செடியில் இரண்டுவிதமாகிய கனிகளையுண்டாகும்.

### 28. தித்திப்பு மாதளை புளிப்பாக.

தித்திப்பு மாதளஞ்செடியை நட்டு ஒரு வருடத்திற்குப் பின்பு புளித்த தண்ணீர் அல்லது புளித்தகாடி நாளொன்றுக்குக் கால் படிவிழுக்காடு ஒரு மாதகாலம் வார்த்துக்கொண்டு வருமிடத்தில் அதில் தித்திப்புமாறி புளிப்புள்ள பழமாகும்.

### 29. எலுமிச்சம்பழங் கெடாதிருக்க.

ஒரு மண்பாண்டத்தில் கொஞ்சம் ஈரமாயிருக்கும் மண்ணைப்போட்டு இந்த மண்ணிற்குள் இஷ்டமானது எத்தனையோ அத்தனை எலுமிச்சம்பழங்களை அடுக்கிவைத்து அப்பாண்டத்தின் வாய்க்குச் சரியான மூடியைப் போட்டு காற்று நுழையாதிருக்கும்படி களிமண்ணினால் சீல்செய்துவைக்குமிடத்தில் எத்தனைநாளிருந்தபோதிலும் அது நிறமாறாதிருக்கும்.

### 30. பழங்கள்மெத்தவுமினிக்க.

நடுவதற்காக வைத்துக்கொண்டிருக்கும் எந்த பழங்களின் விதைகளையாகிலும் ஒருநாள்கட்டித் தேனினிடத்தில் ஊறவைத்திருந்து மறுநாள் நட்டு நல்லஜலம் வார்த்துக்கொண்டுவருவதில் அந்தச்செடியின் கனி முன்னிருந்ததற்காகிலும் அதிக ருசியுள்ளதாகவேயிருக்கும்.

### 31. மாதளஞ்செடி விர்த்தியாக.

தித்திப்புமாதளஞ்செடிக்கு ஆறுமாதம்வரைக்கும் தினமொன்றுக்கு ஒரு ஆட்டின் இரத்தத்தை வார்த்துக்கொண்டு வருமிடத்தில் அக்கனிகள் பெருத்ததாகவும், அதிகதித்திப்புள்ளதாகவும் விசேஷ பலனைதருவதாகவும் விளையும்.

### 32. ஒட்டுதிராக்ஷைமூன்றுவர்ணங்காய்க்க.

கறுப்புத் திராக்ஷைக்கொடியொன்று, வெள்ளைத் திராக்ஷைக்கொடியொன்று இவ்விரண்டையுங் கொஞ்சங்கொஞ்சமாய்ச்செதுக்கி இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து மெல்லிய கயிற்றினால் சுற்றிவைத்து நட்டு நல்ல ஜலம் வார்த்துக்கொண்டுவருமிடத்தில் அதில் வெள்ளை, சிவப்பு, கறுப்பு ஆகிய இம்மூன்று நிறமுள்ள கனிகளாய்ப் பழுக்கும்.

### 33. வெள்ளரிச்செடி நன்றாய்ப் பலிதமாக.

தேன் பசும்பால் இவ்விரண்டையுஞ் சேர்த்து வெள்ளரி விதைகளுக்குவார்த்துப பிசைந்து ஒருநாளிருக்கவைத்து மறுநாள் நட்டு நல்லஜலம் வார்த்துக்கொண்டுவருமிடத்தில், அது பெருத்த காய்களாகவும், அதிக ருசியுள்ளதாகவும் காய்காய்க்கும்,

### 34. புளிப்பு மாதளை இத்திப்பாக.

புளிப்புமாதளஞ்செடிக்கு ஆறு அல்லது எழு மாதம்வரைக்கும் மனிதர்கள் மூத்திரம் விட்டுக்கொண்டு வருமிடத்தில் அப்புளிப்புமாறி தித்திப்பாகவேயிருக்கும்.

## 35. செல்லுபிடிக்காதிருக்க.

மண்சுவர்வைத்து வீடுகட்டுபவர்கள் ஆலங்களைச்சார்ந்தயிடத்திலும் வாசற்கால் முதலியது சுவர்களுக்குச் சாத்துமிடத்திலும் தாமரையிலைகளை வைக்கப்படின் எவ்வித செல்லுகளும் பிடிக்கமாட்டாது. இப்படியே மண் மெத்தை வீடுகளுக்கும் செய்யலாம்.

## 36. மண்பாண்டச்சில்லியடைய.

மண்பாண்ட முதலானவைகளுக்கு துளையுண்டாகுமாகில், துருக்கல் சூரணத்தை வெல்லத்துடன்சேர்த்துத் தடவி காயவைத்தமாத்திரத்தில் நன்றாகும். பின்பு அடுப்பின்மீது வைத்தபோதிலும் பயமில்லை.

## 37. மண்ணுப்புச் செய்யும்விதம்.

உழமண்ணைக்கொண்டுவந்து தண்ணீரில்விட்டுக் கரைத்து வைத்துக் கொண்டு சிறிதாக மூன்று துளைகளுள்ள பாண்டத்திற்குள்ளாக கொஞ்ச மாக வைக்கோலைப்போட்டு அதற்குள்ளே மேற்கண்ட மண்ணின் நீரை வார்த்து அந்தப் பாண்டத்துக்குக் கீழே ஒருசிறிய பானையைவைத்து அதற் குள்ளிறங்கின மண்ணினுடைய தேட்டைநீரைக் காய்ச்சுமிடத்தில் உப்பா கும். இப்போது இந்த காரியத்தை இராஜாங்கத்தார் உத்திரவைப்பெற் று செய்யவேண்டும்.

## 38-சண்டாளக்கரு.

வேசரியென்னுங் கழுதையின் கொழுப்பை யுருக்கி கரியோட்டில் வி ட்டு வற்றிபோட்டு தீபமேற்றி பூதப்பிரேத பசாசு யெதிரில் வைக்கவும், யா வும் எதிர்க்காது விலகியோடிப்போய்விடும். இதையே மூர்த்திகரமுள்ள யாதாமொரு கோயில் குளமுதலிய மற்ற இடங்களிலும் வைக்க உடனே பாழாய்விடும் இத்தைலம் பட்டயிடம் பாழ்.

## 39-பேய்பிசாசோட்ட.

கொம்புகள்ளியின்மேலுள்ள ஒணானை ஒரு வெட்டில் இரண்டு துண் டாக வெட்டி அதுகளை வெவ்வேறாய்ச் சாணிகளிலுருட்டி புடமெரித்தெ டுத்து சாணிகளைப்போக்கி உள்நீரை வெவ்வேறுவைத்து தலைச்சாம்பலை யெடுத்து பேய்பிசாசாடுவோர் தலைமேற்போடவும். அவர்கள் தலைசுற்றியாடி வாய்மொழிசொல்லுவர். அதை முடியறுத்து மற்றக்கிரியைகளும் செய் து வால்சாம்பலைத் தலைமேற்போடவும், அப்பசாசுகள் விலகியோடிப்போம்.

## 40-கருமூலிகை.

எருமுஞ்சி முக்கியமானது அதில்லாவிடின் மற்ற அழுஞ்சியின்விதை யை கற்பூரத்தோடு சமனாய்ச் சேர்த்தரைத்து இரவியில் வைக்கவும் அதில் தைலமானது வரும் அத்தைலத்திற் கொஞ்சமெடுத்து லலாடத்திலிட்டுச் செல்லவும் சகலமும் செயமாம். இதன்றி மற்றக்கிரியைகட்கு செபஞ்செய் யுமிடத்தில் சித்தியாகும். இதையே யாகத்துக்குக் கருவாய்த்தடவவும் வெ குகாரியங்கள் கைகூடும்.

## 41-வசியத்திலர்தம்.

வெள்ளைச்சார்வேளை வேரை அவுரிச்சாற்றிலரைத்து புருவமத்தியில் திலர்தமிட்டுச்செல்லவும். உனக்கடங்காத சத்துருக்கள் யாவரும் பயந்து வாயெடுக்காது வணங்குவர். இராஜாங்கஞ்செல்ல யாவரும் எதிர்க்காது மருவுவர். இத்திலர்தத்தினால் சகலகாரியமுஞ் செயமாம்.

## 42-பில்லிசூனிய மகல.

சித்தாமணக்குவேறு, பேய்ச்சுரைவேறு, நிலக்குமிழிவேறு மூன்றுஞ் சமனாயரைத்து ஏழுமணியாய்க் குளிகை திரட்டி நடுவிற்றுளைசெய்து வெள்ளெருக்கனார் முறுக்கிய கயற்றிற்கோர்த்து அவாள் கையினிற்கட்டவும் எப்பேர்ப்பட்ட பில்லிசூனியம், ஏவல், பசாசு முதலியதும் பஞ்சாய்ப்பறந் தோடிப்போய்விடும்.

## 43-மோடிவைக்க.

படிகாரத்தை கோழிமுட்டையைப்போற்செய்து நன்றாய்ச்சீவி அதை மோடிவைக்குமிடத்தில் வைத்து அதின்மேல் மஞ்சள் குங்குமமிட்டு புஷ்பம்போட்டு வைப்பதில் அப்புஷ்பத்தை தண்ணீரிற்போட்டு அதை ஒடி முட்டைமேற் போடவும். அத்தண்ணீரானது முன் முட்டையைக் கரைத்து விடும் அங்கொன்றுமிராது.

## 44. உப்புஜலத்தை நல்லஜலமாக்க.

விளாவுமருதம்பட்டை, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், சுக்கு, பீர்க்கன்விரை, நெல்லிக்காய், புளியங்கொட்டை இவவைந்தையும் பொடிசெய்து கிணர் ஏரி குளம் முதலியவைகளில் போடும்விஷயத்தில் ஜலம் தித்திப்பாவதுமன்றி, துவர் துர்வாசனை சேர் இவைகளில்லாதிருக்கும். மேற்கண்ட தினுசுகள் கிணர்முதலியவைகளுக்கு எவ்வளவுவேண்டுமென்பதை அளவாகத் தெரிந்துகொண்டு செய்யவும்.

## 45. மற்றொருவிதம.

அஞ்சனக்கல் நீண்டகோரை வெட்டிவேர் சுக்கு பீர்க்கன்விரை நெல்லிக்காய் இலுப்பைக்காய்சூரணம் இவைகள் ஏழையும் மேற்கண்டபடி கிணர் முதலானவைகளுக்குப்போடவும் ஜலம் உருசியாயிருக்கும்.

## 46. கற்களையுடைக்கும்விதம்.

முருக்கன்விறகு வேலன்விறகு இவ்விரண்டையும் றபாரையின்மீது வேண்டிய அளவிற்குச் சுட்டு நன்றாய் எரிந்தபின்பு சுண்ணாம்பு ஜலத்தினால் குளிரச்செய்யும்பட்சத்தில் அது இலேசாகவுடையும்.

## 47. கத்திமுதலியவைகட்குத்துலையவிட.

கத்திமுதலானவைகளைச் சிவக்கக்காச்சி எள்ளெண்ணைக்குள் தோய்த்து யெடுக்கும்பக்ஷத்தில் அது கூர்மழுங்கிக் கெடாமலிருக்கும். அதன்றி மற்றதற்கும் துலையவிடலாம்.

## 48. உளிதுவையவிடும்விதம்.

உலர்ந்த வாழைப்பட்டைகளைச் சாம்பலாக்கி அதை மோரிற்கலந்து கற்களுடைக்கும் உளிகளைச் சிவக்கக் காச்சி மேற்சொன்ன ஜலத்தினிற் றோய்த்து நன்றாயாறியபிறகு அந்த ஆயுதத்தைக்கொண்டு அதனால் எவ்வித கற்களையுடைத்தபோதிலும் அல்லது அன்னியமாகிய உலோகங்களையுடைத்தபோதிலும் அது கூர்மழுங்கிக் கெடாமலிருக்கும்.

## 49. அரமுதலியவைதுவையவிட.

கடலுப்பைத் தண்ணீரவிட்டரைத்து அதனை அரமுதலியவைகளுக்கு தடவி நன்றாகக் காயச்செய்து பிறகு அதனை சிவக்கக் காச்சி மேகநிறம் வரும்படி தண்ணீரில் தோய்த்தமாத்திரத்தில் கருக்குண்டாகும்.

## 50. பாலைசர்க்கரையாக்கும்விதம்.

பசுவின்பாலை நன்றாய்க்காச்சி துத்திவேர்களை கத்தையாகக் கட்டிக்கொண்டு அதனால் துழாவிக்கொண்டிருக்கும்பட்சத்தில் அது சர்க்கரையாகும். இதை மேககாரகமுடையவர்கள் புசித்திடவும் அனுகூலமாகும்.

## 51. பலாமரத்தைவளரச்செய்விதம்.

பலாச்செடி அல்லது அம்மரத்திற்கு பாக்குமரத்தினுடைய இலைகளைச் சுத்திவைக்கவும் அல்லது அதின் வேரிற் புதைக்கவும் அதுநன்றாய்ப்பலிதமாகும்.

## 52. அன்னாசிப்பழம்விர்த்தியாக.

எந்த மாமிசத்துடனுகிலும் பாலும் வெல்லமுஞ்சேர்த்து ஆரஞ்சி மரத்துக்கு வைக்குமிடத்தில் அல்லது அதின் வேரிற் புதைக்குமிடத்தில் இனிப்பாகிய கனிகளாய்க் காய்க்கும்.

## 53 மாம்பழங்கள்விர்த்தியாக.

நாகப்பழங்களை மாஞ்செடிக்கு வைக்குமிடத்தில் அல்லது அதின் வேரிற் புதைக்குமிடத்தில் அது நல்ல மதுரமும் பருமனுமுடைய கனிகளாய் காய்க்கும்.

## 54. பூசுணையிற் கத்திரிமுளைக்க.

இளம்பூசுணைக்காய் செடியிலிருக்கும்போதே துளைசெய்து அதற்குள் கத்திரிவிதைகளைப்போட்டு அத்துளையை மூடி அது நன்றாய்ப் பழுத்தபின்பு அப்பழத்திலுள்ள விதைகளைப் போடுமிடத்தில் அப்பூசுணைச்செடி இளைத்து கத்திரிக்காய் காய்க்கும.

## 55. சுரையில்மாதளைமுளைக்க.

ஒரு மாதளைமரத்தில் துளைசெய்து அதனுள் ஒரு சுரைச்செடியின் கொடியை நுழைத்து மேல் சாணிபொதிந்துவைக்கவும், அச்சுரைச்செடி காய்காய்க்கவும் அச்சுரைக்காயை உடைத்துப்பார்க்கவும் அதனுள் வெறும் மாதளைவிரைகளாகவேயிருக்கும்.

## 56. செடிகள் புஷ்பங்கள் நிறமாற

தனக்கிஷ்டமாகிய வர்ண ஜலத்திலூறவைத்த விதைகளை பூரவைத்திருந்து அந்தவிதைகளை நட்டு மறுபடியும் அந்தச்செடி வளரும் வரைக்கும் முன்ன மூறவைத்த வர்ணசலத்தை வார்த்துக்கொண்டேவருமிடத்தில் தனக்கிஷ்டமான வர்ணத்தையொத்த மலர்களாய்ப் பூக்கும்.

## 57-சு-சு-கசு-அறையில் ருக-அடைக்க.

இதை எப்படிப்பார்த்தாலும் ஓரறையில் மாத்திரம் ஒன்று குறைவாக வருவதால், இந்தப்பதினாறறைகளிலும் கஉஅ ஆட போட அதை கவாலு அறைகளாய் எப்படிப்பார்த்தாலும் ருக-ஆகவே வரும். ஈதன்றி இதை அடியில் விவரித்துக்காட்டப்படும்.

## 58-ச-சு-கசு-ல் ருக-அடைக்கும்விதம்.

அகரத்திலிகரமைந்துடனீகாரமானதில்சால்
சகரத்திலகரமொன்றுடனுகாரந்தானெட்டதில்
தகரத்திலிகரமூன்றுடனீகாரந்தன்னிலுமார்
பாதிலகரமேழுடனுகாரம்பதியிரண்டே.

குதியமெண்ணைப்பாதியதாக்கிக்கழித்துமொன்ற
இருதியைப்பிரமன்சிதரன்அரனுடன்தார்தமிழும்
உருகியஆன்மம்சிதமும்பீதியுமுவந்தடைக்கின்
அருதியாயஅசதபதகரத்தொன்றகரறவைம்டத்தொன்றமே

## 59-மேற்படி சக்கரத்தடைவு.

இதை நெடுக்கில் ரு-கோடு, குறுக்கில் ரு-கோடு வரைந்து பார்க்கவ அது சு-சு-கசு அறைகளாயிருப்பதால் இதின் தலைப்பறைகளின்மேல் அ-ச த-ப-இந்த ச-எழுத்து மெழுதி அதினடிகளில் சகரத்தடியில் க-ம், பகரத்துக்கு உ-ல் உ-ம், தகரத்துக்கு ந-ல் ந-ம், அகரத்துக்கு ச-ல் ச-ம், அகரத்துக்கு ந-ல் ரு-ம், தகரத்துக்கு சு-ல் சு-ம், பகரத்துக்கு க-ல் எ-ம், சகரத்துக்கு உ-ல் அ-ம், எழுதியபின், தனக்கு வேண்டிய தொகையைப் பாதியாக்கி அப்பாதியில் ஒன்றை நீக்கிய தொகையை பகரத்துக்கு ந-லும், அதின் கீழ் தொகையை சகரத்துக்கு ச-லும், அதின்கீழ்தொகையை அகரத்துக்கு க-லும், அதின் கீழ்தொகையை தகரத்துக்கு உ-லும், அதின் கீழ்தொகையை தகரத்துக்கு க-லும், அதின் கீழ்தொகையை அகரத்துக்கு உ-லும், அதின் கீழ்தொகையை சகரத்துக்கு ந-லும், அதின் கீழ் தொகையை பகரத்துக்கு ச-லும் பிரகாரமெழுதி கவாலு அறைகளாய்ச்சேர்த்து எப்படி எண்ணினாலும் முற்கூறிய தொகைதான் வரும். இரட்டை தொம்பருக்குச் சரியாய்வரும் ஒற்றை தொம்பருக்கு க-குறைவாதலால் தகரம் க-ல் க-குறைக்க சரிப்படும். இவ்வடைவில் மற்றதைக்காண்க.

## 60-முகவசியத்துக்கு.

இதில் முற்கூறியபடி ௬-௬-கக-அறைகளில் ககூ-சேர்ந்து நவாலு அறைகளுக்கு வரும்படி கடிதத்திலெழுதி பூசித்து அருச்சனைசெய்து சுருட்டிமெழுகிலடைத்துக் கன்னத்தின் தாடைக்குள் வைத்தடக்கிச்செல்லவும். இராஜவசியமுதல் சகலவசியமுமாகும் சத்துருசெயமாம் யாவருமதிக்கத் தக்கது.

## 61-குழந்தைகள் பிணிதீர.

குழந்தைகள் பிணிதீரவெனில் ௬-௬-கக அறைகளில் எ௬ நவாலு அறைகட்கு வரும்படி சேர்த்தெழுதி அதை செப்புத்தகட்டில் பதிந்து காணியாசமுஞ்செய்து தூபதீபனைவேத்தியமும் வைத்து பூசித்து கட்டிவிடவும் சகல பிணிகளும், தோஷங்களும், கிரகங்களும், பாலக்கிரகங்களும், கண்ணூறுகளும், பாபகர்மங்களும், நிந்தனை கெடுதிகளும் நீங்கிவிடும்.

## 62-தேகம் பருக்க.

தேகம் அல்லது புஜம், மார்பு பருக்கவெனில், ௬-௬-கக-அறைகளில் ௬௨-இலக்கம் சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி முன்போலப் பூசித்தருச்சனைசெய்து குளிசமாடிக் கட்டிவிடவும். தேகந்தழைத்துப் பருத்து தேஜசுண்டாகும்.

## 63-காச்சலொழிய.

தீராத காச்சல் தீரவெனில், ௬-௬-கக-அறைகளில் ௱௬-இலக்கம்சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி காச்சலுள்ளவர்கட்கு கட்டிவிடவும். அவர்களுக்கு அக்காச்சலைப்பற்றிய பலவினைகளும் ஒழிந்துவிடும்.

## 64-பெரும்பாடு தீர.

பெரும்பாடதிகரித்துப் பீடிப்பதகலவெனில், ௬-௬-கக-அறைகளில் ௬௬-இலக்கம்சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி பூசித்தருச்சனைசெய்து கட்டிவிடவும். அப்பெரும்பாடானது உடனே நின்றுவிடும்.

## 65-பைத்தியம் விட.

பைத்தியம் பிடித்த தொழியவெனில், ௬-௬-கக-அறைகளில் ௱கூ இலக்கஞ்சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி அதை பூசித்தருச்சனைசெய்து அவனுக்குக்கட்டிவிடவும். அவன் பைத்தியமானது எளிதில்நிவர்த்தியாகும்.

## 66-குழந்தைகளிளைத்தலுக்கு.

இளைத்த குழந்தை தாட்டியாகவெனில், ௬-௬-கக-அறைகளில் எ௨-இலக்கஞ்சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி அதைப் பூசித்தருச்சனைசெய்து இளைத்த பிள்ளைக்குக் கட்டிவைக்கவும். அப்பிள்ளை தாட்டியாய் தணிந்து மேனியுள்ளதாய் விளங்கும்.

## 67-சவலைப்பிள்ளைக்கு.

சவலைப்பிள்ளை தணியவெனில், ௬-௬-கசு-அறையில் எ௮-இலக்கஞ் சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி அதைப் பூசித்தருச்சனைபுரிந்து அந்தச் சவலைப்பிள்ளைக்குக் கட்டிவைக்கவும், அது தாட்டியாய் செழித்துவரும். இதற்குக் கோழிக்குஞ்சு பலியிடவும்.

## 68-கர்ப்பந்தரிக்க.

மாதர்களுக்கு மலடுநீங்கவெனில், ௬-௬-கசு-அறையில் ௩௨-இலக்கஞ் சேர்ந்து வரும்படி தகட்டிலெழுதி அதைப் பூசித்தருச்சனை புரிந்து அம்மலடிக்குக் குளிசமாடிக்கட்டவும். அம்மாதானவள் கர்ப்பமுண்டாய் நல்ல குழந்தையைப் பெறுவள்.

## 69-தேள்விஷமிறங்க.

தேள் கொட்டியவர்களுக்கு ஒரு மிளகாயை நுணியைக்கிள்ளி யெறிந்து விதைகளைப்போக்கி அதினிறையத் தண்ணீரைவிட்டுக் குலுக்கி யதைப் பிறருக்குத் தெரியாது அவாள் இரண்டு கண்களிலும் விடவும். இப்படி இரண்டாவர்த்தி விடவும் விஷங்கக்கி வாதை நிவர்த்தியாகும்.

## 70-மச்சக்கல்சித்து.

சுராமீன் றலையிலுள்ள ஒரு கல்லையெடுத்து தலைப்பேறு பெற்றவள் முலைப்பாலில அரைத்து நெற்றியிற்றிலர்தமிட்டு அல்லது முகத்தில்தடவிக் கொண்டு இருட்டறையில்செல்ல வெளிச்சமாயிருக்கும்.

இக்கல்லும் கோரோசினையும் தேன் விட்டரைத்து உள்ளங்காலிற் பூசிச்செல்ல யாவரும் வசியமாம் சத்துருக்கள் வணங்கி உறவாடுவர்.

அக்கல்லும் பொரிகாரமும் தலைப்பேறு பெற்றவள் முலைப்பாலிலரைத்து சந்தனத்திற் குழைத்து தனது நெஞ்சினிற்றடவிச்செல்ல யாவரும் பணிகுவதோடு எப்பேர்ப்பட்டவழக்கும் வெல்லும்.

முன் கல்லும் கோழியின் பிச்சும் கூட்டிக்கலந்தரைத்து நெற்றிப்புருவத்திற் றடவிச்செல்ல சகல பூதப்பிரேத பசாசுகளெல்லாம் இவனைக்கண்டதே பயந்து நடுங்கி யொடுங்கி கூக்குரலிட்டுக் குதித்தலறும்.

அதிலொரு பசாசின்மேற்பட ஓர் எலுமிச்சம்பழத்தை எறிந்துவிட்டு தான் திரும்பிப்பார்க்காமல் வந்து விட்டு தான் படுத்து நித்திரைசெய்யவும் அந்தப்பழமானது தன்றலைமாட்டிலிருக்கும் அதை எடுத்துக்கொள்ளவும்.

அப்பழத்தை அறுத்து அதனைத் தான் புசிக்கப் பலனுவது தானுள்ள மட்டும் அப்பசாசானது தனது சொற்படிகேட்டு செய்தொழில் பணிவிடை முறைப்பாடுகளை அதிஜாக்கிரதையாய் செய்துமுடிக்கும். ஈதன்றிதனது சத்துருக்களைக் கூட்டோடழித்து துவம்சஞ்செய்யும் இச்சுராமீன்றலையில் உ-கற்களுள்ளதை நீக்கிவிடவும் அது பலிதமாகாது.

## 71. வர்த்திரோக்குகட்கு வர்ணமேற்ற.

கீழே நெருப்பைவைத்து அதன்மேல் மண் அல்லது பித்தளைத் தட்டைமூடி அந்த தட்டு சுடுகையாயிருக்கையில் அதன்மீது வெள்ளை வர்த்திரோக்குகளை வைத்து ரோஜனத்தைத் துணியில் மூட்டைகட்டிக்கொண்டு அந்தரோக்குகளுக்குப் பூசுமிடத்தில் அது மஞ்சள்நிறமாரும், இது அரக்குவளையல் செய்பவர்களுக்கு வேண்டியதாயிருக்கும்.

## 72. கடிதாசிகட்கு மெருகிட.

மேற்சொல்லியபடி ரோஜனத்தை பச்சைவர்ணக்காகிதம் முதலியவைகளுக்கு பூசுமிடத்தில் அது மெத்தவும் மெருகுள்ளதாயிருக்கும். மற்றகாகிதங்கட்கும் இவ்வாறே செய்யவும்.

## 73. மண்பாண்டங்களிற் புழுவுமடிய.

பானையை அடுப்பின்மீதுவைத்து சூடேற்றி ஒருபலம் வெள்ளை குங்கிலியத்தைச் சூரணஞ்செய்துக்கொண்டு பானைக்குள் ஒருசேர் நல்லெண்ணையைவார்த்து பின்பு குங்கிலியத்தூளைப்போட்டு எண்ணை பொங்கிவருஞ் சமயத்தில் இறக்கிக்கொண்டு துணியை மூட்டை கட்டிக்கொண்டு அதனால் அப்பானையினுள்ளே நன்றாய்க் களாய் பூசுவதுபோல் பூசி, மிகுந்ததைப் பானையின்மேலும் பூசவேண்டும். இப்படிப்பட்ட பானையில்வைத்த ஊறுகாய்முதலியதிற் புழுக்கள் பிடிக்காமலிருக்கும்.

## 74. பாகற்காய் கசப்பகல.

பாகற்காய் பத்தைகளின்மீது கொஞ்சம் எலுமிச்சன்சார் புளிப்பைவார்த்து கொஞ்சநேர மிருக்கவைத்து நன்றாகப்பிழிந்து எடுத்துக்கொள்ளவும் கசப்புமாறிப்போம்.

வேறு —பாகற்காய் பத்தைகளின்மீது இரண்டு எலுமிச்சன் காய்களின் புளிப்பைவார்த்து கொஞ்சம் உப்பு பொடிசெய்து தூவி அரை நாழிகை நேரம்வைத்து பின்பு அதைப் பிழிந்தெடுத்தமாத்திரத்தில் அக்கசப்பானது நீங்கிவிடும்.

வேறு.—பாகற்காய் பத்தைகளில் புளி கொஞ்சம் அதிகமாகவும், உப்பு கொஞ்சம் குறைவாகவும் போட்டு வேகவைத் திறக்கிக்கொண்டு நல்ல ஜலத்தில்விட்டு அலம்பி யெடுத்துக்கொள்ளும்பட்சத்தில் அதின் கசப்பானது நீங்கிவிடும்.

## 75. நெருப்புண்டாக்கும் விதம்.

ஒரு பூதக்கண்ணாடியை வெய்யில்வேளையில் சூரியனுக் கெதிராக அசையாமற்பிடித்து அதன்கீழ் உண்டாகும் சுடுகையில் பஞ்சியையாகிலும், அல்லது விளாவாய் பற்றத்தகுந்த மற்றெவ்வித வஸ்துவையாகிலும் கொஞ்சநேரம் வைக்குமிடத்தில் அதில் நெருப்புண்டாய் அங்கு வைத்தது பற்றியெரியும்.

### 76. நெல்லிக்காய் துவர்ப்புமாற.

வெந்நீரில் அரிசிமாவும், கொஞ்சம் சுண்ணாம்புநீரும் போட்டு நெல்லிக்காய்களை அதனுட்போட்டு வேகவைத்து யெடுத்துக்கொண்டு நல்லஜலத்தில் அலம்பினமாத்திரத்தில் அக்காய்களின் துவர்ப்பும் புளிப்பும் நீங்கிப் போய்விடும்.

### 77. வெள்ளரிக்காய் கசப்பகல.

வெள்ளரிக்காய்கள் முதலியவைகளினுடைய காம்பையறுத்து அவ்விடத்தில் அக்காரம்பால் நன்ருகத் தேய்த்தமாத்திரத்தில் நுரையைப்போல கசப்புநீரெல்லாம் வந்துவிடும். பின்பதனை யலம்பி யெடுத்துக்கொள்ளல் வேண்டும்.

### 78. கருணைக்கிழங்கு காரல்மாற.

கருணைக்கிழங்கு பத்தைகளை வேகவைத்து நல்லஜலம்விட்டு அலம்பி எடுத்துக்கொள்ளவும் அதின் காரலானது நீங்கிவிடும். மற்ற காரலுள்ள காய் கிழங்குகட்கும் இவ்வாரும்.

### 79. சூரியன்கிரணத்தால் நெருப்பெரிய.

ஒரு தட்டைப்போன்ற பீங்கானில் ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினை வார்த்து அதனுடன் கால்ரூபாயைப்போட்டு ஒரு கண்ணாடியை சூரியனுக்கெதிராகப்பிடிக்க, அச்சூரிய கிரகணம் அக்கண்ணாடியின் வழியாக இந்த ஸ்பிரிட்சுனுள்ளிருக்கும் கால்ரூபாயில் விழும்படி செய்தபட்சத்தில் அது பற்றியெரிவதில் அருகிலுள்ள பஞ்சுமுதலிய கந்தைத்துணிகளும் தானுய்ப் பற்றிக் கொள்ளும்.

### 80. மற்றொருவிதம்.

கடோமான வெய்யலில் இரசமில்லாத கொஞ்ச மந்தமுள்ள கண்ணாடிப் பில்லையை சூரியனுக்கெதிராக யிருக்கும்படி யதைப் பிடித்து அதன்கீழ் வெள்ளையாகக் காணப்படும் ரஸ்மியாகிய அச்சூரிய கிரணத்தை மெல்லிய பஞ்சுமீதிற் படும்படி ஐந்து நிமிஷம் வைத்திருந்தால் அதில் நெருப்புண்டாய் கீழிலுள்ள பஞ்சுமுதலியவை வினாவிற் பற்றியெரியும்.

### 81. ஊசியைக் கோர்ப்பது.

ஊசியைச் சாதாரணமாகக் கதவுகள் முதலியவைகளின்மீது விட்டெறிவதால் அது கீழே விழுந்துவிடும். ஆயினும் அவ்வூசியின் காதில் சிறிய நூல்கயிற்றைக் கோர்த்துவிட்டெறியும்பட்சத்தில் அது அக்கதவிற்றுனே தைத்துக்கொள்ளும்.

### 82. ஜலபூதக்கண்ணாடி.

அச்சமாகிய பித்தளைத் தகட்டினுள் ஊசி நுழையும் அளவிற்கு அதிற்றுளைசெய்து அத்துளையின்மீது ஒருதுளி ஜலத்தை விடும்பட்சத்தில், அது வர்த்தியைப்போல் அங்கு நிற்கும். இந்தப் பூதக்கண்ணாடியின்கீழ் ஏதாகிலும் சிறிய வஸ்துக்களைவைத்துப் பார்க்குமிடத்தில் அது பெருத்ததாகவே காணப்படும்.

## 83. ஜலத்துள்ளிருப்பதைக்காண.

கண்ணாடிகளில் ஒன்றின் குருக்களவு ஒரு அடி, மற்றொன்றின் குருக்களவு ஒரு அங்குலமாக யிருக்கும்படி இரண்டு பில்லைகளை ஆறடி நீளமுள்ள ஒரு தகரக்குழாயை மாங்காயைப்போல ரூபமுள்ளதாகச்செய்து நன்றாய் ஒட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யுங் குழையினுடைய ஒரு பாகத்தின் துவாரம் ஒரு அங்குலம் குருக்களவுள்ளதாகவும், மற்றொரு பாகத்தின் துவாரம் ஒரு அடி குருக்களவுள்ளதாகவுஞ் செய்து கொண்டு முன்னுள்ள கண்ணாடிப்பில்லைகளை அந்தந்த பிரமாணத்திற்குத் தக்க பாகங்களிடத்தில் வைத்து ஜலம்புகாமலிருக்கும்படி லப்பத்தினால் மூடி காயவைத்து யெடுத்துவைத்துக்கொண்டு கிணர், ஏரி, நதி, குளம் முதலாகு மவைகளுள் ஏதாகிலும் வஸ்துக்கள் விழுந்தபோதிலும் அல்லது அதனுள்ளாழ முதலானதுகளை பரீக்ஷிக்கவேண்டினும் குழையினுடைய ஒரு அடி குருக்களவுள்ள பாகத்தைத் தண்ணீருக்குள் வைத்து ஒரு அங்குலம் குருக்களவுள்ள பாகத்தின் கண்ணாடியினால் பார்க்கும் பக்ஷத்தில் தண்ணீருக்குள்ளிருக்குமவைகள் யாவுந் தெரியும்.

## 84-பகலில் நக்ஷத்திரங்களைப்பார்ப்பது.

இருட்டாகிய கிணற்றிற்குள்ளே யிருந்து ஆகாயத்தை யண்ணார்ந்துப் பார்க்குமிடத்தில் ஆகாயத்தினுள் நக்ஷத்திரங்கள் காணப்படும். இக்காரியம் விசேஷமாகத் தண்ணீரினில் மூழ்கி வசிக்கச் சக்தியுடையவர்களே செய்யவேண்டும்.

## 85-எழுத்துகளை தெரியாமற்செய்வது.

ஆக்ஸாலிக் ஆஸிட் டார்டாரிக் ஆஸிட் என்னும் இவ்விரண்டையும் சமனாகக்கொண்டு தண்ணீரில் கலந்துகொண்டு புருசினால் (என்றால் அணிலின் வால்நுணி மயிர்களை குச்சியில் கட்டியிருக்குமவற்றினால்) சாதாரணமாகிய கருப்பு இங்கியினால் எழுதிய எழுத்துகளின்மீது பூசினபக்ஷத்தில் உடனே அவ்வெழுத்துகள் தெரியாமற் போகும்.

## 86. தண்ணீரிற் றட்டுநாதம்.

மார் மூன்று அங்குலம் அகலமுள்ள எட்டு ஒயின்கிளாசுகளை வரிசையாகவைத்து முதற்கிளாசில் கொஞ்சந் தண்ணீரும், இரண்டாங்கிளாசில் அதன்மேற்கொஞ்சந் தண்ணீரும், இப்படியே எட்டு கிளாசுகளிலும் படிபடியாய் தண்ணீரைவார்த்து ஒருகுச்சியினால் அவைகளின்மேல் ஒவ்வொன்றையும் மெதுவாகத் தட்டிக்கொண்டேவரவும் அதில் பலவித நாதவொலியான்து கேட்கும்.

## 87. சூரியகிரகணத்தைப் பார்க்க.

ஒருதுண்டு கண்ணாடிப்பில்லையில் விளக்கின் புகையைப்பிடித்து அதனால் சூரியனைப்பார்க்குமிடத்தில் கண்கள்கூசாது. இப்படிப் பார்ப்பதினாலே சூரியகிரகணம் நன்றாகத்தெரியும்.

## 88. ஜலவாயுவின் வேகப்பரீட்சை.

ஒரு காலியான புட்டியை கார்க்கினால்மூடி கழுத்தைக் கயிற்றினாற்கட்டி இணற்றிலேனும் அல்லது குளத்திலேனும் ஆழத்திற்போகும்படி விட்டு கொஞ்சநேரம்பொறுத்து மேலுக்கெடுக்குமிடத்தில் அப்புட்டிக்குள்ளே அக்கார்க்கு விழுந்துபோவதுமல்லாமல் அதற்குள் ஜலம் நிறைந்திருக்கும்.

## 89. எரிவதைத்தணிக்க.

நவாச்சாரமாகிலும் அல்லது வெங்காரமாகிலும் தண்ணீரிற் கலந்துகொண்டு எரிந்துகொண்டிருக்கும் தீயின்மீது வார்க்குமிடத்தில் அக்கனல் குளிர்ந்துபோகும்.

## 90. ஸ்ரீசூர்ணஞ்செய்ய

பச்சை மஞ்சளாகிலும், அல்லது உலர்ந்த மஞ்சளாகிலும் ஒரு வீசை கொண்டுவந்து அதன்மேலிருக்கும் வேர்முதலானதுகளில்லாமல் நன்றாய்ச் சுத்திசெய்து நைய இடித்துவைத்துக்கொண்டு எலுமிச்சன்பழம் சம், இரசங்குறைவுபழமாயிருக்கின் ருடி, அறுத்துச் சாரம்பிழிந்து ஒரு பாத்திரத்தில் விட்டுக்கொண்டு, பின்பு அந்த எலுமிச்சன்பழத்தோல்களனைத்தையும் உரலிற்போட்டு கொஞ்சந் தண்ணீர்விட்டு இடித்துச் சாரம்பிழிந்ததில் உ - பலம் வெண்காரமும், உ - பலம் படிகாரமும் பொடித்துப்போட்டு சற்றுநேரம் அடுப்பின்மீதேற்றி வேகவைத்து இறக்கிக்கொண்டு இதன்கூட முதலிற் பிழிந்துள்ள இரசத்தைவிட்டுக் கலந்து அம்மஞ்சளையெல்லாம் போட்டுப்பிசைந்து அப்படியே ஓரிராத்திரிவைத்து மறுநாள்மஞ்சளை மாத்திரம் காயவைத்து அதில் மிகுதியாயுள்ள இரசத்தை இரவில் மறுபடியும் விட்டுப்பிசைந்து இராமுழுதும்வைத்து மறுநாள் காயவைக்கவும். இவ்வாறே அம்மஞ்சளுக்கு சாயமேற அதை நன்றாகக் காயவைத்து உரலிற்போட்டிடித்தாகிலும், இயந்திரம், அல்லது அம்மியி லரைத்தாகிலும் எடுத்து மெத்தவும் உறப்பாகிய துணியால் வஸ்திரகாயஞ்செய்யுமிடத்தில், அது பிரசித்தமாகிய ஸ்ரீசூரணமாகவிருக்கும். அதிற் சிலர் ஒருவீசை மஞ்சளுக்கு வெண்காரம் ச - பலமும், படிகாரம் உ - பலமும் போடுகிறார்கள் அதினும், படிகாரமும் வெண்காரமும் சமனாயிருக்குமாயின், அது முகத்திற்றரித்துக் கொண்டபின்பு பிரகாசமாயிருக்கும். வெண்காரம் அதிகமாயிருக்குங்கால் முகத்திற் றரித்துக்கொள்ளாமுன்னம் பிரகாசமாகவிருக்கும். சிலர் முகத்தில் நன்றாய்ப் பிடிப்பதற்காக மொச்சைப்பருப்பைக் கொஞ்சஞ் சேர்க்கிறார்கள். ஆனால் சாயங்கட்டின மஞ்சளை நிழலி லுலர்த்துவது மேன்மை.

## 91. மஞ்சள்ஸ்ரீசூரணஞ்செய்ய.

முன்போல சாயங்கட்டிய மஞ்சளுக்குப் பாதி பச்சரிசி சேர்த்துச் சூரணம்பண்ணி வஸ்திரகாயஞ்செய்துக்கொள்ளவும், அது நல்ல மஞ்சள் ஸ்ரீசூரணமாகும்.

## 92. பலநிறகுங்குமஞ்செய்ய.

கடைகளில் விற்கப்பட்ட பலவிதங்களாகிய ரங்குகளில் தங்களுக்கு இஷ்டமாகிய ரங்கைவாங்கி தண்ணீரிற்கலந்து ஒரு பாத்திரத்தில் வைத்து அதில் வேண்டிய அரப்பொடியைப்போட்டுப் பிசைந்து தேய்த்து நிழலிலுலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

## 93. கெந்தகக் கிண்ணிசெய்ய.

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகமாகிலும், அல்லது பாண கெந்தகமாகிலும் இரும்புகடாயிற்போட்டு கொஞ்சம் விளக்கெண்ணெவிட்டு நன்றாகவுருக்கி, அதற்குமுன் சித்தஞ்செய்திருக்குங் கருவில் வார்த்துக்கொள்ளவும், இக்கருவு கம்மாளர் வெண்கலக்கிண்ணிமுதலியவைகட்கு கருவுபிடித்துவார்க்குமாறு வார்க்கவும்.

## 94. கெந்தகஞ்சுத்திசெய்ய.

கெந்தகத்தை அடியிற் சிறிய துளையுடைய ஒரு குடுவையிற் போட்டு அதன்கீழ் ஒரு குடுவையில் பசும்பால்வார்த்து துடைப்பக்குச்சிகளையும், எருமுட்டைகளையும் அதற்குள் புட்டுப்போட்டு சீல்செய்து சிறுக யெரிக்க, அக்கெந்தகமியாவுங்கரைந்து அடிகுடுவையில் எருமுட்டைகளிற் பிடித்துக்கொள்ளும். அதனை யெடுத்து உபயோகித்துக்கொள்ளவும். தற்காலம் பாணகெந்தகத்தால் கிண்ணிகள், கிண்ணங்கள், டம்லர்கள்முதலியவைசெய்கிறார்கள். இவ்வுருப்புகளில் பாலைவிட்டு கொஞ்சநேரம் வைத்திருந்து குடிக்கவும் மேககாரகமுதலியவை தீரும்.

## 95. உப்புக்கிண்ணிசெய்ய.

தண்ணீர்முட்டான்கிழங்கு, நரிப்பயற்றன்கிழங்குகளின் நரம்புகளை நீக்கி நன்றாயுலரவைத்து சூரணஞ்செய்து உப்பைக் கலுவத்திலிட்டு கொஞ்சமாய்த் தண்ணீர்வார்த்தரைத்து அதில் அச்சூரணத்தைப் போட்டு நன்றாயரைத்து தமக்கிஷ்டமாகிய பாத்திரங்களின்மீது ஒட்டி யெடுத்து நிழலிலுலர்த்தி, அதிற் பாலைவிட்டு சற்றுநேரம்பொறுத்துக் குடிக்கவும் தேகத்திற்கு ஆரோக்கியமுண்டாகும்.

## 96. சோடாவாட்டர்செய்ய.

இரண்டு டம்ளரில் குளிர்ந்த தண்ணீர்நிறைத்து அவைகளில் ஒன்றில் டீஸ்பூனில் பாதி அரைகரண்டியளவு கார்பொனெட் சோடாவைச்சேர்த்து, மற்றொன்றில் அதுவேயளவாக டார்டாரிக் ஆசிட்டைச் சேர்த்து இரண்டு டம்லர்களுக் குள்ளிருப்பது வெவ்வேறாய்க் கரைந்தபின் டார்டாரிக் ஆசிட்டைச்சார்ந்த டம்லரிலுள்ள தண்ணீரை முதல் டம்லரில்விட, உடனே அத்தண்ணீரில் வாய்வுபலத்தினால் ஓர்விதமாய் பொங்கிவரும். அப்போது தாமதிக்காது குடிக்கவும். இதற்கு ஷாப்புகளில் விற்பனைசெய்வதிற்குள்ள குணங்களுண்டாய் மெத்தவும் நலமாயிருக்கும்.

### 97 மற்றொருவித சோடாவாட்டர்.

பைகார்போனேட் சோடாவையும், டார்டாரிக் ஆசிட்டையும் ஓரளவாக வெடுத்து ஈரமில்லா கல்லுவத்திலிட்டு நன்றாய்ப்பொடித்து புட்டியிலடைத்து கார்க்குப்பிகிந்து வைக்கவும். தனக்கு வேண்டியபோது இப்பொடியினிற் கொஞ்சம் ஒரு டம்லர் தண்ணீரிற்போட்டவுடன் அதுபொங்கிவரும். உடனேகுடிக்க இதற்கு மேற்கண்ட குணங்களுண்டாம்.

### 98. சாக்கரை க்ஷரபத்செய்ய.

பத்துபடி தண்ணீர்பிடிக்கும் வாயகன்ற செப்புபாத்திரத்தை நன்றாய்த்துப்படுத்தி மெத்தவும் வெண்மையாகிய ஆஸ்டரகாம் சர்க்கரை ஒருமணங்கை யதிற்போட்டு அச்சர்க்கரைமேல் இரண்டங்குலந் தண்ணீரிருக்கவிட்டு அடுப்பேற்றி முன்சர்க்கரை யாவுங்கரைந்து ஜலரூபமாயிருக்கையிலிறக்கி வேறொரு பாத்திரத்தில் ஒருகுட்டையை வாய்கட்டிவைத்தெடுத்துபின்வடிகட்டி மறுபடியும் முதற்பாத்திரத்தை யலம்பி அடுப்பின்மீதேற்றி மேற்படி சர்க்கரைப்பாகை வார்த்தெரித்து அது நன்றாய்க் கொதிவந்தபின கால்படி பசும்பாலைக் கொஞ்சங்கொஞ்சமாய் அதன்மேற் றெளித்து துடுப்பினால் துழாவிக்கொண்டிருக்க அதின் அழுக்கெல்லாம் விரைவில் மேலேறி யிதுக்குஞ்சமயத்தில் ஒரகப்பையினால் நுரையாவும் மெதுவாய் வழித்துக்கொண்டிருக்கவும் காச்சிடும்பாகை விரல்களாற் பிடித்துப்பார்க்க அது நூலிழையைப்போல்வரும் இது க்ஷரபத்து காச்சும் பாகம்.

### 99. கற்கண்டு செய்ய.

கற்கண்டுசெய்வதற்கு முன்காச்சியதற்காகிலும் முதிர்ந்த பாகமாயிருக்கவேண்டுமாதலால், மறுபடியும் சர்க்கரையை முன்போலக் காச்சிக்கொண்டே பாகைப்பிடித்து பதம்பார்த்து அப்பாகின் சுடுகையாற, அது கெட்டிப்படுமென்று தெரிந்தவுடன் அதையிறக்கி அப்பாத்திரத்தை உறத்த துணியால் வாய்கட்டி தூரிடமசையாதுவைத்து ஐந்துநாளைக்குமேல் அதை யவிழ்த்துப்பார்க்கவும் அதிற் கற்கண்டுபூர்த்து கட்டியாயிருக்கும். இக்கற்கண்டை ஓலைப்பாயிற்போட்டு காயவைக்கவும். அந்த பாத்திரத்தடியிலும் கற்கண்டு உலர்ந்து பிளவுண்டிருப்பதை யெடுத்துடைத்து முன்போல ஓலைப்பாயிற் காயவைத்தெடுத்து பெட்டிகளில் ரொப்பி வைக்கவும். இதிற் கொஞ்சம் பாகுகட்டாமல் ஜீராரூபமாகவிருக்கின், இதனை மிட்டாய்க்கடைக்காரர்கட்குக் கொடுக்கலாம். அதின்மேலே பூர்த்திருக்கும் கற்கண்டு முதற்றரமானவை. அடியித் கட்டிகட்டியாயிருப்பது இரண்டாந்தரமானவை. இதற்கு அடுப்பு மிட்டாய்கடைகளிற் கட்டும்விதமாய் அனலான துள்ளடங்கி எரியப்படுவதாய்க் கட்டவும்.

### 100 குங்குமஞ்செய்ய.

மேற்கண்டபடிக்கு மஞ்சளுக்குச் சாயமேற்றி வஸ்திரகாயம் ஒரு பரியாயமாய்ச்செய்து கொஞ்சம் எண்ணை வார்த்துப் பிசைந்து எடுத்துக்கொள்ளும்பட்சத்தில், நல்ல குங்குமமாகும்.

## 101. பனிக்கட்டிசெய்ய.

ஆறுபுட்டிஜலம் பிடிக்கும் வாயகன்ற ஒரு ஜாடியில் நான்கு புட்டி ஜலத்தை நான்குதடவை துணியில் வடிகட்டி வார்த்து மெழுகுபோலொத்த இரண்டவுன்சு பொட்டுலுப்பை அத்தண்ணீரிற்போட்டு ஜாடிவாய்க்குச் சரியான மூடியாற்பிகிந்து காற்றேறுமற்செய்வதில், இதின்வாய் மேலிருக்கும்படி கயிற்றினாற்கட்டி ஆழமுள்ள கிணற்றினீரில் விடுத்து அந்தத் தண்ணீர் மேல்மட்டம்வரையில் வரும்படி மேலுக்கெடுக்கவேண்டும். அதை மறுபடியும் மூழ்த்தி மேலுக்கெடுத்து இந்தப்படி அடிக்கடி செய்யுமிடத்தில் அது மூன்று அல்லது நான்குமணி நேரத்துள் ஜாடியிலுள்ள ஜலம் பனிக்கட்டியாய்விடும்.

## 102. சாணைசக்கிரஞ்செய்ய.

சாணைமணல் அதாவது கன்னியாகுமரி மணல் அதை நொய்பதமாய யைத்தெடுத்து அதில் அவுலரக்கு சமனாய்ச்சேர்த்துருக்கி அதனுள் ஷை மணல்பொடியைக் கொட்டிக் கலந்து அதன்கீழ் கரிநெருப்பனலை வைத்து சாணையைத் திருப்பிக்கொண்டே மேல் மொத்தையை ஒத்திக்கொண்டிருந்து தனக்கு வேண்டிய அளவுகனம் செய்துகொண்டு பின்பு ஆரவிட்டு உபயோகிக்கவும்.

## 103 மகுடிகுழையடைக்க.

கருடனனது குஞ்சுகள் பொரித்தபக்குவம்பார்த்து அதில் வெட்டைப்பாக்குளைப் போட்டு அழுத்திவிட்டுவந்துவிடவும். அக் குஞ்சுகளின் தாய்வந்துபார்த்து அப்பாக்குகளை யெடுத்து கீழே யெறிந்துவிட்டதுபோக அக்கூண்டிலுள்ளபாக்குகளை ஷை குஞ்சுகள் பரந்துபோய்விட்டபின் அப்பாக்குகளை எடுத்து பத்திரப்படுத்தி அதை மோடிவைக்குமிடத்தில் ஒருபாக்கைவாயிலடக்கி மந்திரம் =(ஓம் ஐயுங் கிலியும சவ்வும் வெடி மகுடிக்குழையடை நசிமசி சுவாகா)என்று அப்பாக்கை இரண்டாய் கடிக்க அம்மகுடிகுழையானது வெடித்துவிடும். ஈதன்றி டங்காடமாரம் உடுக்கை சிலம்பு நாகசுரம் முரசுமுதலியதற்கும் ஒருபாக்கைவாயிற்போட்டு மந்திரம்சொல்லி இரண்டாய்கடிக்க யாவும்கட்டிடும்.அக்கூண்டில்குஞ்சுகள் பரந்தோடிப்போனதே அதை யெடுத்து கொளுத்திவிடவும் அதிலொருவேர் பச்சையாயிருக்கும்—அது சஞ்சீவி.

## 104. உடம்பெறிய.

நண்டுகுழிமண்ணும், எதிரிகாலடிமண்ணும், சுடலைமண்ணும இம்மூன்றினுள் பெருங்காயமுஞ் சேர்த்து, மிளகு 21-கடையில் வாங்கி யாவும் ஓர்சட்டியிலிட்டு புளியன்விறகு தவிர மற்றவிறகு ஒரு தினுசி லெரிக்க அவாள் ஊனெல்லாம் எறியும்-இப்படி எறிப்பதை நிறுத்திவிட உடம்பெறிவு நிற்கும்.

இதற்கு முறிப்பு - புளியன்வேர்பட்டையை நறுக்கிக் கியாழம்வைத்து அதிற் சர்க்கரைசேர்த்துக் குடிக்கவும் ஷை ஊனெறிவதகலும்.

### 105-வசியமோதிரம்.

சூரியன், சந்திரன், சுக்கிரன் இம்மூவரும் ஒருகாலிற்றங்கி யிருக்கையில், வெள்ளி-பொன்வகைக்கு-வ-தோலாயிடையுருக்கி அக்கிரகங்கள் மாறுமுன் ஒருமோதிரஞ்செய்து அதில் பயர் வீதம் பவழம்பதிந்து, மந்திரம் (உறும்பக்தே-ஜம்பக்தே-வைகுண்டபக்தே-காமஹம்மது) என்று உருவு-ரு, இயற்றிப்பூசித்து தன்விரலிற்போட்டுக் கொள்ளவும். சகலதேவதைகள்-போராசர், சத்ருக்கள், மிருகங்கள், கிரகங்கள் பிசாசுகள் யாவும் வசியமாகும். அவனுக்கு சகலசம்பத்தும் அதிகரிக்கும்.

### 106-தானுய்ப்பேயாட.

பெருங்கிழங்கின் மேற்றோலை வெதுப்பிபொடிசெய்து, பேயூமத்தையை சூரணித்து ஒன்றாய்க்கலந்து விபூதியிற்சேர்த்து தண்ணீரில் அதிற்கொஞ்சம் போட்டுக் குடிப்பிக்கவும். அவர்கள் தலை சுற்றியேயாடுவர். அப்போது வாய்மொழிகேட்டு முடியறுத்துவிடவும் தெய்வமும் வாடைவைக்கலாம்.

### 107-மறைப்புமை.

சிறுத்தவிளாயை யிரண்டாய்ப்பிளந்து ரவியில்வைக்க அல்லது எறித்திட அதில் நைலம்வரும். அதை ஏறழிஞ்சிவடவேர் சுட்டுக்கரிக்கி கொஞ்சம் போட்டிழைந்து லலாடத்திலிட்டுச்செல்ல தன்னை யாருங்காணார். ஷை மையானதுகலைய அம்மறைப்புநீங்கி ஆள்காணப்படுவன்.

### 108-சூதுவெல்ல.

சுடலையிலிருக்குங்கையாந்தகரைச் சமூலத்தை எருக்கன்பாலிலரைத்து ருண்டைசெய்து அதைமூலைப்பாலிலுரைத்துநெற்றியிற்றிலர்தமிட்டு சூதுபுரிய வெல்லுவர். எந்தவழக்கிலும் வெல்லுவர். இதிலும் சகலவசியங்கள் ஆகும்.

### 109-பன்றியைக்குத்த.

ஊர்பன்றியையாவது அல்லது காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி யெதையாவது குத்தவேண்டில், விஷ்ணுகிரந்தியை காப்புகட்டிவேரோடுமற்பிடுங்கி அவ்வேரை அரையிலும், தலையிலும்வைத்து ஷை பன்றிகளைக்குத்த அதுகள் மேல்விழாது மடிந்துவிடும்.

### 110-நெருப்பில்நடக்க.

தாளியுங் கொத்தான்சமூலமும் அரைத்து தனதுகால்களிற்றடவி நெருப்பின் மேல்நடக்க கால்கள்சுடாது. வேறு—மருக்காரைப்பூவும் உப்பும் பசும்பாலிலரைத்து உள்ளங்கால் விரல்களிற்றடவிப்பூசிநடக்க தனதுகால்கள்சுடாது. எந்நேரம் விளையாடினாலும் விளையாடலாம்.

### 111-கையில்நெருப்பெடுக்க.

கற்றாழையின் மணியும் வசம்புஞ்சேர்த்தரைத்து தனதுகைகளிற்பூசி டுகையாயுள்ள கட்டை நெருப்புகளைக்கைகளிலெடுக்க தன்கைகள்சுடாது வேகாது எத்தாயெடுக்கவும். நெடுநேரங்கூடாது.

## 112-கையில்மழுவெடுக்க.

குன்றிமணியிலேயும் மிளகும் இரண்டுஞ் சேர்த்துமெண்ணு அதைக் கைகளிற்றடவிப்பூசி மழுவினைக்காச்சி உருவ அக்கைகள்வேகாது சுடாது. இதையும் முன்போலவே எத்தாய்தான் உருவவேண்டும்.

## .113 அணைத்தவிளக்கெறிய.

ஒருகிரீசன்ஆயில்விளக்காகிலும் அல்லது கொழுப்புவற்றிவிளக்காகிலுஞ்கொளுத்திஎறியும்போதுஅதையணைத்துவிட்டு பயர்பாக்ஸ்குச்சியைக்கொளுத்திஅணைத்த வற்றிப்புகை காற்றுவாட்டத்திற்பிடிக்க, மறுபடியும் அது பற்றியெறியும் அவ்வாறென்னேரங்கொளுத்தினுலுங் கொளுத்தலாம்.

## 114. அரிசிவேகாதிருக்க.

அடுப்பினில் உலேயைவைத்து அரிசிக் கழுவிபோட்டவுடன், அதிற்கொஞ்சங்கஞ்சாவிதையைப்போட அவ்வரிசிகள்வேகாது.ஆனுல்இவவிதைகளே எதிரேறு சேர்த்துப்போட்டாலும் அதுகள் வேகாது மறுத்துவிடும். இன்னும் நவதானிய பயர்களும் அப்படியே வேகாது.

## 115. ஜலத்தொனி.

ஒரு அரை படியளவுக்கு திட்டமாயிருக்கும் பித்தளைச்சோடுதவலேயிற் கொஞ்சம் தண்ணீரைவிட்டு அதை யப்படியே யெடுத்து காதண்டைவைத்து உற்றுக்கேட்க அங்கு ஓசைகேட்கும். அவவோசையோ அத்தண்ணிரிவிருந்துண்டாயிற்றென்பார்கள் சரியன்று. அது தன்காதோஸை யென்பதற்குச் சந்தேகமில்லே.

## 116. கடிதமெறியாதிருக்க

ஒரு கடிதத்துண்டைப் படிகாரத்தூள் நீரிற்றேய்த்து நனைத்து உலர்த்தி மறபடியும் உ - விசை தோய்த்துதோய்த்து வுலர்த்தி அக்கடிதத்தை விளக்கிற் கொளுத்தச் சற்றுநேரம் அதுபற்று திருந்து பின்பு யெறிந்துவிடும். காகிதமோ அந்நேரமிருப்பது கடினம்.

## 117. நீரிலண்டவினோதம்.

ஒருகோழிமுட்டைக்குள்ளிருக்கும் அம்புலியெல்லாம்வூற்றிவிட்டு அதில் இருமுனைகளிலும் நேர்நேர் இரண்டு துளைகளைச்சரியாய்ச்செய்து அதினிறையச் சுண்ணும்புநீறுங் கெந்தகமுஞ் சமனிடையாய் நிறுத்துப் பொடித்து அதிலடைத்து அத்துளைகளுக்கு மெழுகாலே வாய்மூடி ஒருகுளத்தில் அல்லது கால்வாயில்விட்டுப்பார்க்க அதிலுள்ள வேடிக்கையைக் கண்டறியலாம்.

## 118· பொய்முட்டைபாக்க.

சோப்பென்னுஞ்சவுக்காரத்தை வெந்நீரிற்கரைத்துக்கொதிக்கவைத்து அதிற்கொஞ்சங்கிண்ணத்திலூற்றி அதில்சுங்கானைத்தோய்த்தெடுத்துகொண்டு வாயுதட்டண்டைவைத்தூத அதிலிருந்து முட்டைமுட்டையா யெழுமபிப்பாக்கும்.

## 119-நாய்குலையாதிருக்க.

முதலையின்பல்லும், அரிதாரமும் ஒன்ருய்த்துணியில்முடிந்து மேற் போட்டிருக்க எந்தநேரத்தில் எவ்விடஞ்சென்ருலும் நாய்களானது குலைக்காதுகடிக்காது சும்மாயிருக்கும் இதினுல்நாய்பயமுமிராது.

## 120. எழுதும் கறுப்பிங்கி செய்ய.

கடுக்காய்த்தோல் கஅ - பலம், அன்னபேதி அ - பலம், விளாம்பிசினி அல்லது கருவேலம்பிசினி எ - பலம், நல்லஜலம் கசரு - பலம் இதிற் கடுக்காய்த்தோலை மூன்னுதாக கஙூ - பலம் ஜலத்திற்போட்டு பொங்கவைத்துக்கொண்டே மிகுதியாயுள்ள கரு - பலம் ஜலத்தில் அன்னபேதியையும், விளாம்பிசினியையும் அரைத்துக் கரைத்து வைத்துக்கொண்டு முதற் கொதித்துக்கொண்டிருக்கும் கஙூ - பலம் ஜலத்தில் கொஞ்சங் கொஞ்சமாய்க் கரைத்து நன்ருய் வேகவைத்து இறக்கி பாத்திரவாயை துணியினுல் மூடிகட்டி ௩ - நாள் வைத்து பின்பெடுத்து வடிகட்டி புட்டியில் வார்த்து வைத்து எழுதவும்.

## 121. வேறு கறுப்பிங்கி செய்ய.

சாதாரணமான இங்கியிலாகிலும் அல்லது சுத்தஜலத்திலாகிலும் இண்டியன் கேக்கை இழைத்து யெழுதுமிடத்தில் மிகக் கறுப்பாகவிருக்கும். இது டிராயிங் வேலைகட்கு உபயோகிக்கலாம்.

## 122. மற்ருெரு கறுப்பிங்கிசெய்ய.

சூரத்துக்கடுக்காய்பொடி கரு - பலம், கருவேலன்பிசினி ௩௭ - பலம், அன்னபேதி அ - பலம், மாசிக்காய் ௩ - பலம், நல்ல ஜலம் க௩ரு - பலம், இதில் மாசிக்காய்களை சட்டியிற்போட்டு வறுத்து சிவந்தபின் கறுப்புநிறமாகுஞ்சமயத்தி லிறக்கி ஆறியபின் தூளாக்கி யதிற் கடுக்காய்த்தூளைச் சேர்த்து க௨ரு - பலம் ஜலம்விட்டு வேகவைத்து பின்பு ௰ - பலம் ஜலத்தில் மேற்கண்ட பிசினியையும் அன்னபேதியையும் அரைத்து அதிற் கொஞ்சமாக வெடுத்து இதற்குமுன் வெந்துகொண்டிருக்குங் கடுக்காய் நீரிற்சேர்த்து நன்ருய் வேகவைத்திறக்கி துணியால் வாய்மூடி கட்டி மூன்றுநாளைக்குப்பின் திறந்து வடிகட்டி புட்டியில்விட்டு எழுதவும் முற்கூறிய இங்கிக்காகிலுமிது மெத்த கறுப்பாயிருக்கும்.

## 123. மேலாகியகறுப்பிங்கிசெய்ய.

கடுக்காய்த்தூள் கக - பலம், அன்னபேதித்தூள் அ - பலம், ஆல்கஹால் திராவகம் என்ருல் ரிக்டிபைட் ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் ௩ - பலம், உயர்ந்த நீலபவுடர் - பலம், ஜலம் எஎ - பலம், இவைகளில் நீலபவுடரை ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினிற் போட்டு மூடிவைக்க அது மூன்றுமணிநேரத்தில் கரையுமிடத்தில் பின்னுங் கடுக்காய்த்தூளை ஜலத்திற்போட்டுக் காச்சி கொதிவந்தபிறகு அன்னபேதித்தூளைப் போட்டுக் காச்சி யிறக்கி ஒருமணிநேரத்தின்பிறகு வடிகட்டி நீலபவுடரைக்கலந்த ஆல்கஹால் திராவகத்தை முன் வடிகட்டியதில் வார்த்து மறுபடியும் வடிகட்டி புட்டியில்விட்டு யெழுதவும். இது மிகவு மேலாகவிருக்கும்.

## 124. சிவப்பு இங்கிசெய்ய.

ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் கஅ - பலம், மஜிண்டாபவுடர் கஉ - பலம், நல்லஜலம் கஉ௫ - பலம், விளாம்பிசினி எ௨ - பலம் இதுகளில் மஜிண்டா பவுடரை ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினிற்போட்டு மூன்றுமணிநேரம் மூடியிருக்க அது கரைந்துவிடும். விளாம்பிசினியைத் தண்ணீரிற்போட்டு சற்றுவேக வைத்து இறக்கி இளஞ்சூடாயிருக்கையில் மஜிண்டாபவுடர்போட்டு கரைந் துவைத்திருக்கும் ஒயினைவார்த்துக் கலக்கி வடிகட்டி புட்டியில்விட்டு எழுத சிவப்புநிறமாயிருக்கும்.

## 125. ஊதா இங்கிசெய்ய.

மேற்கண்டபடியே ஊதா இங்கிசெய்துகொள்ளவும். இதில் மஜிண் டாபவுடருக்குப்பதில் ஊதாபவுடர் சேர்க்கவும். மற்றவை சிவப்பிங்கியை ப்போற்செய்யவும். ஊதாபவுடர் - அவுன்சுக்கு ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின், ஆல்கஹால் திராவகம் வகைக்கு க - அவுன்சுவீதம் சேர்க்கவும்.

## 126. நீல இங்கிசெய்ய.

சிறந்ததாகிய நீலபவுடர் பிரஷியன் புளூபவுடர் வகைக்கு ௩ - பலம், ஆக்ஸாலிக் ஆஸிட் ௪ - பலம், விளாம்பிசினி க - பலம், ஜலம் ௩௰ - பலம், இதனுள் நீலபவுடரை ஆக்ஸாலிக் ஆஸிட்டிற் கலந்துகொண்டு மற்றதை சிவப்பு இங்கிக்குச் செப்பியபடி செய்துகொள்ளவும். இதிற் கொஞ்சம் அமாபிக் கம் சேர்க்கவும்.

## 127. பச்சை இங்கிசெய்ய.

மேலாகிய பச்சைபவுடர் அது(ஜங்கால்பச்சை) உ-அவுன்சு, கிரீம் ஆப டார்டார் க-அவுன்சு, ஜலம் கஉ-அவுன்சு, அதாவது (௪-பைண்டு) இவைகளை ஒன்றாகக்கலந்து நன்றாகவேகவைத்து பாதி சுண்டினபிறகு இறக்கி ஆறின பின் வடிகட்டிக்கொள்ளவும்.

## 128. மஞ்சள் இங்கிசெய்ய.

காம்போஜி ௪ - அவுன்சு, ௫ - அவுன்சு வெந்நீரிற்போட்டு அந்தஜலம் ஆறினபின்பு ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் ௳ - அவுன்சு சேர்த்து புட்டியில் விட்டு கொள்ளவும்.

## 129. வெள்ளை இங்கிசெய்ய.

நன்றாயலம்பின கோழிமுட்டைத் தோல்களைத் தண்ணீர்விட்டு கழுவ த்திலரைத்துத் தூள்செய்து உலரவைத்தபின் கம் அம்மொனியாக் என்னு ம் பிசினியில் வெண்மையாயுள்ளதை யெடுத்து சுத்தமாக வலம்பியபின் இதனை ஆசெடிக் ஆஸிட்டில் ஓரிரவுவைத்து காலையில் மெல்லிய வஸ்திரத் தில் வடிகட்டி இதனுள் வேண்டிய முட்டைத்தோல் பொடியைச் சேர்த்து சற்றுநேரமிருக்க அது வெள்ளை இங்கியாகும். இதனைக் கறுப்புகாகிதத்தி ன்மீதெழுத அக்ஷரங்கள் வெண்மையாக மலினமில்லாமல் சுத்தமாய் கா ணப்படும்.

### 130. காப்பிங் இங்கிசெய்ய.

ஊதா இங்கி அ - பலம், க்லஸரின் கூ - பலம், சேர்த்து உபயோகித்துக்கொள்ளவும்.

### 131. மற்றொருவிதஞ்செய்ய.

சாதாரண கறுப்பு இங்கி க - அவுன்சு, வெள்ளைசர்க்கரை கஉ கிராம் சேர்த்து செய்துக்கொள்ளவும்.

### 132. இன்னுமொருவிதம்.

தனக்கிஷ்டமாகிய நிறமுள்ள இங்கி க - அவுன்சு, க்ஷாரபத்துபோல் பக்குவமாகக் காச்சின சர்க்கரைபாகு கஉ - டிராமுங்கலந்து உபயோகித்துக் கொள்ளவும். இச்சர்க்கரைபாகினிற்கு ஸிம்பில்ஸிரப் என்று இங்கிலிஷ் பெயர்.

### 133. கண்ணாடிமேலெழுதுமிங்கி.

சோடியம் ஸிலிகேட் ௩ - அல்லது ௪ - பலம், சைனின் ஒயின் க- பலம் ஈதிரண்டையுஞ்சேர்த்து ஒரு புட்டியில்விட்டு கார்க்கடைத்து வைத்து கண்ணாடியின்மீதெழுதிட அதை குலுக்கி ஒரு எஃகுகம்பியினால் எழுதியடிக்கவும்.

### 134. இரகசியகடிதமெழுதுமிங்கி.

நைட்ரேட் ஆப் பிஸ்மத் என்பதை தண்ணீரிற்கலந்து பேனாவிற்றொட்டு கடிதத்தின்மீ தெழுதுமிடத்தில் அது வுலர்ந்தபின் மறைந்துவிடும். அக்கடிதத்தை தண்ணீரிற் றோய்க்குமிடத்தில் அவ்வெழுத்துகள் நன்றாய்த் தெரியும்.

### 135. தார்பூசும்விதம்.

தார்பூசவேண்டிய இடத்தை முன்னு தாய் பெருக்கி சுத்தப்படுத்தி யதன்மேல் இலேசாக தார் பூசி அது உலர்ந்துபோகுமுன் ஓர் ஜல்லடையில் மணலைப்போட்டு தார்பூசிய விடமெங்கும் அம்மணல் விழும்படி ஜலிக்கவும். அது வுலர்ந்தபின் மறுபடியும் முன்போல இலேசாய் தாரைப்பூசி யதன்மேல் மணலை ஜலிக்கவும். இவ்வண்ணம் நாலைந்து ஆவர்த்தி செய்யும்பக்ஷத்தில், அப்பூமி மெத்தவுங் கெட்டிப்படும்.

### 136. புரைகுத்துமுபாயம்.

பாலுக்குப் புரைகுத்த மோர் அகப்படாதபக்ஷம் பதில் புளியைப்போட்டுவைக்கவும். அது தயிராகத்தோய்ந்துவிடும். இது சிலர்க்குத் தெரிந்த விஷயமே.

### 137. விசேஷம்வெண்ணெயெடுக்க.

வெண்ணெயானது அதிகமாகவேண்டில், ஒரு படி பாலினில் கால்படி நெய்யைச்சேர்த்து காச்சி புரைகுத்தி மறுநாள் கடையுமிடத்தில் வெண்ணெ அதிகமாகவிருக்கும். இது அவ்வளவு சிறந்ததாயிராவிடினும், தேகத்திற்குக் கெடுதிசெய்யமாட்டாது.

## 138. நாட்டு சோப்புசெய்ய.

சுண்ணும்புக்கல் ரு - சேர், உழமண் ய - சேர, தேங்காயெண்ணெ ய-சேர்; கொழுப்பு ரு - சேர், இவைகளில் சுண்ணும்புக் கற்களை சய - சேர் ஜலத்திலும், உழமண்ணை உய - சேர் ஜலத்திலும் போட்டு வெவ்வேறுய்க் கரைத்து தனித்தனியாய் ஒவ்வொரு பாத்திரத்தில் விட்டுவைத்து நாளொன்றுக்கு மூன்றுதிரம் கலக்கிவைத்து, நாலாநாள் ஒவ்வொன்றினிலிருக்கும் தேட்டைத்தண்ணீரில் இரண்டு இனுசுகளையும் ஒன்றுய்க்கலந்து ஓர் பாத்திரத்தில்விட்டு அடுப்பின்மீதேற்றி காச்சுகையில், கொழுப்பையுந் தேங்காயெண்ணெயும் ஒன்றுகச்சேர்த்து வுருக்கி, முன்காச்சிய தேட்டைத்தண்ணீரில் இதைக் கொஞ்சம் கொஞ்சமாய் வாரத்து துழாவிக்கொண்டு வரவும், அது குழம்பாகுஞ்சமயத்தில் தமக்கிஷ்டமாகிய அச்சுமுதலிய கருவிகளில் வார்த்துக்கொள்ளவும். இதை சுண்ணும்பு சோப்பென்பர்.

## 139 ஜோதியெழுத்து.

கொஞ்சந் தீமுருகல்பாஷாணத்தை யெடுத்து இங்கியிலுரைத்து நன்றுய்மத்தித்து அதில் இறகுபேனு அல்லது ஸ்டீல்பேனுவைநாட்டி,அவ்விங்கியையெடுத்து தாக்கு கடிதத்தலெழுதி உலர்ந்தபின் அதை இருட்டினிற் பார்த்துப் படிக்க அவவெழுத்தியாவும் வெண்மையாய் நன்றுய்த்தெரியும்.

## 140. நீரைத்தேடுமுட்டை.

ஒரு முட்டைக்குள்ளிருக்கும் அம்புலியைபோக்கி நீரிலுள்ள ஒரு பெருத்த அட்டையைப்பிடித்து அதில் விடுத்து மெழுகினுல் வாயை மூடி ஊசிபுக ரந்தனஞ்செய்து நீருள்ள குளம் அல்லது குட்டைகளின் பக்கத்தில் சற்றெருத்திக் கட்டாந்தரையில் அசையாதுவைத்துவிட அவ்வட்டையானது குளிர்ச்சியான நீரைத்தேடி நெட்டிக்கொண்டேபோக அம்முட்டையானது அக்குட்டைத்தண்ணீர்பக்கமே உருண்டுக்கோண்டேபோம். மற்றபக்கங்களிற்போகாது.

## 141-விற்காவுடமைவிற்க.

எப்பொழுதும் விற்காத பண்டங்கள் விற்கவெனில், நரி-புரி-எரி-என்னுமந்திரம் முதலில் இலட்சமுருவேற்றி முடிவானபின் தான் யாதாமொரு பண்டத்தை இம்மந்திரஞ் செபித்துக்கொண்டே தொடவும் தொட்டது முதலியாவுஞ் சுறுசுறுப்பாய் விற்காதவை யெல்லாம் உடனே விற்பனை[...]ய் விடும்.

## 142-நாவடக்கம்.

நாயரில் வட்டக்கிலுகிலுப்பையை தான் ஒருமனதாய் கன்னிக்கழியாதகிறுவன்கையால் காப்புகட்டி தூபதீபநைவேத்தியங் கொடுத்து அச்செடியைக்கெல்லி வேரருமற்பிடுங்கி சதா தன்சிரசில் வைத்துக்கொள்ளவும். தானெ எதிரிகளிடத்திற் பேசுகையில்அவாள் நாவற்றுப் பிதுர்கலங்கி எதிர்த்தொன்றும் பேசார்கள்.

## 143-வாடைவகை.

குளிக்குமஞ்சள்தேறு-கூ-கண்டுவேளையிற் போட்டுவைக்கவும், அதிலுள்ள கண்டானது சிலதை வெளியிற்றள்ளிவிட்டதைநீக்கி சிலது உள்ளிருப்பதையெடுத்து அதைப் பரிமள கெந்தத்தோடு சேர்த்தரைத்து தனது தேகத்திற்பூசிசெல்ல அரசர்முதல்வாடையாம்-மாதர்களும் வணங்கிவருவார்கள்.

## 144-வசியக்காப்பு.

திலச்சன்பிள்ளை ஆதியுந்திக்கொடியை யறுத்து அதைத் தேனில்மண்டல மூறவைத்து அதன்பின்னெடுத்து அதைப்பூசித்துத் தியானித்து செம்பு, வெள்ளி, தங்கம் இம்மூன்றையுமுருக்கி தகடுதட்டி கடகஞ்செய்து அதனுள்ளிதை யடைத்துமூடி அருக்கனில் சத்திக்கெதிர்வைத்து தூபதீபனைவேத்தியங்கொடுத்து வலக்கரத்திற் போட்டிருக்கவும். மன்னர்கள் முதல் மாதர்களும், பிரஜைகளியாவும் வசியமாம்.

## 145-சர்வபீடைநீங்க.

இதற்கு ஆறுகோணங்கீறி அதனுள் சடாக்ஷரமாகிய-அ-உ-ம-சி-வ-ய-அவ்வாறு அறைகளிலும்போட்டு அதினடுவறையில் ஐயும்-கிலியும் -சவ்வும்-போட்டு அம்முனைகளிற் சூலங்களிட்டு அதைச்சுற்றி ஓங்காரம்படிந்து அதற்கு மஞ்சள்குங்குமமணிந்து ஐயும் கிலியும் சவ்வும் எனக-அ-உருசெபித்து பூசித்து ரக்ஷாபந்தனங்கட்டிடவும், சர்வபீடைகள், பலபிணிகள், பில்லிசூனியம் ஏவல்கள் தீரும்.

## 146-சுரமகல.

இதற்கு முக்கோணங்கீறி அதினடுவில் சிங்-அங்-றிங்-எழுதி முப்பிரிமூன்றுவர்ண நூலாற்கட்டி தூபதீபனைவேத்தியத்துடன் பூசித்து குளிசமாடி சுரம்வந்தவர்க்கு கட்டிவிடவும், எவ்விதச் சுரங்கள் பிணிகள் விலகி நீங்கிவிடும்.

## 147-சர்வதோஷந்தீர.

கையில் விபூதிவைத்து அதின்மேல் இம்-வங்-சங்-எனவுமெழுதி இதையே ஈஅ-உருசெபித்து அந்த விபூதிகொடுக்கவும், சகலதோஷம், நீரிழிவு, மற்றதுந்தீரும். இவ்வாறே கூ-நாள்விடாது கொடுக்கவும்.

## 148-பிளவைகள்கரைய.

முன்போலக்கையில் விபூதியைவைத்து உம்-வங்-தம-என்று-ஈஅ-உருசெபித்து அந்த விபூதிகொடுக்கவும், அதின்மேல் தடவவும், கூ-நாள் அந்திசந்தி புண்களாறும், பிளவைகளகரையும், குழிரிணமாறும், சிலந்திகோயாவுந்தீரும்.

## 149-பிரசவிக்க.

ஆமணக்குந்தில் எண்ணெ அல்லது வெண்ணெயைவிட்டு டங்-டும்-எனஈஅ-உரு செபித்து அம்மாது வயிற்றின்மேல் இறங்கத்தடவிப் பூசவும், அரைநாழிகைக்குள் சிசுவானது விரைவில் தரையில்வந்து விழுந்துவிடும்.

## 150-கண்புகைபடலந்தீர.

ஒரு ஏனத்தில் தண்ணீரைவிட்டு லா-லூ-லீ-என்று மந்திரம் ௱அ-உரு செபித்து அதைவாயினால் ௩-திரமூதி அவாள்கண்களைச்சுற்றிபூசவும், கண்ணடைப்பறும், படலகாசம்நீங்கும், கண்புகைச்சலாறும் கண்ணீர்முட்டலுகமலும்.

## 151-கனவில்விந்துநஷ்டமற.

கனவில்விந்து கலிதமாவதகலவெனில், காரீயத்தை அனைகமுஞ்சிடையுருக்கி உருண்டையாக்கி அதினடுவிற்றுளைசெய்து அதை இடுப்பினிற்கட்டிக்கொள்ளவும். அவன் பாதிராத்திரியில் கூவி கனவுகண்டு அதினால் இந்திரியங்கலிதமாய் விடுவது அதுமுதல் நின்றுவிடும். மோகினியும் விலகிவிடும்.

## 152-கனவுகாணாதிருக்க.

பிரதிதினமும் மாறாது கனவுகண்டிடலேகவெனில், படிகாரத்தை இராத்திரியில் தனது தலையின் கீழ்வைத்து தான்தூங்கவும் அவன்கனவுகாணாதிருப்பன். அதில் எவ்வித பசாசத்துவமும் காத்துக்கறுப்புமுதலிய மோகினியும் நின்றுவிலகிவிடும்.

## 153-சொக்கட்டான்சூதுவெல்ல.

சொக்கட்டான்முதலிய சூதாடுவதிற் கெலிக்கவெனில், மந்திரம்(தத்த தத்த சகுனி சகுனி நில்லு நில்லு எதிராளிகுணமுங் கெலிப்பும் எனக்கே பலிக்கச்சுவாகா) வென்று ௱அ-உருசெபித்து மூன்னுதாய் ஓதியபின் சொக்கட்டான் சூது முதலியவை விளையாடவும் தான்கெலித்திடுவன்.

## 154-உடைந்தகருங்கல்லொட்ட.

கருங்கல்லானது உடைந்தது ஒன்றாய்ப் பொருந்தவெனில், பழையச்சிட்டக்கல் தூளை சேராங்கொட்டைப் பாலிலரைத்து உடைந்த கருங்கல் வாய்களிற் பொருந்தத்தடவி ஒன்றினோடொன்று படியவைத்து ௰-நாள் நிழலிலுலர்த்திப் பேர்த்துப்பார்க்க அதுபோகாது கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும். அதை நட்டுவைத்து யானையைக்கட்டி யிழுத்தாலு முடையாது.

## 155-கடித்தபல்லுதிர.

கடித்தவர் பற்களுதிரவேண்டுமெனில், மனுஷியான்கடித்த விடத்தில் கோழியெச்சமும் சபேத்தியாவுங்குழைத்துகடிவாயிற்றடவ மூன்கடித்தவர் பற்கள் எத்தனையோ அத்தனையும் உதிர்ந்துவிடும். இவாளுக்கும் கடிவிஷரணம் ஆறிவிடும். உதிர்ந்தபற்கள் மறுபடியும் முளையாது.

## 156-சர்க்கரைகசக்க.

ஒருதட்டில் கடுப்பேர்பாதியிற் றடைகட்டி ஒருபக்கம் சர்க்கரையும், மற்றொருபக்கம் இலுப்பைக்கொட்டைத் தூள்போட்டுவைத்து சர்க்கரைசக்கவேண்டுமாகின், அவாள்வாயில் இலுப்பைக்கொட்டைத் தூளைப்போடகசக்கும். சர்க்கரைதித்திக்கவேண்டுமாயின், சர்க்கரையைப்போடத் தித்திக்கும்.

### 157-வேர்க்கடலைகசக்க.

முன்போலவைத்த ஒரு தட்டில்பேர்பாதிக்கு வேர்க்கடலைப் பருப்பும், மற்றோர் பேர்பாதிக்கு வேப்பங்கொட்டைப்பருப்பும் போட்டுவைத்து ருசிக்கவேண்டுமாயின், வேர்க்கடலையும், கசக்கவேண்டுமாயின், வேப்பங்கொட்டையும் அவாள்வாயிற்போட இனிப்புங் கசப்புந்தெரியும்.

### 158-நரைமாற.

செவ்வாய்க்கிழமைதினம் தவசுமுருங்கைக்கு காப்புகட்டி அதின்வேரைக் குளிசமாடி தான் கட்டிக்கொண்டு ஓர் பூமரத்தைத் தழுவிப்பிடித்து என்னைவிட்டு நின்னைப்பற்று வென்று ௩-திறஞ்சொல்லி அவாள்திரும்பிப்பாராமல் வீட்டிற்கு வந்துவிடவும், அதுமுதல் நரைத்த உரோமங்களெல்லாமாறி கறுத்துவரும்.

### 159-நரைமயிர்கப்பு.

நரைத்தமயிர் கறுக்கவேண்டுமெனில், மாசிக்காயைச் சிவக்கச்சுட்டதினோடு தசனுப்பொடியைச் சேர்த்தரைத்து நரைமயிர்களைச் சோப்பினாற்றேய்த்துக்கழுவி இப்பொடியைப்பூச இக்கப்பினால் வெளுத்த உரோமங்கள் றுத்துவிடும்.

### 160-திருட்டுபிடிக்க.

ஒரு கோழிமுட்டைக்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு புட்பஞ்சாத்தி சற்றுபொறுத்து அதைக் கையடக்கஞ் செய்து மறைத்துவிட்டு அதைப்போலோர வேறே வாத்துமுட்டைக்கு மஞ்சள் குங்குமமிட்டு அதை யெடுத்துக்காட்டி இக்கோழிமுட்டை உப்பியதுபோல்திருடியவர்வயரும் இப்படிதான் உப்பி வெடிகரும என்றுசொல்ல, திருடிய சொத்தை பயந்து சேர்த்துவிடுவாரகள்.

### 161-நித்திரையற்றிருக்க.

இரவில் யாதாமொருவர் நித்திரையற்றிருக்க வேண்டுமெனில், அவாள் இரண்டுகைநிறைய அல்லது ஆழாக்கு புதியதேனைக்குடித்துவிடவும், அன்றுமுதல் இரவில் நித்திரைவரமாட்டாது அதற்குமுறிவு, எலுமிச்சன்பழரசமுஞ் சர்க்கரையுஞ் சேர்த்துண்ணவும்.

### 162-மீன்படாதிருக்க.

வள்ளிச்செடிக்கு ஞாயிறில் காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி அதை வளையமாடி ([illegible]) ௱௮-உருசெபித்து அதை வலையிற்கட்டி தண்ணீரில்வீச அவ்வலையில் ஒருமச்சமேனும் அகப்படாது. அதை அவிழ்த்துவிட்டுப்போட மச்சங்கள் வலையிற்படும்.

### 163-மீன்களையழைக்கவர.

துவிடும் என்னும் வெவ்வேறாய்த்துவைத்து இரண்டும் ஒன்றாய்க்கலந்து ([illegible]) ௱௮-உரு செபித்து முன்போலப்பூசித்து அதை தண்ணீரிற்றெளித்து மீன்களைவாவென்றழைக்க யாவும் ஒன்றாய்த்திரண்டுருண்டுவலையிற்பட ஓடிவந்துசேரும.

## 164-மீன்வலையிற்பட.

மச்சங்கள்வலையில் அகப்படவேண்டுமெனில், கவர்ந்திருமல் நிமிர்ந்திருக்கும் அகத்திக்கு ஆதிவாரநாள் காப்புகட்டி தூபதீபனைவேத்தியங்கொடுத்தலியதுடன் ஒரு எலுமிச்சம்பழம் அல்லது கோழிக்குஞ்சு பலிகொடுத்து வேரறுமறப்பிடுங்கி (வம்) ௱அ-உருசெபித்துப் பூசித்து அவ்வேரை வலையிற் கட்டித் தண்ணீரில்வீச அவ்வலைநிறைய மச்சங்கள்வந்து அகப்படும்.

## 165-பயிர்கள்செழிக்க.

நாயுருவிக்கு முன்போல காப்புகட்டி அதை வேரறுமறப்பிடுங்கி வினைய மாடி (மா) ௱அ-உருசெபித்துப் பூசித்து வயலின் நீர்த்துறையிற் புதைத்து வைக்கவும், அவ்வயலிலுள்ள எல்லாப் பயிர்களும் நன்றாய்ச்செழித்து விளையும். அதிற் சேதங்கள்வாராது மிகுதியாய் உபரியாகும்.

## 166-அலைமிகுதியடிக்க.

நவாச்சாரமும் கோழிமுட்டையோடும் இரண்டும் பொடிசெய்து (பா) ௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து அதைத் தண்ணீரிற்போட அதில் மிகுதியாய் அலையடித்து சமுத்திரம்போற் றண்ணீர் பொங்கிவரும்.

## 167-அலையானதடங்க.

துருசும் விஷ்ணுகாந்தியும் இரண்டும் வெவ்வேறாய்ப் பொடிசெய்து (ஆ) ௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து சமுத்திரத்தில் விட்டெறிய, அங்கடிக்கும் அலையானதடங்கி பொங்கியெழும்பாது நின்றுவிடும்.

## 168-சுடுகைநீர்குளிர.

முடக்கொத்தானை காப்புகட்டி வேரறுமறப்பிடுங்கி யுலர்த்திப் பொடிசெய்து (ஐ)௱அ-உரு செபித்து முன்போலப் பூசித்து சுடுகையான தண்ணீரிற்போட, அத்தண்ணீர் குளிர்ந்துவிடும்.இவைகளைத்தக்கபடி இடைகண்டு போட நன்மை. இல்லாவிடிற்கெடும்.

## 169-குளமுடையாதிருக்க

அமுக்குராவைக் காப்புகட்டி வேரறுமறப்பிடுங்கி குளிசமாடி (கிலீம்) என்று-௱அ-உருசெபித்து முன்போலப் பூசித்து குளக்கரையிற் புதைத்து வைக்கவும். அக்குளமானதுடையாது அக்கரையும் புறளாது கற்பாந்தரமாகவிருக்கும்.

## 170. வெள்ளைச்செம்புசெய்ய.

செம்பு ச - பங்கு, நாகம் ௩ - பங்கு, நிக்கல் உ - பங்கு, நிறுத் தெடுத்து இவைகளில் முதல் நிக்கலை கெட்டியான மூசையிலுருக்கி, அதன்பின் செம்பை யதிற்போட்டு இவ்விரண்டும் நன்றாயுருகியதில் நாகத்தைப்போட்டு பாவுங கலந்துருகியவுடனே அதிவிரைவிலிறக்கி தனக்கிஷ்டமான அச்சு கருவிகளில் வார்த்துக்கொள்ளவும்.

## 171. வேறுவிதஞ்செய்ய.

நிக்கல்ஸில்வர் ௨ - பங்கு, செம்பு ௫ - பங்கு, நாகம் ௨ - பங்கு, நிறுத்தெடுத்து மேற்சொல்லியதைப்போற் செய்துகொள்ளவும். இது மெத்த வெண்மையாயிருக்கும்.

## 172. மற்றோர்விதஞ்செய்ய.

செம்பு ௫ - பங்கு, நாகம் ௩ - பங்கு, நிக்கல் ௨ - பங்கு இவைகளை முற்கூறியபடி செய்யவும். இது பிரசித்தமாகிய ஜர்மன் ஸில்வர் என்ன விசேஷமாய்க் கைக்கொள்வர்.

## 173-விளைவுபலிக்க.

ஸ்ரீதேவி செங்கழுநீருக்கு காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி அதை குளிசமாடி (ஏ)-என்று-௱அ-உரு செபித்து முன்போலப்பூசித்து அதைப்புலத்திற் புதைத்துவைக்க அப்புலமானது நன்றாய்விளையும். சாவி சேதாரம்ஒன்றும் நேராது.

## 174. காகித எண்ணைமாற.

எந்த காகிதத்தில் எண்ணைபட்டிருக்கிறதோ அந்த காகிதத்திற்கு சுத்திசெய்த கற்பூரத்தைலத்தை பிரஷினாற் பூசி அது வுலர்ந்தபின் எண்ணைபட்டிருக்குமிடத்தில் ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் என்னுந் திராவகத்தைப் பூசி, கொஞ்சநேரம் வைக்குமிடத்தில் காகிதத்திலுள்ள எண்ணை சிக்கெல்லாம் கக்கி முன்போல் சுத்தமாயிருக்கும்.

## 175. பித்தளைபாத்திரங்களைசுத்திசெய்ய.

சுத்திசெய்யவேண்டிய பித்தளைப்பாத்திரங்களை நெருப்பினருகில்வைத்து கொஞ்சநேரம் சிறுக சூடெழுக்காச்சி அதுகுளிர்ந்துவிடுமுன் நவாச்சாரத்தை தூள்செய்து தண்ணீரிற்கலந்து அதினால் பலவித பித்தளைபாத்திரங்களைத் தேய்க்குமிடத்தில், அதிலிருக்கும் சிலும்புமுதலியவைநீங்கி சுத்தமாய்ப் பிரகாசிக்கும்.

## 176. மற்றொருவிதம்.

பைக்ரோமேட் பொட்டாஷ் ௧-துலாமுள்ளதை மெழுகைப்போலரைத்தெடுத்து ஸல்பரிக் ஆஸிட் ௨ - துலாம்சேர்த்து ௩ - துலாம் தண்ணீரில் இவ்விரண்டையுங்கலந்து மலினமாகிய பித்தளைச்சாமான்களை இதில் நனைத்து தேங்காய்நாரில் அல்லது அதின் பஞ்சினால் தேய்க்கவும், மெத்த பரிசுத்தமாயிருக்கும்.

## 177. இன்னொருவிதம்.

நைட்ரிக் ஆஸிட்டை ஒரு குச்சியிற் றுணியைச்சுற்றி அதினாற் கொஞ்சங்கொஞ்சமா யெடுத்து பித்தளைச்சாமான்களின்மீது தேய்த்து துவர்யினால் துடைக்கவும் பரிசுத்தமாயிருக்கும்.

## 178. பால்முட்டைப்பறக்க.

காட்டாமணக்குப் பாலைக்கறந்து ஓர் கிண்ணத்தில் விட்டுக்கொண்டு ஒருபனைநாரில் சுருக்குமுடிபோட்டு அதினடுவிற் றுளைவிட்டுப் பாலிற்றோய்த்து வாயண்டை வைத்தூதவும். அதிலிருந்து அப்பாலில் முட்டை முட்டையாய்ப் பறக்கும்.

## 179. முட்டைக்கூத்தாட.

ஒரு கோழிமுட்டைக்குள் அம்புலியாவும்போக்கி அதிற்கொஞ்சம் காரமுள்ள கெந்தகத் திராவகத்தை யூற்றி மெழுகாலே வாய்மூடி அதை மேஜையின்மேல்வைக்க, அம்முட்டையானது குதித்துக் குதித்து கூத்தாடிக்கொண்டேயிருக்கும். ஆனால் அது தரையில்விழாது பக்குவஞ்செய்யவும்.

## 180. புட்டிநீரிற்புழுவாக.

ஒரு வயாகலப்புட்டியின் கார்க்கினுள்ளே கொஞ்சங்குடைந்து அதில் தந்தத்தூளையும் ரப்பர்தூளையும் நிறப்பி யடக்கிவைத்துப் புட்டியில் வ-அு சர்க்கரையைக்கொட்டி வெந்நீர்விட்டுக் கார்க்கைபிகிந்துக் குலுக்கிவிட அக்கார்க்கின் கீழுள்ள தூளெல்லாம் அதில் விழுந்துப் புழுவைப்போல் செளிவது பார்வைக்குப் பளிங்காய்த்தெரியும்.

## 181. மதில்மரம்பட.

கோயிலின்மதில் - அல்லது வீடு மெத்தைகளின் சுவர்களில் பக்ஷிகளின் எச்சத்தினால் முளைத்திருக்கும் மரஙகள், செடிகள், கொடிகள், பூடுகள் முதலியவைகளின் வேரைக்கொஞ்சம் வெட்டி, அதில் நல்லெண்ணை நவாச்சாரம் சர்க்கரை ரு-ம் சாரித்து தடைவிவைத்திருக்க, ச-டு நாளைகளுள் அவைகளுலர்ந்துபட்டுபோம். இதையேவிருக்ஷங்களின் ஆணிவேரிற் றடவ இவ்வாறாகும்.

## 182 செல்லுசிதர.

சுவர்களில் அல்லது மரஙகளில் செல்லுப்பிடித்திருந்தால் அதைத்தட்டிவிட்டு அவ்வளையிற்கொஞ்சம் நவாச்சாரந் துறுத்து சர்க்கரைபோட்டு மூடிவைத்திருக்க, அச்செல்லுகள் அல்லது கரையான்கள் கூட்டோடேயொழிந்துப் போய்விடும்.

## 183. வேறுருவிதம்.

வாஷிங் சோடாவைப் பொடித்து தண்ணீரிற்போட்டு அது கரைந்தபின் இத்தண்ணீரில் பித்தளைப்பாத்திரஙகளைப் போட்டு அடுப்பின்மீதேற்றி கொஞ்சநேரம் எறிவித்தெடுக்குங்கால் அப்பித்தளையினிலிருந்த சிலும்பகன்று சுத்தமாயிருக்கும்.

## 184. அல்யூமினியம்பாத்திரமசுத்திசெய்ய.

சீமை அப்பளாகாரமென்னுஞ் சோடாவுப்பை வெந்நீரிற்போட்டு அல்யூமினியம் பாத்திரஙகளைத் தேய்க்குமிடத்தில் அது சுத்தமாக வெள்ளியைப்போலப் பிரகாசிக்கும்.

### 185. பச்சைப்பால்கட்டிவிட.

பச்சைப்பாலில் முசல்கொம்பு ரசத்தைவிட்டு கொஞ்சநேரங் குளிர்ச்சியாயுள்ளவிடத்தில் வைத்திருக்க, அப்பாலானது இருகி கட்டிவிடும். இவ்வாறு குட்டிப்படலாவிலுமாம்.

### 186. மற்றொருவிதம்.

பச்சைப்பாலில் காட்டுத்தமர்த்தன்பாலைக் கொஞ்சஞ்சேர்த்து அப்படியே குளிர்ச்சியான இடத்தில் வைத்தமாத்திரத்தில் அந்தப்பாலிருகிக் கட்டிவிடும். இதிற் றாதுபுஷ்டியைக் கொடுக்கும்.

### 187. துணிசாயங்கெடாமற்றுவைக்க.

குளிர்ந்த ஜலத்தில் காலவுன் சோப்பைப்போட்டு அது கரையும் வரையில் கொதிக்கவைத்து அதிற கொஞ்சம் படிகாரக் கட்டியைப்போட்டு இரண்டும் கலக்க கொதிக்கவைத்து துவைக்கவேண்டிய துணிகளை இந்த ஜலத்திற் றுவைத்து வுலர்த்தி, மறுபடியும் ஜலம் வேண்டுமாயின், அதில் படிகாரத்தூளைச் சேர்க்கவும், இவ்வண்ணமாய்த் துவைக்க துணிகளின் சாயங் கிஞ்சிற்றேனும் போகாது

### 188. கறுப்பு அரக்குசெய்ய.

வெனிஷியன் டர்ப்பண்டயின் கஅ - பலம், அவுலரக்கு ௩௰ - பலம், ரோசனம் ௬ - பலம், வேண்டியவரைசகும ராம்பிளாக், இதுகளில் அவுலரக்கையும் ரோசனத்தையுந் தூள்செய்து ஒரு பானையிற்போட்டு சிறுதீயாயெரித்து நன்றாயக் காய்கையில் ராம்பிளாக் பொடியைப்போட்டுக் கலக்கி, எரிவிக்காது அனலில்வைத்து வெனிஷியன் டர்ப்பண்டயினை விட்டுக் கலக்கிவைத்தவுடன், இதை மேடுபள்ளமின்றி பளபளப்பாய் ஈரமுள்ள கருங்கல்லின்மீது ஒரு கரண்டியால் கொண்டு வார்த்து கைகளினால் தண்ணீரைத் தொட்டு இஷ்டப்படி பெருமனுகவும, நீளமாகவும் அதனையுருட்டி தண்ணீரிற் போட்டுவிடவேண்டும் இது முத்திரைபோடவும், சீல்செய்யவும், மற்றதற்கு முபயோகிக்கவும்

### 189 நீல அரக்கு செய்ய.

அவுலரக்கு பலம் உ௱௫, ரோசனம் பலம் ௱௫, நீலபவுடர் பலம் ௱௫, வெனிஷியன் டர்ப்பன்டைன் பலம் கஉ௫, இவைகளை மேற்சொல்லியபடி செய்துகொள்ளவேண்டும்.

### 190 சிவப்பு அரக்குசெய்ய.

அவுலரக்கு பலம் ௱௫, இங்கிலியத்தூள் பலம் அ௫, கர்ப்பூரதைலத்துடன் சேர்த்தரைத்த சீமைசுண்ணாம்பு விழுது பலம் ௱௫, வெனிஷியன் டர்ப்பன்டைன் பலம் ௪௱௫, இதுகளை மேற்கண்டபடி செய்துகொள்ளவேண்டும

### 191. தோல்கட்குப் பூசும் வார்னிஷ்.

அவுலாக்கு பலம் கஉ, வெள்ளைகற்பூரத்தைலம் பலம் ரு, சாண்டர்க்ஸ் பலம் உ, ராம்பிளாக்கு பலம் க, ஸ்பிரிட்ஸ் ஆப் டர்ப்பன்டைன் பலம் ச, ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் பலம் கூசு, இவைகளில் அவுலாக்கையும் சாண்டர்க்ஸையும் பொடித்து ஒரு பானையிற்போட்டு அடுப்பின்மீதேற்றி சிறுகவெரித்து அது கரைந்தவுடன் ராம்பிளாக்கைப் பொடித் ததிற்போட்டு கலக்க வைத்திடும்பின் அதைக் கீழிறக்கி ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினை அதில் விட்டுக் கலக்கி அதன்பின் கற்பூரத்தைலத்தை விட்டுக்கலக்கி மறுபடியும் ஸ்பிரிட்ஸ் ஆப் டர்ப்பன்டைனை விட்டு யாவும் ஒன்றாய்க்கலக்கத் துழாவி ஆறவைத்து புட்டியில் விட்டுவைத்து தோல்களுக் குபயோகித்துக்கொள்ளவும்.

### 192. மரங்கட்குப் பூசும் வார்னிஷ்.

எந்த மரச்சாமான்களுக்கு வார்னிஷ் பூசவேண்டுமோ அதைப் பட்டைச்சிலையினாற் றேய்த்து அதன்பின் மஞ்சள்மெழுகை மண்பாத்திரத்திற் போட்டு உருகவிட்டிறக்கி ஆறிவருஞ்சமயத்தில் கொஞ்சங் கற்பூரத்தைலத்தைவிட்டு இந்த மெழுகை எடுத்து துணியில் வைத்துக்கொண்டு மரச்சாமான்கட்கு நன்றாய்த்தடவி, அதன்பின் பட்டைசிலையால் தேய்த்து மறுபடியும் வார்னிஷ் எண்ணெயைப் பூசுமிடத்தில் அது நன்றாய்ப்பிடித்திருக்கும். இந்த மெழுகு மெத்தச் சூடாயிருக்கையில் கற்பூரத்தைலத்தை வார்க்குங்கால் அது பற்றிக்கொள்ளும்.

### 193. மற்றொரு வார்னிஷ்.

சாண்டர்க்ஸ் உசுய பலம், அவுலாக்கு கூய - பலம், ரோசனம் கஉஉ - பலம், ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் கூறு - பலம், வெனிஷியன் டர்ப்பன்டைன் கஅய - பலம், இவைகளில் முதல் மூன்று தினுசுகளையும் நன்றாய்ப் பொடி செய்து ஒரு பானையிற்போட்டு சிறுகவெரித்து யாவும் நன்றா யுருகி தண்ணீராகும்பின் இறக்கிவைத்து ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினை கொஞ்சங் கொஞ்சமாய்விட்டு கலக்கிக்கொண்டிருந்து முடிவில் டர்ப்பன்டைனைவார்த்து வைத்துக்கொண்டு உபயோகிக்கவும்.

### 194. வேறொரு வார்னிஷ்.

ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் க - புட்டி, அவுலாக்குத்தூள் உ௦ - பலம், சாண்டர்க்ஸ் ௦ - பலம் ரூமிமஸ்தகித்தூள் ௦ - பலம், பளிங்குசாம்பிராணித்தூள் பலம், இவைகளியாவும் ஒன்றாய்ச்சேர்த்து குலுக்கினமாத்திரத்தில் யாவும் உருகிவிடும். அதற்குமேல் உபயோகித்துக்கொள்ளவும்.

### 195. கோழிமடிய.

ஈரவெங்காயத்தை எருக்கம் பாலிற் றோய்த்துத் தோய்த்து வுலர்த்தி அதைக் கோழிக்கு முன்போட அதனைக் கோழியானது தின்னமாத்திரத்தில் அக்கோழிக்குப் பேதியதிகரித்து ச-௫ - தினத்திற்குள் மடிந்துவிடும். அதற்குமுறிப்பு செய்தாலன்றி பேதிநிற்காது.

## 196. சாமான்கட்குப் பூசு மெருகெண்ணெ.

மண்ணெண்ணெ கூ - வீசை, நாமர் என்னும் சீமைகுங்கிலியம் க௨ - வீசை, நாட்டுக்குங்கிலியம் க௨ - வீசை, இதில் மண்ணெண்ணெயை அடுப்பின்மீதேற்றி சிறுகக் காச்சி இருவகை குங்கிலியத்தையும் பொடித்துப்போட்டுக் கலக்கிவைத்து விரலாற் றொட்டுப்பார்க்கவும் பிசினியைப்போலாகும் வளையில் அவ்வடுப்பின்மீதிருக்கவைத்துப் பின்பு இறக்கி உபயோகிக்கவும். அடுப்பு சிறுதீயாயெரிக்கவும். பெருந்தீயாயெரிக்க எண்ணெயானது பற்றிக்கொள்ளும்.

## 197-விளைவுகெட.

சித்திரமூலத்துக்குக் காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி குளிசமாடி (யா) என்று-௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து அதைப் புலத்திற்புதைத்து வைக்க, அப்புலமானது நன்றாய்விளையாது - அதுசாவிச்சேதாரமாய்ப் பாழாய்விடும்.

## 198-பச்சான்பட.

ஆடுதின்னாப்பாளைக்குக் காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி அதில் வசம்பு கூட்டியரைத்து சோறூறிய தண்ணீரிற்கலக்கி (ஒவவு) என்று - ௱அ - உருசெபிதது முன்போலப்பூசித்து அதின்பேரிலெறிய பச்சான் முதலியது போய்விடும்.

## 199-நெடுமுக்குணமற.

ஊனாங்கொடிக்குக் காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி சாராய்விட்டரைத்து (சிசா) என்று-௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து அதின்பேரிலெறிய அல்லது அள்ளித்தெளிக்கவும் நெடுமுக்குணமறும். அதன்பின் கெடுதிசேராது.

## 200 கரிபூச்சற.

ஆடுதின்னாப்பாளைக்கு காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி சாராய்விட்டரைத்து (ஜயும் கிலியும்) என்று ௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து அதின்பேரிலெறிய அல்லது அள்ளித்தெளிக்க கரிபூச்சுகளற்றுவிடும். அதனால் யாதொருகெடுதியும் சேராது.

## 201. குருத்துப்புழுவற.

கின்றவிடந் தீஞ்சானுக்கு காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி சாராய்விட்டரைத்து (நா) என்று ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து எந்தமரங்களிலாகிலுஞ்சரி அல்லது அதுகளின் குருத்துகளிலாகிலுஞ்சரி அதின்மேற்றெளிக்க அக்குருத்துப் புழுக்கள்நசிந்துவிடும்.

## 202. எலிப்புழுவேக.

குப்பைமேனிக்குக் காப்புகட்டி வேரறுமற்பிடுங்கி சாராய்விட்டரைத்து (ஐயா) என்று ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து ஒருகொம்பின்முனையிற் பந்துகட்டி அதில் இம்மருந்தைப்பூசி அவ்வயலில் நட்டுவைக்கவும் அவ்வெலிப்புழுக்கள் சேராது.

### 203. கொடியானறு.

கொட்டைக்கரந்தைக்கு காப்புகட்டி வேரோடுமற்பிடுங்கிக் கழுதைமூத்திரத்திற்கலக்கி(கிலீநா) என்று - ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து அதின்மேற்றெளிக்க அக்கொடியான்க ளெல்லாம் நசிந்துநாசமாய்ப் போய்விடும்.

### 204. அதிகங் காய்காய்க்க.

பாதரசத்தை ஊமத்தைச்சாற்றி லரைத்து அதைதேவிசக்கரத்திற்பூசி (கிலீ) என்று ௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து மரம் கொடி வேர் இளை ஈதொன்றிற் புதைக்க அல்லது கட்டிவைக்கவும், அம்மரமானது அதிகமாய்க் காய்த்துப்பழுக்கும்.

### 205. அதிகம் பூபூர்க்க.

அரிதாரத்தை கள்ளு விட்டரைத்து தேவிசக்கரத்திற்பூசி (ஐ) என்று, ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து வேரிற்புதைக்கவும் அம்மரம் அல்லது செடியானது அதிகமாய் புஷ்பங்கள்பூர்த்து மிகமணமுள்ளதாய் மலரும்.

### 206. இலை-பூ-காயுதிர.

பரங்கிப் பாஷாணத்தைச் சாராய்விட்டரைத்து தேவிசக்கரத்திற்பூசி (கிலீ) என்று ௱அ-உருசெபித்து முன்போலப்பூசித்து ஒரு மரத்தினது வேரிற்புதைக்கவும், அம்மரம் அல்லது செடியிலுள்ள இலைகள் பூவுகள்காய்கள் மிகுதியாயுதிர்ந்துவிடும்.

### 207. இலை-பூ-காயதிகரிக்க.

நவாச்சாரத்தை குதிரைமூத்திரம் விட்டரைத்து தேவிசக்கரத்திற் பூசி (ஊஆ) என்று ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து ஒருமரத்தினது வேரிற்புதைக்கவும், அம்மரம் அல்லது செடி மிகுதியாய் இலைகள், பூவுகள், காய்கள், பழங்கள்பழுத்து ஓங்கிவிர்த்திக்குவரும்.

### 208. ஒருபுறங்காய்க்க.

படிகாரத்தை சிறுநீர்விட்டரைத்து தேவிசக்கரத்திற்பூசி (ஊ) என்று ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து ஒருமரஞ்சாயந்தகிளைப்பக்கம் வேரிற்புதைக்கவும், அந்தப்புறமுள்ளகிளைகள் அதிகமாய்க் காய்த்துப்பழுக்கும். மற்றக்கிளைகள் அதைப்போலக்காய்க்காது.

### 209. தேள்செனிக்க.

ஒருபுதிய உடையாத செங்கல்லை யெடுத்து அதில் தண்ணீர்விட்டுவிட்டு கையினல் நன்றாய் அரக்கித்தேய்த்து அப்படியே தரையில்வைத்துவிட்டு அதின்மேல் செத்தைகளைப்போட்டு மூடிவைத்து மறுபடியும் ௪-நாள்பொறுத்தெடுத்துப்பார்க்க அதினிடமாய் அநந்ததேள்கள் ஜனித்திருக்கும். அதினுற்றான் புதியகட்டடங்களிலும் தேளிருப்பதுண்டு.

## 210. தழைதழைக்க.

வெண்காரத்தைத் தண்ணீர்விட்டரைத்து தேவிசக்கரத்திற்பூசி (சிவாய) என்று ௱அ - உருசெபித்து முன்போலப்பூசித்து மறுபடியும் (மாவா) என்று ௱அ - உருசெபித்து ஒருகுடலை நிற்குங்கிளையில் அக்குடலையிற்றானே வைத்து ஒருசிவப்புசாவலையறுத்து அம்மரத்தின் நாற்பக்கங்கிளைகளைச் சுற்றிவந்து ஈசானியத்திற் பலியிட்டுப் புதைக்கவும். அம்மரத்தினது இலைகளெல்லாம் உதிராது தழைத்து இலைகள் விர்த்தியாயிருக்கும்.

## 211. தேவிச்சக்கரம்.

மூற்கூறியவைகட்கு தேவிசக்கரமாவது. குறுக்கேயும் - நெடுக்கேயும் மும்மூன்று கோடிழுத்து அதற்கு எட்டுசூலமிடவும் ௪ - அறைகளாயிருப்பதில், மேல் ந-சி-கீழ்-சி-ம-வென்று போட்டு அந்தந்த செய்தொழிலின் மருந்துகளை இத்தேவிசக்கரத்திற்பூசி அந்தந்த மந்திரங்களை ௱அ-உருசெபித்து தூபதீப நைவேத்தியங்களைவைத்து நன்றாய்ப்பூசித்து அவ்வவ்வேலைகளைமுடிக்கவும் சரியாய்நிறைவேறும்.

## 212. இரைமாற்ற

பூரணை அதாவது பருவத்திற்கு முன்னைந்துநாளும், பின்னைந்துநாளும் மாறாது இரவிற் சந்திரனைப் பார்த்துக்கொண்டேவரவும் முன்னுள்ளசூரிய தீக்ஷணியமாறி சந்திரன்குளிர்ச்சிபொருந்தி அப்போது சாலேசுரமானவை நீங்கும். இப்படியே ௪ - ௫ - மாதம் தவிராது பார்த்துக்கொண்டே வரவும் கண் துலக்கமாகும்.

## 213. தேவதைகளகல.

ஆதியறுகுவேறு யென்பது சந்திக்கொடியும் சீட்டுச்சிலையும் ஆகிய இரண்டையும் கொளுத்திக்கரிக்கி அதை ஒரு குளிசத்திற்போட்டு பந்து செய்து எடுத்துக்கொண்டு கோயில்முதலிய எவ்வித தேவதைகளிருக்குமிடங்களிற் செல்ல அத்தேவதைகள் பரந்தோடிப்போய்விடும். இவை இச்சிலைக்கரி யொன்றினிலேயாகும்.

## 214. சாராய்புட்டிவெடிக்க.

ஒருபுட்டியிற் கடுகுயிருந்தாலுஞ்சரி, அல்லது கொஞ்சங்கடுகைப் போட்டுவைத்தாலுஞ்சரி அதில் சாராயத்தைவார்த்து கையிலெடுத்துக்கொண்டு போக சற்றுநேரத்திற்கெல்லாம் அப்புட்டியானது சுக்கல்சுக்கலாய் வெடித்துவிடும். இக்கடுகு அதற்குச் சத்துரு.

## 215. வீடுகளிற் சுண்ணாம்படிக்க.

௪ - பவுன் சுண்ணாம்புநீரை ௩ - படி ஜலத்திற்கரைத்து ௨ - அவுன்சு வஜ்ஜிரத்தைத் தண்ணீரிற்போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட் காலையில் இதை யடுப்பின்மீதேற்றி அது கரையும்வரையில் எரிவித்து, பின்பு இதற்குமுன் கரைத்துள்ள சுண்ணாம்புத் தண்ணீருடன் கலந்து உபயோகிக்கவும். இது மிகவெண்மையாயிருக்கும்.

## 216. இவெளகாரம் கெட்டிப்பட.

சுவர்களுக்கு, பூமிகளுக்கு, மெத்தைகளுக்குச் சுண்ணும்பு வெள்ளைப் பூசி முக்கால்பாக முலர்ந்தபின் ௪ - படி தயிரில் உ - படி நல்லெண்ணெவி ட்டு ஓரிறவுவைத்து மறுநாள் அந்தத் தயிரும் எண்ணெயும் கலந்த தண்ணீ ரை சுவர்கள்முதலியவைகட்கு வார்த்து மெழுகுமிடத்தில் அதுகள் மெரு கு விடாமல் இருப்பதன்றி நீடித்தகாலம் சுண்ணும்பு உதிராமலிருக்கும்.

## 217. பட்டாடை எண்ணெசிக்கலற.

அப்பளாகாரம், ஆஸ்டரகாம் சர்க்கரை, எலுமிச்சன்பழரசம் இதுகளை நிதானமாகவெடுத்து கொஞ்சந் தண்ணீரிற்கலந்து அதில் பட்டாடைமுதலி யதை நனைத்து ஓரிராத்திரி யூரவைத்து மறுநாள் துவைக்க எண்ணெச்சிக்கல் கக்கி புதியதாய் காணப்படும்.

## 218, பட்டுதுணியிற் கறையெடுக்க.

எஸ்ஸென் இன் ஆப் லெமன் உ - அவுன்சு, கர்பூரத்தைலம் க - அவு ன்சு, இரண்டுங்கலந்து ஓர் புட்டியில்விட்டுவைத்து, பட்டு வஸ்திரங்களில் எவ்வித கறைகளிருந்தபோதிலும், அல்லது மாம்பால், வாழைப்பால். முரு க்கன்பால் பட்ட கறைகளிருந்தபோதிலும், இத்தைலத்தில் கந்தைத்துணி யைநனைத்து கறையுள்ளவிடத்தில் நன்ருகத்தேய்த்து சோப்பிஞல் கழுவி விட கறையானது மாறும்.

## 219. இரத்தக்கறை யெடுபட.

ஆடையில் இரத்தக்கறைபட் டிருக்குமாயின், அவ்விடத்தில் கிரிஸஞயி ல் பூசி கொஞ்சநேரம்பொருத்து அதன்மேல் வெந்நீரிற் றுவைக்க அக்கறை எடுபட்டுப்போம்.

## 220. ஆடையிலிரும்புகறையகல.

கிரீம் ஆப் டார்டாரை கொஞ்சந் தண்ணீர்விட்டுக்கரைத்து இரும்புக்க றைபட்ட விடங்களில் தடவி இரவியில் காயவைத்து கசக்கியவுடன் அவ்வி ரும்புகறைகளெடுபடும்.

## 221. ஆடையி லெண்ணெகறை யகல.

களிமண்ணை த தண்ணீர்விட்டுப்பிசைந்து அதை எண்ணெக்கறை யுள்ள விடத்தில் தடவி கொஞ்சநேரம்பொருத்து காச்சினமாத்திரத்தில் எண்ணெ க்கறை யகன்றுவிடும்.

## 222. இங்கிபட்ட கறையெடுக்க.

வஸ்திரங்களில் இங்கிபட்டயிடத்தில் புளிச்சைக்காய் இரசத்தைப்பூசி கசக்கிடவுமாறும். அல்லது எலுமிச்சன் இரசத்தையாகிலும் பூசலாம். ஈ தன்றி சுண்ணும்பையாகிலும் பூசலாம்.

### 223. சாதாரண களைமாற.

மைசுண்ணும்பு, நாமக்கட்டி இவ்விரண்டையுஞ் சமனுய்ச்சேர்த்துத் தண்ணீர்விட்டரைத்து களைபட்டவிடத்தில் பூசியுலரவைத்து அதன்பின் துலைக்க சுத்தமாகவிருக்கும்,

### 224. கற்சிலையழுகிறதற்கு.

ஒருகோயிலிற் கொண்டாடுந் தேவதைகளான கற்சிலைகட்கு அதின்ற லையில் ஆழாக்குத் தண்ணீர்விட்டு அதற்கடியிலொரு சிறியதுளையானது இ ரண்டுகண்களிலும் வந்துவிழும்படி நடுப்பாதியில் வேறுகார்க்கிட்டுப் பிகிந் து வைப்பதில், அத்தேவதைகட்குத் திருவிழா முதலிய சிறப்புகளைச் செய் யுங்காலத்தில் முன்னுதாய் அதின்றலையில் தண்ணீரைவிட்டு கார்க்குப்பி கிந்து அபிஷேகஞ்செய்து சாத்துபடியாகி தீபாராதனை காலத்தில் அக் கார்க்கைப் பூசாரிகள் பிடுங்கிவிட அத்தண்ணீர் இரண்டுகண்களிலும் வந்து விழ, அக்குலதெய்வமானது யாதுகாரணத்திற்கோ புலம்புகிறதென்று இக்கலியுகத்திலுங் கபடங்கள் செய்வதில் யாவருமெய்யென்று நம்புகிற து என்னபுதுமை.

### 225. கற்சிலைபால்குடிக்க.

மற்றொரு கோயிலிற்கொண்டாடுந் தெய்வமாகிய ஒரு பிம்பத்தின்வா யிற்பாலைவிட, அதுவயற்றிலிறங்கி அறைபடிக்குமேற்றங்கி யிருக்கச்செய் து வைத்திருப்பதில், அதைக்கோடிக்குங்காலத்தில் அதின்பசியையாற்றும் படிக்கு பசும்பாலைச்சுயமாகக்காந்து அதின் வாயிலூற்ற அதுவயற்றிலிறங் கியிருக்க இச்சக்தியுள்ள தெய்வம் பசியாறிற்றென்று பலரும் மேலுமே லும் பிரார்த்தனை செய்து கொண்டேவருவது என்னமதியீனம்பார்.

### 226. ஜர்மன் சில்வர் நகைகளுக்கு மெருகுபோடுவது.

கொஞ்சம் வென்னீரினில் படிகாரங் கொஞ்சம் பொடிசெய்துபோட் டு உழுமண்ணின்காரம் கொஞ்சம் அதில் கலந்து மெருகிடவேண்டிய நகை களை அந்தத் தண்ணீரினில் நனைத்து சுத்தமாகிய ப்ளானலினுலாகிலும் அல்லது உறப்பாகிய துணியினுலாகிலும் நன்ருய்த் தேய்க்குமிடத்தில் மெ ருகேரி புதுசாமான்களைப்போல பளபளப்பாயிருக்கும்.

### 227. உடைந்த பீங்கான்களை ஒட்டவைப்பது.

கொதித்துக்கொண்டிருக்கும் வென்னீரில் ஒரு ஒயின் கிளாசு தண் ணீரை மொண்டுக்கொண்டு அதில் அரை அவுன்சு வேலம்பிசினியைத்தூள் செய்துப்போட்டு வேண்டுமான அவ்வளவு ப்ளாஸ்டர் ஆப்பாரின்னை அத னுடன் கலந்து பசையாகச் செய்துக்கொள்ளவேணும். உடைந்த உடைச்ச லுக்கு இந்தப் பசையை புருசினுல் பூசி இரண்டு உடைச்சலையும் ஒன்ருகச் சேர்த்துக் காயவைப் பதில் அப்போது அது கெட்டியாக ஒட்டிக்கோ ள்ளுவதல்லாமல் உடைந்த பீங்கானுக்கக் காணப்படாது.

### 228. படங்கள் அழுக்கைபோக்க.

படங்களின் சட்டங்கள் அழுக்காய்விடுங்காலத்தில் முன்னுதாய் ஒரு மெல்லிய துணியால் அல்லது பிரஷினால் மெதுவாய் அதனிடத்திருக்கும் தும்பு தூசுமுதலிய அழுக்கைத்துடைத்து பின்பு ஒரு பிரஷினால் வின்சிட் ஆயிலைக் கொஞ்சமாய் அச்சட்டங்களிற் பூசினமாத்திரத்தில் பளபளப்பாய் புதுசட்டத்தைப்போலிருக்கும்.

### 229. கிலிட்டுசட்ட அழுக்கைபோக்க.

கிலிட்டு சட்டங்களில் ஈய்கள் மொய்ப்பதால் அது கறுப்புப் புள்ளிகளாயிருப்பதைப் போக்க, ஒரு மெல்லிய துணியை வெந்நீரில் நனைத்து மெதுவாகச் சட்டத்தின்மேல் தேய்த்து ஷை புள்ளிகளைப்போக்கி பின்பு சுத்தமாகிய துணியால் துடைத்து உலர்ந்தபின் கோழிமுட்டைக்குள்ளிருக்கும் வெள்ளையம்புலியை ஒரு பிரஷினலெடுத்துப் பூசினமாத்திரத்தில் புதுசட்டம்போற் பிரகாசிக்கும்.

### 230. புத்தகங்கட்கு கிலிட்டுபோட.

கிலிட்டுப்போடவேண்டிய புத்தகத்தின் ஓரங்களை சமானமாய்வைத்து ஒரு பிரஷினில் முடுக்கிப் பிகிந்துக்கொண்டபின், எந்த ஓரத்துக்கு கிலிட்டுசெய்யவேண்டுமோ அந்த ஓரம் மேலே மெருகாயிருக்க ஒரு கத்தியினால் மெல்லென இழைப்புளியா லிழைத்ததுபோற்சுரண்டி பின்பு முட்டைவெண்கருவிற் கொஞ்சம் தண்ணீரிற் கலந்து சிறிய பிரஷினால் ஓரங்களிற்பூசி பொன்ரேக்கு அல்லது பித்தளைரேக்கை ஓரத்துக்குச்சரியாய்க் கத்திரித்து அதிற்படிய ஒட்டியபின்பு அவ்வோரத்திற்குச் சரியாயுள்ள மிருதுவாகிய மெருகுகட்டை அல்லது கல்லினால் அழுத்தித் தேய்க்க அந்த ரேக்குகள் ஓரங்களில் ஒட்டிக்கொண்டு பிரகாசித்திருக்கும்

### 231 நகைகட்கு வெள்ளிகிலிட்டிட.

சைனூர் ஆப் பொட்டாவசியம் ௩ - கிராம், நைட்ரேட் ஆப சில்வர் ௩௰-கிராம், சிமைசுண்ணும்பு ௧ - அவுன்சு, இவைகளை பனைத்து ஒரு புட்டியிற்போட்டு கண்ணாடிக் கார்க்கிட்டுமூடி வைத்துக்கொள்ளவும். எந்த பாத்திரத்துக்கு கிலிட்டுசெய்யவேணுமோ அதை நன்றாய்ச் சுத்திசெய்து முன் பவுடரிற் கொஞ்சமெடுத்து ஒருபாத்திரத்திற்போட்டு கொஞ்சந் தண்ணீர்விட்டுக் குழம்பாகக்கரைத்து அதிற்கொஞ்சமெடுத்து அப்பாத்திரத்திற்போட்டு பிளாணலினாலாகிலும் அல்லது மெல்லிய துணியினாலாகிலும் பெருவிரலால் விடாமலழுத்தித் தேய்க்கவும். இவ்விதமாய் அப்பாத்திரத்தில் வெள்ளிகிலிட்டு பிடிக்கும்வரையில் ஷை பவுடரால் நன்றாய் விடாமலழுத்தித் தேய்க்குமிடத்தில் கிலிட்டானது பிடித்துக்கொள்ளும். எவ்வளவுந்தரம் தேய்த்தாலும் அவ்வளவு அதிகமாக அநேகநாள் அக்கிலிட்டு மாறாது பிடித்து கெட்டியாயிருக்கும்

## 232. சாமான்கட்கு வெள்ளிகிலிட்டிட.

பாட்டரி அல்லது செம்பு பித்தளை ஜர்மன்ஸில்வர் முதலிய சாமான்களுக்கு வெள்ளிகிலிட்டு கொடுக்கவேண்டிய உருப்படி யாவுந் தாராளமாய்ப் பிடிக்கும்படியான பெரியபாத்திரங்கள் ௫, இது பீங்கான்பாத்திரமாயாகிலும், மண்பாத்திரமாயாகிலு மிருப்பதில் வாய்குறுகலாகவும், நீண்டதாகவுமிருப்பது டீ டம்லரைப்போல் பீங்கான் அல்லது கிளாசு டம்லர் ௨, மருந்துகள் கலப்பதற்கு கிளாசு அல்லது பீங்கானாற் செய்த குச்சி ௧, இவ்வாறு சாமான்கள் தயாராயிருக்கவேண்டும்.

இதரசாமான்களன்றி ஒரு துத்திநாக ரேக்கு அல்லது துத்திநாகக்குச்சி ௧௨ - முழத்திற் குறையாது வாங்கி அகலே யெதிலாகிலும் ஒரு மெல்லீசாகிய செம்புகம்பியினால் ஒருமுனையிற் கட்டிக்கொள்ளவும். ஒருரூபாயிடை முலாஞ்செய் வெள்ளியை ரேக்குகளாயடித்து சிறுசிறு துண்டுகளாய்க் கத்திரித்துவைக்கவும். ௧ - அவுன்சு பொட்டிலுப்புத் திராவகம், ௧௨ - அவுன்சு ஸைநட் ஆப் பொட்டாஷ், நகைகட்கு மெருகுகொடுக்கும் மெருகு மணல் ௧ - சேர், சிலர் மெருகு மணலுக்குப்பதில் சமுத்திரத்தின் கருப்பு மணலைக் கையாண்டுவருகிறார்கள். இது அவ்வளவு சிறந்ததன்று. இவைகள் தயாராயிருக்கவேண்டும்.

இனி கிலிட்டு செய்யும்விதம் ஒரு கிண்ணி அல்லது டம்லரில் வெள்ளிரேக்குத் துண்டுகளைப்போட்டு நைட்ரிக்ஆஸிட்டை யதில்விட்டு கரிநெருப்பனலில் ௫ நிமிஷம்வரையில் வைக்க அவ்வெள்ளிரேக்கு உருகிவிடும். அதை மற்றொரு கிண்ணியில் ஒரு சிரங்கை உப்பைப்போட்டு கொஞ்சந் தண்ணீர்விட்டுக் கரைத்தபின் முன்னுருகியிருக்கும் வெள்ளித்தண்ணீரை அதில்விட்டுப் பிறகு அதில் வெறுந்தண்ணீர்விட்டலம்பவது நீலநிறமாக வருவதைக் கீழேயூற்றிவிட்டு, வேறு நல்லஜலம் விட்டுவிட்டு அந்த நீலநிறமாறும்வரையில் அலம்பி அடியில் வெண்மையாயுள்ள வெள்ளிப்பவுடரை பெரியபாத்திரத்திற் போட்டுப் பின்பு ஸயநட் ஆப் பொட்டாஷ் தூளை யதிற் போட வெள்ளிப்பவுடர் உருகிபோம். இதற்கு ஸில்வர் சொல்யூஷன் என்று பெயர். இதில் மறுபடியுங் கொஞ்சந் தண்ணீர்விட்டு வேறொரு பெரிய பாத்திரத்தில் உப்பைப்போட்டு ஜலத்திற் கரையவிட்டு செப்புக்கம்பியினாற் கட்டியிருக்குந் துத்திநாகத்தகட்டை அந்த உப்புநீரிற்போட்டு கிலிட்டு செய்யவேண்டிய சாமான்களைப் பரிசுத்தமாகும்படி தேய்த்து மேற்கண்ட செப்புகம்பியினுடைய மற்றொரு நுனியில் பாத்திரத்தைக்கட்டி வெள்ளி நீரில் முழுகும்படி அதாவது ஸில்வர் ஸொல்யூஷன் இருக்கும் பாத்திரத்தில் போட்டு கொஞ்சநேரமானபின் பார்க்குமிடத்தில் அதில் முலாம்பிடித்திருக்கும். பிறகதையெடுத்து மின்னொருபாத்திரத்தில் தண்ணீர்விட்டு மெருகுமணலால் நன்றாய்த் தேய்த்துத ஆலக்குங்கால் கிலிட்டுபிடித்திருக்கும். மறுபடியும் அதனை ஸில்வர் ஸொல்யூஷனிற்போட்டு எடுத்துத் தேய்த்துக்கொண்டேவா கிலிட்டு நன்றாய்ப்பிடிக்கும். எந்நேரந் தேய்த்தாலும் நன்

மையாய் மெத்த ஈட்படவிருக்கும். இதைச் செய்யும்போது கையிட்டுக் கலக்காது முற்கூறிய கிளாசுக்குச்சியினால் கலக்கவும். எவ்வளவு சாமானை இது மீதொன்றினுட்போட்டு கிலிட்டுகொடுக்கலாம். மீதிவெள்ளிஜலத்தை ஓர் புட்டியில்வார்த்துவைத்து மறுபடியு முபயோகிக்கலாம். அஜ்ஜலத்திற் கொஞ்சங் குறையுமாகில், ஸில்வர் ஸொல்யூஷன் (வெள்ளிஜலம்) செய்து அதிற்சேர்த் துபயோகிக்கலாம். இக்கிலிட்டு செய்கையில் எந்தெந்த தினுசுக ளெவ்வளவு அதிகமாயுங் குறைவாயுஞ்செய்ய நன்றோ வதை பழக்கத்தின்மீது புத்திசாலிகள் தெரிந்துகொள்ளவும்.

## 233. கண்ணாடிமீதுபென்சலாலெழுத.

முடி - பலம் ஈதர், க - பலம் சாண்டிராக், க - பலம் மாஸடிக், டி - பலம் பென்ஸைன், இவையாவும புட்டியிற்போட்டு நன்றாய்க் கலந்தபின் பார்க்க இது ஒருவித வார்னிஷைப்போலிருக்கும். இதனை பிரஷினலெடுத்து சுத்தமாகிய கண்ணாடியின்மேற்பூசி யுலர்ந்தபின் அதன்மீது எழுதினதை ஈயக்கம்பியாகிய (பென்சலினால்) எழுதவேண்டும். அதன்பின் ஈதர் மாஸ்டிக் இவயிரண்டையும் சமனாய்ச்சேர்த்து நன்றாய்க்கலந்து முன்னெழுதின கண்ணாடியின்மேற்பூசி யுலரவைத்தபின் பார்க்க அது நன்றாய்க் காணப்படும்.

## 234. ஆயுதங்களிற் பேர்போட.

பொட்டிலுப்பு, நவாச்சாரம், மயில்துத்தம், இம்மூன்று தினுசுகளையும் சமனாய் நிறுத்தெடுத்து கொஞ்சந் தண்ணீர்விட்டு நன்றாயரைத்து மொத்தையாக்கி தேன்மெழுகையுருக்கி எஃகுவின் பாளத்தை இளஞ்சூடாய்க் காச்சி உருகிய மெழுகிற்றொட்டு எவ்வித ஆயுதங்களிலாகிலும் நமக்கிஷ்டமாகிய வெழுத்துகளை யெழுதி முன்னுள்ள மருந்துமொத்தையை அவ்வெழுத்துகளின்மேல் கத்தியினா லெடுத்துத்தடவி கடு - கிமிஷம் வெய்யலில் வைக்கவும், மேற்பூசிய மருந்து வுலர்ந்துவிடின், எலுமிச்சன்பழ ரசத்தை மேலேகொஞ்சந் தெளித்து அதன்பின் னெடுத்து மேற்றடவியிருக்கு மருந்தைத் துடைத்துப்பார்க்க, மெழுகினாலெழுது மிடந்தவிர, மற்றவிடங் கொஞ்சமுருகி பள்ளமாய்க் காணப்படும். ஆதலால் அப்போது நாமெழுதிய எழுத்துகள் இரும்பு அல்லது எஃகுவினாற்செய்த கத்தி முதலிய பலவாயுதங்களில் திருத்தமாக நன்றாய்க் காணப்படும்.

## 235. சரிகையி லழுக்கெடுக்க.

கடைகளில்விற்கும் பழைய கோதுமைரொட்டியை சிறுசிறு துண்டுகளாக அறுத்து ஒருபாத்திரத்திற்போட்டு கொஞ்சம் நீலபவுடரை அதனுடன் கலந்து கொஞ்சந் தண்ணீர்விட்டு இரண்டையும் நன்றாய்ப்பிசைந்து வெள்ளி அல்லது பொன் சரிகைக்குப்பூசி கொஞ்சங் காய்ந்தபின் ஒரு பிளானல் துண்டினாலாகிலும் அல்லது பிரஷினாலாகிலும் நன்றாய் அழுத்தித்

தேய்த்து முதம்பூசிய பூசலைப்போர்த்து அதன்பின் மெல்லிய வெல்வெட்டு துணியினால மெதுவாய சரிகையைத்தேய்க்கவும் பிறகு அச்சரிகை நன்றாய்ப் பிரகாசிக்கும்.

## 236. துணிகள் நூல்கட்குசிமைசாயமிட.

தங்களுக் கிஷ்டமாகிய நிறமுள்ள பவுடரை ஷாப்புகளில்வாங்கி அந்த பவுடர் க - ரூபாயிடை படிகாரம் க - ரூபாயிடை, துணி அல்லது நூல் அ - பவுன் நிறையுடையதுவாங்கி அதற்குள்ள கஞ்சி யினைத்தையும் போக்கிப் பிழிந்து வாயகன்ற பாத்திரத்தில் தண்ணீர்விட்டு உப்பை யதிற்போட்டு அது கரைந்தபின் பவுடரைப்போட்டு நன்றாய்க் கொதிக்கவைத்து துணி யல்லது நூலை அந்ஜலத்திற்போட்டு கொம்பினால் நன்றாய்க் கலக்கி துணி யல்லது நூலை திருப்பிக்கொண்டிருக்க. அப்பவுடரெல்லாம் துணியி லல்லது நூலில் நன்றாய்ப் பிடித்துக்கொண்டபின் தண்ணீர் தேட்டையா யிருக்கும். அதன்பின் குட்டையை யல்லது நூலிழையை யெடுத்து தண்ணீரில் அலசித்து கொஞ்சமாகத் துவைத்து நிழலிலுலர்த்தி யெடுத்துக்கொள்ளவும் வேண்டும்

## 237 அவல்மெல்லாதிருக்க.

கொஞ்சம் இடித்த அவலை செய்யிற் பிசரி சற்று சூரியபின் கையில்முட்டி அதைவாயிற்போட்டுமெல்ல அதுகொஞ்சமேனும் நசுங்காதுபல்லுக்கையாது பிற்கும். நரநரெனச் சப்தமுங்கேட்கும். பற்களில் உதிரமும்வரும். உடனே கரும்பைத்தின்னவும் பற்களுந்திர்ந்துவிடும்.

## 238 வெள்ளி நகைகள் சுத்தமாக.

வைறபோயல்பைட் ஆப் சோடாவைத் தண்ணீரிற் போட்டு அது கரைந்தபின் வெள்ளிநகைகளை அதிற்போட்டு கொஞ்சநேரமிருந்து எடுத்தலம்பிவிட அது பரிசுத்தமாகவிருக்கும்.

## 239. பிரம்புச்சாடனம்.

ஒருதமபடியகல வெள்ளித்தகட்டில் ஐங்கோணங்கீறி நு-மூலைகளுக்குஞ் சூலங்களிட்டு மேலிருந்து வலம்புரியாக (ய-ந-ம-சி-வ) என்றெழுதி நடுவில் ஹரி எழுதி அதின்மேல் ஓம் எழுதி ஒருகஜநீளப் பிரம்பின்மேல் மூலையில்வைத்து அதின்மேல் வேறொரு வெள்ளிப்பூண்கட்டுமொட்டி அடியில் மற்றொரு வெள்ளிப்பூண்கட்டி நடுவில் வெள்ளித்தகடும் செம்புத்தகடுஞ்சுற்றி மூலமந்திரம் ௱அ - உருசெபித்துப் பூசித்து இதைக் கையிற் பிடித்துக்கொண்டு போனாலுஞ்சரி, அல்லது இப்பிரம்பை பேயாபெவர்கள் முன் நீட்டிக் காட்டினாலுஞ்சரி எவ்விதபூதப்பிரேத பிசாசுகளும் அலறிவாய்மொழி சொல்லி முடிவெடுத்து விலகியோடிப் போய்விடும். அப்போது நமசிவய வென்று செபிக்கவும் நன்மை.

## 240 இராவுற்பத்தியாக.

ஒரு பெருஞ்சாட்டக்கூடை யளவாயுள்ள சிறு தண்ணீர் குட்டையில் கொஞ்சந் தண்ணீரிருக்கும்போது அதில்வைக்கோல்களைப்போட்டு மறைத்து வைத்து ௨-௫-நாள் பொறுத்து அதைத்திறந்துபார்க்க அதினிறைய பெருங்காலிராக்கள் மேய்ந்துகொண்டிருக்கும். அதை எவ்விதஞ்செய்தாலுஞ் செய்யலாம்.

## 241. மரங்களுலர.

பனைமரம், தென்னைமரம், ஈச்சமரம், பாக்குமரமுதலியதிலுள்ள குருத்துகளைவிரித்து அதினடுவில் கொஞ்சஞ்சலம்விட்டு அதினடுவில் ஒருகடுக்காயை வைத்துவிட, அம்மரம் உலர்ந்து போய்விடும். ஆனால் இது சிலவிடங்களில் அல்லது தேசங்களில் சரிப்பட்டும் சரிப்படாமலு மிருக்கின்றது.

## 242. உருவம்பேதித்திருக்க.

செம்புத்தகட்டை வீட்டின்மேல் மூடும் தட்டோடுபோல் வளைத்து அதினுட்புறத்தில் வெள்ளிக்கிலிட்டுப்பூசி அதைமேலேதூக்கிக் கட்டிவைத்திருக்க அதைப்பார்த்தவர் முகங்களெல்லாம் பலவிதவிகாரங்களாய்த் தோற்றும்.

## 243. இண்டியன் இங்கி.

வேண்டியவஜ்ஜிரத்தை நன்றாயிழையக்காச்சி அதில் நல்லெண்ணைவற்றித்திப்பப்புகைகரியைச்சேர்த்து இழைத்து வுலர்ந்தபின் அதைப் பொடிசெய்து ௸ பொடியைத் தண்ணீரிற் பத்திரமாய்க்கலக்கி யெழுதவும். அது இண்டியினிங்கிபோலிருக்கும் இதை எல்லாவற்றிற்கும் எழுதவுபயோகிக்கலாம்.

## 244. இரப்பர்செய்ய

குதிரைவாலியென்பது ஒருகுத்துச்செடி அது தொடியோடி நீண்டுவால்போலநிற்கும். அதின்பாலை கணுக்கையிலிருந்து முழங்கைவரையிலுஞ் சந்தில்லாம லடித்து அதுவுலர்ந்தபின்பு அதின்பேரில் தண்ணீரைத் தோணவிட்டேறியபின் ஒருபக்க முனையையெடுத்து சுருட்டிக்கொண்டேவர அது பந்தாகத்திரண்டுவரும். அதையுலர்த்தி பென்சலாலெழுதிய எழுத்தைத் துடைக்கமாறும்.

## 245. மோதிரமுடைய.

பொன் அல்லது வெள்ளி மோதிரம் போட்டிருக்கையில் அவ்விரல் நெருக்கத்தாலோ அல்லது காயமுதலிய புண்வக்கத்தாலோவீங்கி அதைக்கழட்ட முடியாதிருக்கையில், அம்மோதிரத்தின்மேல் கொஞ்சம் பாதரசத்தைவிட்டு சற்றுநன்றாய்த்தேய்த்து அவ்விரல்மோதிரத்தை ஒருதட்டாய்தட்டவும் இரண்டாயுடைந்துவிடும்.

## 246. தலையிற்கல்லுடைக்க.

ஆதிவாரநாள் உதையத்தில் செம்முள்ளிக்குப் பஞ்சவர்ணநூலாற் காப்புகட்டி உச்சிவேரருமற்பிடுங்கி குளிசமாடிவாயிலடக்கிச் செங்கல்லேத்தூக்கித்தன் தலைமேலெறிந்தாகிலும், அல்லது மண்டையின்மேல் அடித்தாகிலும் உடைக்கத் தேங்காயுடையும் தலைநோகாது. இதினால் இவனைபலாஷ்டிகனென்பார்கள்.

## 247. இந்திரியங்கட்ட.

கரும்பூனையானது அதிற் செம்புள்ளியில்லாததின்வலது விலாவெலும்பை யெடுத்து அதை அரைஞாண்கயற்றிற் கட்டிக்கொண்டிருக்க எவ்விதம் போகித்தாலும் இந்திரியங் கலிதமாகாது அதனைப் பின்றள்ளக் கலிதமாம்.

## 248. எண்ணெயுட்கலந்ததணணீரை பிரிப்பது.

எண்ணெயும் தண்ணீருங் கலந்த ஜலத்தை ஒரு டம்லரில் வார்த்து ஒரு நாலு கால் பலகையின் மீதொரு மூலையில் வைத்து நீளமாயிருக்கும் துணி கந்தையை நன்றாய் வென்னீரில்நனைத்து அதினுடைய ஒருமுனையை டம்லரின் உள்ளே அடிபாகத்தில் படும்படியாகவும், மற்றொரு முனையை டம்லருக்குவெளியில் கீழ்நோக்குத்தொங்கும்படி வைக்குமிடத்தில் எண்ணெயில் கலந்திருக்கும் தண்ணீரெல்லாம் துளித்துளியாக துணிக்கந்தை மூலமாக கீழ்விழும். எண்ணெமாத்திரம் டம்லருக்குள்ளே நின்றிருக்கும்.

## 249 எழுதும் இறகுகளை கெட்டிசெய்வது.

செப்புப்பாத்திரத்தினில் அரை பாகந் தண்ணீர் வார்த்து பாத்து இறகுகளையாகிலும், குயிலிறகுகளையாகிலுங் கத்தையாகக்கட்டி எழுதப்பட்ட பாகத்தை மாத்திரம் தண்ணீரினுள் படும்படியாகவைத்து நாலுமணிநேரம் எரியிடவேணும். மேலும், பாத்திரத்தினுடைய ஆவி வெளியிற் போகாதிருக்கும்படி மேலே தட்டு போட்டுச் சீலைசெய்து அதன் பின்பு எரிவிக்கவும் பிறகு பேனுக்களை யெடுத்து நிழலில் இரண்டு நாள் உலர்த்தி நன்றாகத் துணியினால் துடைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இது மெத்த திடமாகவும் மெருவாகவு மிருக்கும்.

## 250. சீமைபவுடர் சாயமிட.

சின்னிவேர், மருதம்வேர் முதலியதைத் தண்ணீரிற் கொதிக்க வைத்து அத்தண்ணீரிற் சாயம்போடுவதுண்டு. அது மெத்த கஷ்டமாகிய வேலையாயிருக்கின்றது. இப்போது அவ்வித வேலைகளைச் செய்யாமல், பட்டு நூலுக்கு அரக்குசாயம் போட்டுவருகிறார்கள். அவ்வேலையும் இப்போது செய்யாது யாவருஞ் சீமைபவுடர் சாயம்போட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

# இலக்கக் கக்ஷ யந்திரம்.

| | | | |
|---|---|---|---|
| ௧௬.<br>பொற்றலைக்<br>கையான்.<br>குழியானை. | ௩.<br>சிந்தலி<br>செங்கழுநீர்.<br>கருநாய்<br>நாக்கு. | ௧௩.<br>மயூர்சிகை<br>ப்பூடு.<br>மயில்பிச்சு. | ௨.<br>ஆடையொ<br>ட்டி.<br>சுழல் வண்டு |
| ௯.<br>ஆனைவண<br>ங்கி.<br>காட்டட்டை. | ௬.<br>தாளி.<br>அறுபுளி<br>வண்டு. | ௧௨.<br>பேய்த்து<br>மட்டி.<br>இந்திரகோ<br>பம். | ௭.<br>வெண்கொழு<br>ஞ்சி.<br>அண்டங்காக்<br>கைத்தலை. |
| ௪.<br>வெள்ளெரு<br>க்கு.<br>பச்சோந்தி. | ௧௫.<br>வாழை.<br>தேவாங்கு. | ௧.<br>பிரமதண்டு.<br>வெள்ளாட்டு<br>நாக்கு. | ௧௪.<br>சிறியாநங்கை.<br>கோரோசனை. |
| ௫<br>ஆண்டமுற்றி.<br>மண்டைப் பிச<br>சு | ௧௦.<br>முட்செருக்<br>கன்செவி.<br>புராவெச்<br>சம். | ௮<br>சத்திசாட<br>டானை.<br>ஆதிக்கொடி. | ௧௧.<br>அழுகண்ணி.<br>கரும்பூனைப்<br>பஞ்சாங்கம். |

இவ்விலக்கக்கக்ஷக்கிரியையின் இயந்திரமானது :— ௧௬ - அறைகளில், பாகை ௪ - க்கு இலக்கம் ௩௪ - ல், மூலம் - ௨, சீவன் - ௨, ஆடை செப்பியபடியாயில் பழுதுறாது இச்சக்கரத் தடைவே ஒவ்வொரு முறைசட்டும், நவாலு அறைகளிலுள்ள நவாலு நம்பர்களை எப்படி யெண்ணிப் பார்க்கினும், அது ௩௪-ஆகவே வருமாதலால், இதற்கு இலக்கக்கக்ஷக்கிரியை யெனப் பெயர்வகுக்கலாயிற்று. இம்முறைகளில் யாதேனும் இலக்கமூலச் சீவன்களில் சந்தேக முண்டாயின், சக்கரத்தடைவே பார்த்துச் செய்யவும். ஈதன்றி, வேறுபதிப்பு மூலமும் உரையுடன் இதனை முற்றும் பதிப்பித்து வெளியிடப்படும்.

## 251. இலக்கக் கக்ஷிஷக்கிரியைகள்.

இவ்வுலகின்கண் பலவையுந் தூஷிக்கும் மதியீன சண்டாளர்களுக் கோர்வச்சிரக்குறடா வெனப் பலருங்கருதி இதைக்கையாடி அனுபவிக்க இதிற் பற்பலமருந்துகளின் பாகைவருணங்களும், பதினூர் அறை சாகைக ளின் மூலச்சீவன் இலக்கங்களேயும், தலைமுறையாக யாவர்க்கும் உதவும்படி இந்த தத்துவங்களை உரைக்கலாயிற்று.

## 252. இயந்திரவிவரம்.

இதற்கு இயந்திரமாவது குறுக்கு ரு-கோடும், நெடுக்கு ரு-கோடும் கீ றிடின், அதுநால்நான்கு பதினாறு அறைகளாயிருக்கும். இதொவ் வொன்றி லும் இலக்கம், மூலம், சீவன்முதலியதைக்காட்டி அதததுகளின் செய்வினைப் பகுதிகளை பின்னால் விளக்கிவருகின்றதை காண்க.

## 253. பாகையிலக்கம்.

இப்பாகைகளின்மேல் முதலறை தொன்றதொட்டு வரிசையாய்வரும் இலக்கங்களானது (கசு - ௩ - க௩ - உ-எ-கஅ-கக-அ-ய-ரு-ச-கூ-கசு-கஉ-க- கரு-) ஆகிய கசு - வீடுகளிலுள்ள இவ்வெண்களால் மூலங்களேயும், சீவன் களேயுங்காட்டுவதில் இப்பதினாறறைகளில் நேர்நேர்குறுக்கு மூலை எப்படி எண்ணிப்பார்த்த போதிலும் ௩ச-தான்வரும். இவ்விலக்கங்களைக் கொண்டு இதற்கு மூலங்களை விவரமாய்ச் சொல்வாம்.

## 254. பாகைமூலிகைகள்.

இப்பாகை மூலிகைகளில், க - பொற்கையான், உ - சீதேவிசெங்கழு நீர், ௩ - மயூர்சிகைப்பூடு, ச - ஆடையொட்டி, ரு - வெண்கொழுஞ்சி, சு- சிறியாநங்கை, எ - அழுகண்ணி, அ - சத்திச்சாரணை, கூ - முத்தெருக்க ஞ்செவி, ய - ஆண்கழுதை, கக - வெள்ளெருக்கு, கஉ - ஆனைவணங்கி, க௩ - தாளி, கச - பேய்துமட்டி, கரு - பிரமதண்டு, கசு - வாழை, ஆகிய மூலிகைகள் கசு - க்கும் - சீவன்கள் கசு - விவரித்துக் சொல்லுவாம்.

## 255. பாகைசீவன்கள்.

இப்பாகை சீவன்களில் க - குழியானை, உ - கருநாய்நாக்கு, ௩ - மயில் பிச்சு, ச - சுழல்வண்டு, ரு - அண்டங்காக்கைத்தலை, சு - கோரோசினை, எ - கரும்பூனைப்பஞ்சாங்கம், அ - ஆதிக்கொடி, கூ - புராவெச்சம், ய - ம னிதர்பிச்சு, கக - பச்சோந்தி, கஉ - தூட்டட்டை, க௩ - ஆறுபுள்ளிவண்டு, கச - இந்திரகோபம், கரு - வெள்ளாட்டுநாக்கு, கசு - தேவாங்கு-ஆகிய சீ வன்கள் கசு - க்கும் செய்தொழிலை விளக்கிக்காட்டுவோம்.

## 256. செய்தொழில்.

இதில் அந்நந்த முறைகட்கு எந்தெந்த வறைகளை நவாலாய்நேர்நேர் எண் ணிப்பார்க்க ௩ச - தான்வரும் - இந்த நவால் அறைகளில் க - மூலம், உ-சீ

வன், ௩ - மூலம், ௪ - சிவனுஞ்சேர்த்து யாதொருவிஷயங்கட்கும் கூட்டவும். இதில் ஒவ்வொரு மூலிகைகளையும் இவ்வாறேசெய்தல் வேண்டும். அதாவது காலைசூரியோதயத்தில் அம்மூலிகை யிருக்குமிடம்போய்சுத்திசெய்து தண்ணீர்தெளித்து தூபதீப நைவேத்தியந்தந்து சாபநிவர்த்திசெய்து பூசித்துச் செபிப்பதற்குப் பீஜமுரைத்திடுவாம்.

## 257. மூலமந்திரம்.

இம்மூலிகைகட்கு மூலமந்திரமாவது (ஓம்நமஃ மூலரூபினி அங்கிஷஃ இங்இங் உங்உங் இரீங் இஷ்டஇஷ்டமாமாட்சா ஓம்சுவாகா என ௱அ-உரு செபித்து செய்வினைகட்கு மூலிகைகளைப் பிரயோகிக்கவும். அதைசொல்லி வேரூமற்பிடுங்கும்போது பொங்கலிட்டு தேங்காயுடைத்து பலிகொடுத்து அவல் கடலை பழம் சாம்பிராணிவற்றி கொளுத்தி புஷ்பஞ்சூட்டி கற்பூரதீ பாராதனைசெய்து பிடுங்கவும்.

## 258. ஜம்மலம்.

இதற்கு ஜம்மலமாவது கண்டத்துக்கு மேலுள்ள வாய்நீர், மூக்குச்சளி, கண்பீளை, காதுகுறும்பி, இந்திரியம் ஆக ரு - இந்திரியங்கிடையாவிடின், தன்தலையின் பேன்களைச் சேர்த்தரைத்து அம்மருந்துகளிற்கலக்கவும் நன்மையைத்தரும். இத்தொழின்முறைகளைச் சொல்லுவாம்.

## 259. லோகவசியம்.

இதில் - கசு - பொற்றலைகையாந்தகரை, ௩ - கருநாய்நாக்கு, க௩-மயூர்சிகைப்பூடு, உ - சுழல்வண்டு, ஆகியவிலக்கம் - ௪-க்கு-மொத்தம் ௩௪-க்கு மூலிகை உ - சிவன் - உ, இதுகளைப் பொடிசெய்து நன்றாய்த் திரி திரித்து பசு நெய்யில் விளக்கேற்றி தலைமண்டையோட்டில் மைபற்றவைத்து அதை காராவிநெய் அல்லது பசு நெய்யிலிழைத்து கண்ணிலிட்டுச்செல்ல உலகில் யாவரும் வசியமாவார்கள்.

## 260. பிரியாயீடு

இதில் - கூ - ஆனைவணங்கி, சு - ஆறுபுள்ளிவண்டு, கஉ - பேய்த்துமட்டி, எ-அண்டஙகாக்கைத்தலை, ஆக ௩௪-இவைகளில் ஜம்மலமுஞ்சேர்த்து நல்ல சித்தயோகத்தில் அரைத்து ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் பலபண்டங்கள் பலகாரத்திலிடவும் அவர்களுடனே வசமாவார்கள்.

## 261. வசியசந்தனம்.

இதில் - கச - சிறியாநங்கை, ௪ - பச்சோந்தி, க - பிரமதண்டு, கரு-தேவாங்கு - ஆக ௩௪-இவைகளில் ஜம்லமுஞ்சேர்த்து நல்நாளில் அரைத்து மைந்தர்கள்முதல் ஆண்பெண்ணியாவருக்குஞ் சந்தனத்திற்கலந்து பூசிடவும் அவர்கள் எதாகாலமும் கைவிடாது வணங்கியிருப்பர்.

## 262. மூன்றுலோகவசியம்.

இதில் ௩ - சிதேவிசெங்கழுநீர், க - புராவெச்சம், கரு - வாழை, சு - ஆறுபுள்ளிவண்டு, ஆ ௩௪. இவைகளில் ஐம்மலமுஞ்சேர்த்து மற்ற தைப் பொடிசெய்து திரியாகத்திரித்து ஆவிநெய்யில் விளக்கேற்றி புத்தோட்டில் மைபற்றவைத்து பிடித்தமையை காராவினெய்யிலிழைத்து கண்ணிரண்டிற் பூசிச்செல்ல, சொர்க்கமத்தியபாதாளத் துள்ளவர்களியாவரும் வசியமாவார்கள்.

## 263. இலக்குமிசேரப்புகை.

இதில் - கரு - மயூர்சிகைப்பூடு, கஉ - இந்திரகோபம், க - பிரமதண்டு, அ - ஆதிக்கொடி, ஆ ௩௪ - இவைகளில் ஐம்மலமுஞ்சேர்த்து பொடிசெய்து சர்க்கரை தேன் கூட்டிக்கலந்து இதை நெருப்பிற்புகையவிட, இலட்சுமியானவள் சேர்ந்து செல்வமுண்டாய் வாழ்வார்கள்.

## 264. வெட்டமுருதிருக்க.

இதில் கக - அழுகண்ணி, கச - கோரோசினை, எ - வெண்கொழுஞ்சி, உ-சுழல்வண்டு, ஆ ௩௪. இவைகளை உரைத்துரைத்து உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி புருடர்கள் உடம்பிற்பூசி போர்முகஞ்செல்ல, எதிரியின் ஆயுதங்கள் தன்மேற்படாது. கத்தியால் வெட்டினாலும் வெட்டமுருது. தானே செலிப்பதிற் சந்தேகமில்லை.

## 265. படைமுறியகடகம்.

இதில் உ - ஆடையொட்டி, கஉ - இந்திரகோபம், கரு - வாழை, ரு- மண்டேகப்பிச்சு, ஆ ௩௪. இவைகளை அமாவாசைநாளிற் புலிந்தோலிற் சுருட்டி வளையமாடிக் கடகமாய்ச்செய்து தன்கையிற்போட்டுகொண்டு அமராகிய போர்முனையிற்செல்ல, பாரதம்போல் சமர்நேர்ந்தாலும் அப்படையானது முறிந்தோடிவிடும்.

## 266. வசிகரமை.

இதில் க - பிரமதண்டு, கக - கரும்பூனைப்பஞ்சாங்கம், சு-தாளி, கரு- குழியானை, ஆ ௩௪. இவைகளைப் பொடிசெய்து திரியாகத்திரித்து செம்மரியாடு - எருமை-பசு-இதுகளின். வெண்ணெகளை யுருக்கி விளக்கேற்றி இத்திரியைப்போட்டு புத்தோட்டில் மைபிடித்து அந்தமையை நெய் அல்லது நல்லெண்ணெயிற் குழைத்து நெற்றியிலிட்டுச்செல்ல, நினைத்தவர்கள் வசியமாவார்கள்.

## 267. சொக்குப்பொடி.

இதில் கரு - மயூர்சிகைப்பூடு, எ - அண்டங்காக்கைத்தலை, கஉ - பேய்த்துமட்டி, உ-சுழல்வண்டு, ஆ ௩௪ இவைகளைச் சிவாலயத்தின் வடபுறத்திருந்து இடித்துவைத்து அதில் ௬-பச்சோந்தி, சு-ஆறுபுள்ளிவண்டு,

இதுகளின் தலைகளைப்பொடித்துப்போட்டு,ஒருவர்தலைமேற் கொஞ்சந்தூவி விட, அவர் திக்குகெட்டு திசைமாறி பின்சென்று நாய்போல் அலைகுவர். அதற்குமாத்து - உடனே தலையிற் றண்ணீரையூற்ற முறியும்.

## 268. வீட்டிற்புதைக்கவசியம்.

இதில் கஉ - பேய்த்துமட்டி, கச - கோரோசனை, க-பிரமதண்டு, எ- அண்டங்காக்கைத்தலை, ஆ௳ ரூச. இவைகளைத் தலைமுதலியாவும் பொடித்து பசுவெண்ணெயிற்குழைத்து அதை நல்லநாளிற்செய்து அல்லது வாங்கி வீட்டினுள் புதைத்துவைக்க, அது முதல் யாவரும் வசியமாய் கேட்டதைய ளிப்பர்.

## 269. இருளில்வாசிக்கமை.

இதில் க - பிரமதண்டு, கக - கரும்பூனைப் பஞ்சாங்கம், கச - சிறியா நங்கை, அ - ஆதிக்கொடி, ஆ௳ ரூச. இவைகளை சித்தயோகநாளிற் பொடிசெய்து சீலையிற் றிரியாகத்திரித்து நெய்யும் நல்லெண்ணெயுங்கூட்டி விளக்கெறித்து ஓட்டிற்பற்றவைத்த மையை நெய்யிலிழைத்து கண்ணிற்றீட்டவும், இருளில் வாசிப்பர். எழுத்துகளும் நன்றாகத்தெரியும்.

## 270. ஊனிற்புகைக்கவசியம்.

இதில் - கரு - வாழை, க - வெள்ளாட்டுநாக்கு கo - முத்தெருக்கன் செவி, அ - ஆதிக்கொடி, ஆ௳ ரூச. இவைகளை வியாழக்கிழமை புநர்பூச நக்ஷத்திரங்கள் கூடியநாளிற் பொடிசெய்து அதில் வெண்ணெசேர்த்துப் பிசரி நெருப்பிலிட்டு தன்னுடம்பிற் புகையேற்ற உலகத்தில் யாவரும் வசமாவதற்குச் சந்தேகமிராது.

## 271. குளத்தில்வைக்கவசியம்.

இதில் ச - வெள்ளெருக்கு, ரு-மண்டூகப்பிச்சு, கரு-வாழை, கo-புராவெச்சம், ஆ௳ ரூச. இவைகளை ஐந்துமலங்களிற்சேர்த்து குருவாரநாளிற் றுவைத்து அவ்வூரில் ஓர் குளத்திற் புதைத்துவைக்க, அந்நீரைக் குடிப்பவரெல்லோரும் தனக்கு வசியமாவார்கள்.

## 272. முகம்பூசுவசியம்.

இதில் கூ - ஆனைவணங்கி, ச-பச்சோந்தி, கரு-வாழை, கூ-ஆறுபுள்ளிவண்டு, ஆ௳ ரூச. இவைகளை திங்கட்கிழமைதினம் பருவங்கூடிய நாளில் சர்க்கரை தேன் கூட்டி ஓர் கலயத்திற் கொதிக்கவைத்து தன் வீட்டிற்குள் வந்தவர்கட்கெல்லாம் அவர்கள் முகத்திற்பூச, யாவரும் வணங்கிப்பணிகுவர்.

## 273. புகைவசியம்.

இதில் க - பிரமதண்டு, கரு - தேவாங்கு, கஉ-பேயத்துமட்டி, கூ- ஆறுபுள்ளிவண்டு, ஆ௳ ரூச. இவைகளை இன்னும் எ - வெண்கொழுஞ்சி,

௬-காட்டட்டையுங்கூட்டி ஞாயிற்றுக்கிழமைநாள் யாவும் அரைத்துவைத்து உள்ளவர்கள் மேற்பூசவும், அதைப்புதைக்கவும் அவ்வீட்டினுட் புகுந்தவர் ஒருவரேனும் விட்டுப் பிரிந்துப் போகார்கள்,

## 274. ஈடுவசியம்.

இதில் ௩ - சீதேவிசெங்கழுநீர், ௬-ஆறுபுள்ளிவண்டு, ௧ - ஆனைவணங்கி, ௧௬ - குழியானை, ஆ. ௩௪. இவைகளை சித்தயோகநாளில் பொன்னூமத்தஞ்சார்விட்டரைத்து உடம்பினிற்பூசி, அதனில் ஐந்துமலங்களையுஞ் சேர்த்து பலபண்டங்கள் பதார்த்தங்களிலிடவும், அதை யுண்டோர்கள் எந்நாளும் வசமாயிருப்பர்.

## 275. திருமகள்சேர.

இதில் ௧ - ஆனைவணங்கி, ௧௬ - குழியானை, ௩ - சீதேவிசெங்கழுநீர், ௬ - ஆறுபுள்ளிவண்டு, ஆ. ௩௪. இவைகளை ஐந்து மலமுங்கூட்டி பஞ்சமிநாளில் கோயிலினுள் உள்ள கெந்தமுஞ்சேர்த்து பொடித்து திரியிலூட்டி வீட்டினுள் தீபமேற்றிவைக்கவும், அங்கு யாதொரு பாம்புகளுஞ்சேராது திருமகளாகிய இலக்குமி எக்காலும் வாசமாய் வசித்திருப்பள்.

## 276. மேற்பூசுவசியம்.

இதில் ௪ - வெள்ளெருக்கு, ௫ - மண்கேப்பிச்சு, ௧௧-அழுகண்ணி, ௧௪ - கோரோசினை, ஆ. ௩௪. இவைகளை ஐந்து மலங்களுஞ்சேர்த்து எருக்கின்பழுப்புச் சார்விட்டரைத்து வழித்தெடுத்து அடுத்தவர் மேற்பூசவும், அவர்கள் வசியமாய எந்நாளுந் தன்னிடஞ்சேர்ந்து வசித்திடுவர்.

## 277. மருந்திடு.

இதில் ௫ - ஆண்கழற்சி, ௩ - கருநாய்நாக்கு, ௧௬-பொற்றலைக்கையாந்தகரை, ௧0-புராவெச்சம், ஆ. ௩௪. இவைகளை பஞ்சமிநாளில் பரிவேடமதிற் சேரப் பொடிசெய்து புழுகுபோற்றாள்செய்து மாதாந்தச் சீலையைக்கரிக்கி ஐந்துமலங்களுஞ்சேர்த்து தின்பண்டங்களிலிடவும், அதைத்தின்றவர்கள் தன் வசமாவார்கள்.

## 278. வசியபுடவை.

இதில் ௫ - ஆண்கழற்சி, ௧0 - புராவெச்சம், ௧௧ - அழுகண்ணி, அ- ஆதிக்கொடி, ஆ. ௩௪. இவைகளில் யாவுஞ்சேர்த்து ஓர் சேலையினுள் வைத்திருக்க, அச்சேலையை யுடுத்தியவர்கள் யாவரும் வசியமாய் தாங்களிட்டவேலைகளைச் செய்து எக்காலும் பிரியாதிருப்பர்.

## 279. வசியயிடு.

இதில் - ௧௬-பொற்றலைக்கையாந்தகரை, ௬-காட்டட்டை, ௪ - வெள்ளெருக்கு, ௫-மண்கேப்பிச்சு, ஆ. ௩௪. இவைகளில் ஐம்மலமுஞ்சேர்த்து

நல்ல நாளிலரைத்து வேண்டியவர்கட்கு பலகாரமுதலிய தின்பண்டங்களி லிட அதைத் தின்னவர்கள் தன் வசமாகி விட்டுப் பிரியாதிருப்பர்.

## 280. சத்துருஜெயம்.

இதில் ௩ - சீதேவிசெங்கழுநீர், அ - ஆதிக்கொடி, ௧௩ - மயூர்சிகைப்பூடு, ௧0 - புராவெச்சம், ஆ ௩௪. இவைகளை பெருங்காயம் ஒருபங்கு கூட்டிப் பொடிசெய்து அரைத்தெடுத்து பருவநாள்பார்த்து சதுருக்கள் தலைமேற்போடவும், அவர்கள் தோல்வியடைந்து புறங்காட்டிப் போய் விடுவார்.

## 281. வழக்குவெல்ல.

இதில் ௧௩ - மயூர்சிகைப்பூடு, ௧௧ - கரும்பூனைப் பஞ்சாங்கம், ௨ - ஆடையொட்டி, அ - ஆதிக்கொடி, ஆ ௩௪. இவைகளை அரைத்தாகிலும் அல்லது சும்மாவாகிலும் தனது மடியில்வைத்துக்கொண்டு பேசாமற் கோபமாயிருக்கும் பகைவர்க் கெதிர்வரவும், அவர்கட்குள்ளவழக்கு வெல்லும். அன்றியும் தானேவந்து சத்துருக்கள் வணங்குவர்.

## 282. போர்வெல்ல.

இதில எ - வெண்கொழுஞ்சி, ௧௨ - இந்திரகோபம், ரு - ஆண்கழற்சி, ௧0-புராவெச்சம், ஆ ௩௪. இவைகளை பூர்வபக்ஷம் பூசநக்ஷத்திரங்கூடிய நல்லயோகத்தில் பொடிசெய்து கர்க்கங்களைக்கரைத்து நெற்றியிற்றிலர்த மிட்டுப் போரிற்செல்ல, சத்துருக்கள் வெல்லார்கள்.

## 283. விளக்கேற்றிக்கூட.

இதில் ௧௩ - மயூர்சிகைப்பூடு, ௨ - சுழல்வண்டு, ௧ரு - வாழை, ௪- பச்சோந்தி, ஆ ௩௪. இவைகளை பொடிசெய்து சீலையிற்றிரியாகத்திரித்து ஒருவிளக்கில் இத்திரியைப்போட்டு நெய் அல்லது நல்லெண்ணெயைவிட்டு தீபம்வைத்தெறிகையில், ஒருமாதரைச்சேர அம்மாதர்வசமாய் வாழ்புரிந்திடுவள்.

## 284. சுக்கிலஸ்தம்பனநெய்.

இதில் ௧ - பிரமதண்டு, ௧௪ - கோரோசினை, ௧௬-பொற்றலைக்கையாந்தகரை, ௩ - கருநாய்நாக்கு, ஆ ௩௪. இவைகளை பசுவினது வெண்ணெயை வெய்யலில்வைத்து அது நன்றாயுருகியபின் இதுகளைப்பொடிசெய்து அரைத்து அந்த நெய்யிற்குழப்பி தனதுகால்கள்மேற்பூசிப் புணரவும், அவர்களுக்கு சுக்கில ஸ்தம்பனமாகும்.

## 285. பக்கம்பூசுவசியம்.

இதில் ௯ - ஆனைவணங்கி- ௬ - ஆறுபுள்ளிவண்டு, அ - சத்திச்சாட்டரணை, ௧௧-கரும்பூனைப் பஞ்சாங்கம், ஆ ௩௪. இவைகளை கிரகணம் பிடித்திருக்கும்பொழுது பொடிசெய்து அதில் ஐந்துமலங்களுஞ் சேர்த்து

தேனில் அரைத்து அதையுலராது பக்குவமாய்வைத்து மாதர்களை ஓர் பக்கம்பூசிப் புணரவும், அவர்கள் ஆசையுண்டாய் தினமும் வாழ்புரிவர்.

## 286. தீபசுக்கிலஸ்தம்பனம்.

இதில் கரு - மயூர்சிகைப்பூடு, க - வெள்ளாட்டுநாக்கு, கச - சிறியாநங்கை, சு - ஆறுபுள்ளிவண்டு, ஆக ௩௪. இவைகளை பொடிசெய்துப் பொன்னூமத்தங்காயுங்கூட்டி யரைத்து தேன்கலந்து சீலையிற் றிரியாகத் திரித்து விளக்கேற்றி நெய் அல்லது நல்லெண்ணைவிட்டுக் கொளுத்திச்சேர சுக்கிலஸ்தம்பனமாம்.

## 287. சேர்டுபிரிவு.

இதில் ௨ - ஆடையொட்டி, எ - அண்டங்காக்கைத்தலை, கரு - வாழை, க0 - புராவெச்சம், ஆக ௩௪. இவைகளை பொடிசெய்து இதில் வேம்பு - தான்றி - புங்கன்பால் - வகைக்கு ௨ - கழஞ்சுவிட்டு இலந்தை யெண்ணையிலரைத்து அவைகளைப் புது அகலில்வைத்து வாய்மூடி அவர்கள் வீட்டினிடமாய்ப் புதைத்து வைக்கவும், சதிபுருஷர்கள் பிரிவாய் விலகி ஓடிப்போய்விடுவார்கள்.

## 288. குடியோட்ட.

இதில் க௨ - பேய்த்துமட்டி, கரு - மயில்பிச்சு, ரு - ஆண்கழற்சி ச-பச்சோந்தி, ஆக ௩௪. இவைகளை சும்மாய்வைத்து சத்துருவின் நீர்க்குழி மண்ணிற் பாவை செய்து அமரபக்ஷத்தில் அவர்கள் பெயரைமாறி யெழுதி அப்பாவை வயற்றில் வைத்து முன்மருந்துகளையும் அதோடுவைத்துச் சுருட்டி கறுப்புக்கம்பளியில் மூடி கட்டுக்கயிற்றூற்கட்டி எதிராளிவீட்டில் வைக்கவும், உடனே குடியோட்டி அவர்களை நாசமாக்கும்.

## 289. மலடுநீங்க.

இதில் கக - அழுகண்ணி, ரு - மண்டேகப்பிச்சு, க௨ - பேய்த்துமட்டி, சு - ஆறுபுள்ளிவண்டு, ஆக ௩௪. இவைகளை நீரயரில் பசும்பாலிலரைத்து மலடாகிய மாதர்கள் பசும்பாலில் அல்லது கரிபதார்த்தங்களில் உண்டுவரவும், அம்மாது மலடானது நீங்கி நல்லமக்களைப் பெறுவள்.

## 290. ஸ்ரீதேகஞ்சிறுக்க.

இதில் கரு - மயூர்சிகைப்பூடு, ச - பச்சோந்தி, கச - சிறியாநங்கை, ௩ - கருநாய்நாக்கு, ஆக ௩௪. இவைகளைக் கழஞ்சு நிறைகளாயெடுத்து, கசு - பொற்றலைக்கையாந்தகரை, க - வெள்ளாட்டுநாக்கு, அதிற் சேர்த்தரைத்து மாதர்கள் தேகத்தில் ௩ - நாட் பூசும்போது அவள் தேகமானது சிறுத்துவிடும்.

## 291. ஸ்ரீதேகம்பெருக்க.

இதில் முற்கூறிய மருந்தில் பன்னீர்விட்டிழைத்து அதோடு உமிழ்நீர் சேர்த்துக் குழைத்து கைகளிற்பூசி அவள் தேகத்திற்றடவவும், முன் சிறுத்

நதேகம் பெருத்ததாகும். ஈதிரண்டிற்கும் ஒரே மருந்தாகையால், ஸ்திரீகள் தேகமானது சிறுக்கவும் பெருக்கவுஞ் செய்வது சகஜம்,

### 292. ஸ்திரீகள்தேகந்தழைக்க.

இதில் கச - சிறியாநங்கை, ரு - மண்கேப்பிச்சு, ௩ - சீதேவி செங்கழுநீர், கஉ - இந்திரகோபம், ஆ ௩ச. இவைகளை நல்ல யோகம்பார்த் தரைத்து நங்கள் தேகத்திற்பூசிடவும், இவளைப் புணரும் புருடர்க் கினியவளாக அவள்தேகஞ் சமமாயிருக்கும்.

### 293. புண்ணாறச்சீலை.

இதில் க0 - முத்தெருக்கன்செவி, ௩ - கருநாய்நாக்கு, கஉ - பேய்த்துமட்டி, க - காட்டட்டை, ஆ ௩ச. இவைகளை நல்ல யோகம்பார்த் தரைத்து பசுநெய்யிற்குழைத்து சீலையிற்றடவி அ - நாள் புண்கள்மேற் போட்டுவரவும், அப்புண்க ளாறிவிடும்.

### 294 கர்ப்பந் தரிக்க.

இதில் எ - வெண்கொழுஞ்சி, கரு - தேவாங்கு, அ - சத்திச்சாட்டரணை, ச - பச்சோந்தி, ஆ ௩ச. இவைகளை தீயிலெரித்து நோய்களுள்ளவிடங்களில் மாதர்கள் பூசிவரவும், அந்நோய்கள் நீங்கி கர்ப்பமுண்டாகி நல்ல மக்களைப்பெறுவார்கள்.

### 295. விஷமீள.

இதில் க௩ - மயூர்சிகைப்பூடு, சு - ஆறுபுள்ளிவண்டு, கக - அழுகண்ணி, ச - பச்சோந்தி, ஆ ௩ச. இவைகளைக்கூட்டி மயானத்தில் கழுதைநீர், குதிரைநீர் விட்டரைத்து விஷக்கடிவாயிற் பூசிவரவும், தலைக்கேறிய விஷம், உடம்பிலூறியவிஷம், காணாக்கடிவிஷம், மற்றதியாவுந்தீரும்.

### 296. சர்வஜனவசியம்.

இதில் கச - சிறியாநங்கை, அ - ஆதிக்கொடி, க0 - முத்தெருக்கன்செவி, உ - சுழல்வண்டு, ஆ ௩ச. இவைகளை பச்சோந்தி யொன்று சேர்த்தரைத்து நிழலிலுலர்த்தி ஒரு முகம்பார்க்குங் கண்ணாடியேற முழுதும் பூசி, அதைத் தான் பார்க்கையில் மண்விண்ணிலுள்ள சர்வஜனங்களும் வசியமாவார்கள்.

### 297. உரோமங்கறுக்க.

இதில் க0 - முத்தெருக்கன்செவி, ௩ - கருநாய்நாக்கு, கரு - வாலுழுவை, சு - ஆறுபுள்ளிவண்டு, ஆ ௩ச. இவைகளை நன்றாய்ப் பொடிசெய்து சாந்துபோலரைத்து வழித்து நல்லெண்ணெயிற்கலந்து சிலநாள் வைத்திருந்து தனது உரோமங்களில் அல்லது நரைமயிர்களில் தடவிவரவும்; வெளுத்ததியாவுங் கறுத்துவிடும்.

## 298. ஊமாற.

இதில் கூ - மயூர்சிகைப்பூடு, கூ - காட்டட்டை, அ - வெள்ளெருக்கு, அ - ஆதிக்கொடி, ஆக கூச. இவைகளைப் பொடிசெய்து ஒரு கொப்பரைத் தேங்காய்க்குள்ளிட்டு இதோடு கொஞ்சம் கருங்கொள்ளும் நுணுக்கிப்போட்டு வாய்க்குப் பிரடையடித்து சேற்றில் க - மீ புதைத்துவைத்தெடுத்து ஊமயிரிற்றடவ முழுதுங் கறுத்துவிடும்.

## 299. சோர்கரிவேகாதிருக்க.

இதில் கூ - மயூர்சிகைப்பூடு, எ - அண்டங்காக்கைத்தலை, கூ - ஆனை வணங்கி, ரு - மண்டூகப்பிச்சு, ஆக கூச. இவைகளை நல்லயோகத்திலரைத்து உருண்டைசெய்துவைத்து வேண்டும்போது பகைவர் அடுப்பினிற் போட்டுவிடவும், அதில் நெருப்புத்தீயேறாது. கரிமுதலிய சோறியாவும் வேகாது முன்போட்டபடியே மறுத்திருக்கும்.

## 300. ஸ்ரீகள்நோயகல.

இதில் க - பிரமதண்டு, கஉ - இந்திரகோடம், கரு - பொற்றலைக் கையாந்தகரை, ரு - மண்டூகப்பிச்சு, ஆக கூச. இவைகளைப் பொடிசெய்து எருமைவெண்ணெயுந் தேனும்விட்டுக் குழைத்து ஸ்ரீகட்கு நோயுள்ளவிடங்களிற் பூசிவரவும், வெட்டைமுதலிய பலவித நோய்களுந்தீரும்.

## 301. சத்துருதேய.

இதில் கஉ - பேய்த்துமட்டி, கூ - காட்டட்டை, க0 - முத்தெருக்கன் செவி, ரு - கருநாய்நாக்கு, ஆக கூச. இவைகளை அரைத்து சத்துருவின் நிதானத்தைக்கொண்டு அவனைப்போல் பாவைசெய்து அதின் மார்பில் எதிரி பெயரை யெழுதி அதற்குச் செய்வனவற்றைச்செய்து பட்டுப்போன மரத்தடியிற்புதைக்கவும். அச்சத்துரு வுடல்தேயும்.

## 302. பலநோயகல.

இதில் கஉ - பேய்த்துமட்டி, அ - ஆதிக்கொடி, கக - அழுகண்ணி, ரு - கருநாய்நாக்கு, ஆக கூச. இவைகளைச் சூரியகிரகணம் பிடித்திருக்கையில் பொடிசெய்து நெய்யினிற் குழப்பி பஞ்சினைச்சேர்த்தரைத்து உருண்டையாக்கி புத்து அல்லது தொழுவத்திற் புதைத்துவைக்கவும், எவ்வித நோய்களுந்தீரும்

## 303. சத்துருகுடிகெட.

இதில் ரு - சீதேவிசெங்கழுநீர், க0 - புராவெச்சம், கஉ - பேய்த்துமட்டி, கூ - காட்டட்டை, ஆக கூச. இவைகளை நல்ல யோகத்தில் சூரியகலையில்நின்று பொடிசெய் தரைத்து வேம்பின்மேலிருக்குங் காக்கைக்கூண்டின் சுள்ளியை நெருப்பிற்சுட்டு சாம்பலாக்கி அச்சாம்பலையும் முன்மருந்தையும் தனது சத்துருவின் வீட்டிற் புதைத்துவைக்கவும், அவர் மனைவிமக்

கள் சுற்றம்வாழ் முதலியவை நொந்து சண்டைசச்சரவினால் மனையகன்று குடிவிட்டேகி உயிர்விடுவர்.

### 304. சத்துருயாவுங்கெட.

இதில் ௧௨ - பேய்த்துமட்டி, ௧0 - புராவெச்சம், ௧௧ - அழுகண்ணி, ௧ - வெள்ளாட்டுநாக்கு, ஆக ௩௪. இவைகளைச் சித்தயோகத்திற் பொடி செய்து அரைத்தெடுத்து ஐந்து மலங்களுஞ்சேர்த்துக் குழைத்து எட்டிக் கொம்பில் மூளைசெதுக்கி அதின்மேற்றடவி ஆப்படிக்க, சத்துருக்கள் குடி நாசமாய கேடுசூழ்ந்து அவாகள் அருகிலிருந்தவர்கட்கும் பல சங்கடங்கள் நேர்ந்து பாழாவார்கள்.

### 305. பேய்விலக.

இதில் ௧ - பிரமதண்டு, ௧௫ - தேவாங்கு, ௧௬-பொற்றலைக்கையாந தகரை, ௨ - சுழல்வண்டு - ஆக ௩௪. இவைகளை பொடிசெய்து தனதுவீட் டிற்புதைத்து வைக்கவும், அதிலுள்ள பூதப்பிரேதப்பிசாசு பேய்பில்லி சூனி யம் யாவும் நீங்கி விலகிப் போய்விடும். அதன்பின் சுபகரமாயிருப்பர்.

### 306. சர்வவசியம்.

இதில் ௧௧ - அழுகண்ணி, ௧௩ - மயில்பிச்சு, ௩ - சிதேவிசெயகழுநீர், எ - அண்டங்காக்கைத்தலை, ஆக ௩௪. இவைகளை பொடிசெய்து இதில் ஐந்துமலமுஞ் சேர்த்து சித்தயோகத்தில் பசுநெய் விட்டரைத்து மாதர்கள் முகம்பாதங்களிற் பூசவும், வசியமாவார்கள். இதில் சர்வவசியமாகும்.

### 307. தீமைகள்நீங்க.

இதில் ௨ - ஆடையொட்டி, ௧௧ - கரும்பூனைப் பஞ்சாங்கம், ௬ - தா ரி, ௧௫ - தேவாஙகு, ஆக ௩௪. இவைகள் சும்மாய்வைத்து முன்னம் அன் றிரவில் போசனஞ் செய்யாதிருந்து மறுநாள் தலைக்குவார்த்து புஷ்பமுடி த்து சாந்து பொட்டிட்டு உபவாசமாயிருந்து முற்கூறியமருந்துகளைப் பொ டித்து ஐம்மலமுஞ்சேர்த்து பசும்பாலிலரைத்து உலாந்தி தனது தலைமேல் பாகையில் தரித்துக்கொள்ள சகல தீமைகளும் நீங்கி சம்பத்தையடைவர்.

### 308. சர்வலோகவசியம்.

இதில் அ - சத்திச்சாட்டரணை, ௬ - காட்டட்டை, ௩ - சிதேவி செ யகழுநீர், ௧௪ - கோரோசனை, ஆக ௩௪. இவைகளை பொன்னூமத்தைவேர் சமனாய்ப் போட்டு குங்குமம் சாந்து ஐந்துமலம் சேர்த்தரைத்து வெண்ணை யிற் குழைத்து உடம்பிற் பூசிச்செல்ல, யாவரும் வசியமாவார்கள்.

### 309. திகைப்புண்டாக.

இதில் ௬ - ஆனைவணங்கி, ௧0 - புராவெச்சம், ௩ - வெள்ளெருக்கு, ௧௧ - கரும்பூனைப்பஞ்சாங்கம், ஆக ௩௪. இவைகளை ஊமத்தஞ்சாரிலும், எருக்கன்பாலிலும் அரைத்து அதனைப் பகைவர் உடம்பின்மேற்பூசவும், அ வர்கள் திகைத்து யாதொன்றுந் தோன்றாது விழித்துழலுவர்.

## 310. குத்துவெட்டுறுதிருக்க.

இதில் கரு - மயூர்சிகைப்பூடு, க - வெள்ளாட்டுநாக்கு கசு - பொற்றலைக் கையாந்தகரை, ச - பச்சோந்தி ஆக ரு௪. இவைகளில் கோயில் மண்ணுஞ்சேர்த்தரைத்த சாந்தை தன்னுடம்பிற்பூசி அமரிற்செல்லப்புகின், இவன்மேல் எவ்வித ஆயுதங்கள் பட்டாலும் அல்லது குத்தினாலும் வெட்டினாலும் அக்குத்து வெட்டுகள் தன் மேற்படாது.

## 311. முயல்களோட.

இதில் கசு - பொற்றலைக்கையாந்தகரை, ரு - கருநாய்நாக்கு, ச - வெள்ளெருக்கு, கக - கரும்பூனைப் பஞ்சாங்கம், ஆக ரு௪ - இவைகளை சித்தயோகத்திற் பொடிசெய்து அதில் ஐந்து மலங்களுஞ்சேர்த்து மருந்து செய்து வைத்துக்கொண்டு வனத்திலுள்ள முயல்களையோட்ட, அவையெல்லாம் ஓடிப்போய்விடும். அங்கொன்றேனுமிராது.

## 312. பட்டவாயுதமழுங்க.

இதில் கசு - பொற்றலைக்கையாந்தகரை, க - வெள்ளாட்டுநாக்கு, க0 - முத்தெருக்கன்செவி, எ - அண்டங்காக்கைத்தலை, ஆக ரு௪. இவைகளை பஞ்சதிரவியங்களினீரும், காகக்கூட்டங்கள் சூழ்ந்துகுளிக்கும் குளத்து நீரும், சித்தயோகத்தில் சாந்துபோலரைத்து அம்மருந்தை உடம்பிற்பூசி, போர்முகத்திற் செல்லவும், தன்மேற்பாயப்பட்ட எவ்வித ஆயுதங்களும் கூர்மழுங்கித் தையாது நின்றுவிடும். வெட்டுகள் குத்துகள் பட்டாலும் வெட்டுகுத்தறாதிருக்கும்.

## 313. விஷமீள.

இதில் கச - சிறியாநங்கை, எ - அண்டங்காக்கைத்தலை, கஉ - பேய்த்துமட்டி, க - வெள்ளாட்டுநாக்கு ஆக ரு௪. இவைகளை காவேரியினுள்ள கரைமண்ணும், யானைக்கட்டடத்திலுள்ள மண்ணும், அஸ்வதத்தின் குளம்படிமண்ணுஞ் சேர்த்தரைத்து தன்னுடம்பிற் பூசிச்செல்ல, எவ்வகைப்பாம்புகளுங்கடியாது. கடித்தபோதிலும் அவ்விஷமேறாது. மீண்டுவிடும்.

## 314. விஷமறாசியம்.

இதில் கக - அழுகண்ணி, அ - ஆதிக்கொடி, கஉ - பேய்த்துமட்டி ரு - கருநாய்நாக்கு, ஆக ரு௪. இவைகளை குதிரைநீர், கழுதைநீர், மனிதர்நீர் சேர்த்து ஆதிவாரமும் பருவமுங்கூடியதினத்தில் அரைத்து நசியமிடவும், தலைக்கேறியபாம்பு விஷமிறங்கும். இதை உருண்டைசெய்து வைக்கவும்.

## 315. குலைப்புத்தீர.

இதில் க - பிரமதண்டு, அ - ஆதிக்கொடி, கச - சிறியாநங்கை, கக - கரும்பூனைப் பஞ்சாங்கம், ஆக ரு௪. இவைகளை நல்லயோகத்தில் அஷ்டமிகூடியதினத்தில் ஆனைக்காலடி மண்சேர்த்து மனிதர்சிறுநீர், கழுதைசிறுநீர்கலந்து விட்டரைத்து இருகண்களின்மே லெழுதிடவும் குலைப்புதீரும்.

## 316. கண் மாறல்தீர.

இதில் ௨ - ஆடையொட்டி, ௧0 - புராவெச்சம், ௧௫ - வாழை, ௪ - அண்டங்காக்கைத்தலை, ஆக ௩௧. இவைகளை சித்தயோகத்தில் சிவாலயத்தில் இடித்தரைத்து சீலையிற் றிரியாய்த்திரித்து பசுநெய்யில் விளக்கேற்றி மைபற்றவைத்து அவர்கள் கண்களில் ௪ - நாள்வரையி லெழுதவும். கண் மாறலானது விலகித் துலக்கமாகும்.

## 317. பசாசுபூதமகல.

இதில் ௬ - ஆனைவணங்கி, ௧௨ - இந்திரகோபம், ௮ - சத்திச்சாட்டாணை, ௫-மண்கேப்பிச்சு, ஆக ௩௧. இவைகளை நல்லயோகத்தி லரைத்துச் சாந்துபோலவழித்து தன்னுடம்பிலும் முகத்திலும்பூசி கண்களி லெழுதிடவும், பலவித பூதப்பிரேதபசாசுகளும் விலகியோடிப்போம்.

## 318. சத்துருஜெயம்.

இதில் ௭ - வெண்கொழுஞ்சி, ௧௩ - மயில்பிச்சு, ௫ - ஆண்கழற்சி, ௬ - காட்டட்டை, ஆக ௩௧. இவைகளை குருவாரமும் புநர்பூசநக்ஷத்திரமுங் கூடியதினத்தில் பொடிசெய்து பகைவர்மேற் கொஞ்சம் இப்பொடியைத்தூவ, அவர்கள் தோல்வியடைந்து தாள்பணிவர். அதினும் சத்துருஜெயமாகும்.

## 319. சத்துரு ஸ்தம்பனம்.

இதில் முன்னமே பொடிசெய்தமருந்தில் பனங்குறுத்தைச் சன்னமாய்த் தூள்செய்து அதிற்கலந்து தனது சத்துருக்கள்மேற் றூவ, அவர்கள் ஸ்தம்பனமாகுவர். ஈதன்றி இப்பொடியை பகைவர்மேற்றூவ அப்பகைவர் கெடுவதுமன்றி நாசமடைவர்.

## 320. நோய்பசாசுதீர.

இதில் ௩ - சீதேவிசெங்கழுநீர், ௭ - அண்டங்காக்கைத்தலை, ௬ - ஆனைவணங்கி, ௧௫ - தேவாங்கு, ஆக ௩௧. இவைகளை யானைக்கூட்டின் மண்ணுங்கூட்டி பொடிசெய்து அதிற் கொஞ்சமெடுத்து நோயாளிகட்கு பசாசுபிடித்தவர்கட்கு தண்ணீரிற் கரைத்துக்கொடுக்கவும், பேர்பாதிநோய் தீர்ந்ததுபோக, மற்றதும் பசாசுடன் பேர்பாதி தீர்ந்துவிடும்.

## 321. பல வழக்குகள்வெல்ல.

இதில் ௫ - ஆண்கழற்சி, ௧௫ - தேவாங்கு, ௩ - சீதேவிசெங்கழுநீர், ௮ - கரும்பூனைப்பஞ்சாங்கம், ஆக ௩௧. இவைகளை நல்ல யோகநாளிற் சேர்த்தரைத்து உருண்டைசெய்து யாதாமொருவரை விபரீதமாய்ப்பேசவும், அல்லது வழக்குவெல்லவும், இதனை வாயிலடக்கிப்பேசவும், பல வழக்குகள் வெல்லும். எதிராளி வாய்பேசாது தோல்வியடைவர்.

## 322. புருடர்தேகத்தழைக்க.

இதில் கo - முத்தெருக்கன்செவி, அ - ஆதிக்கொடி, கூ - ஆனைவணங்கி, எ - அண்டங்காக்கைத்தலை, ஆக ௬௪. இவைகளில் மாடப்புராவினெச்சமும், ஊர்க்குருவியெச்சமுஞ் சேர்த்தரைத்து அதையெடுத்து தேகத்திற்பூசவும், அன்றுமுதல் ஸ்தூலித்துவளருவர்.

## 323. மஞ்சளிற்பூசவசியம்.

இதில் கரு - வாழை, எ - அண்டங்காக்கைத்தலை, கக - அழுகண்ணி, க - வெள்ளாட்டுநாக்கு, ஆக ௬௪. இவைகளைச் சித்தயோகத்திற் பொடிசெய்து மாதர்களாகிலும் அல்லது மைந்தர்களாகிலும் இன்னுந் தானேயாகிலும் அதனை மஞ்சளிற்கலந்து பூசிகுளித்து மருவிடவும், வசமாவார்கள்.

## 324. எதிரிகள்கெட.

இதில் கரு - வாழை, சு - ஆறுபுள்ளிவண்டு, கக - அழுகண்ணி, உ - சுழல்வண்டு, ஆக ௬௪. இவைகளை அமரபக்ஷம் அஷ்டமியில் ஒரு பெண் கையினால் அத்தர் பன்னீர்விட்டரைத்து நிழலுலர்த்தி எதிரியின் றலைமேற்றூவவும், கெடுதிசெடுதியில சேர்ந்து கொர்ந்திடுவர்.

## 325. நீர்மேல்நடக்க.

இதில் கஉ - பேய்த்துமட்டி, கரு - தேவாங்கு, ௩ - சீதேவி செங்கழுநீர், ச - பச்சோந்தி, ஆக ௬௪. இவைகளை சேர்த்து இதில் நாலத்தொன்று முள்ளிவேர் கூட்டியரைத்து உள்ளடியிற்பூசி நீர்மேல் நடக்கவும், ஓடவும், உலாவிடவும் எளிதாயிருக்கும். இதனை அப்பியசிக்காமற் செய்வது வெகுகடினம்.

## 326. கண்குருடுநீங்க.

இதில ரு - ஆலங்கழற்சி, அ - ஆதிக்கொடி, கூ - ஆனைவணங்கி, கo - புராவெச்சம், ஆக ௬௪. இவைகளைச்சேர்த்து இளநீரிலரைத்து சாந்தாகவழித்து உருண்டையாக்கி குருடர்க் இரண்டு கண்களிலுந் தீட்டவும், அவர்கள் விழிபார்வைகள் நன்றாய்த்தெரிந்து உலாவிவருவர்.

## 327. புணர வசியம்.

இதில எ - வெண்கொழுஞ்சி, அ - ஆதிக்கொடி, கூ - ஆனைவணங்கி, கo - புராவெச்சம், ஆக ௬௪. இவைகளை சூரியனுக்குப் பின்னாகவிருந்து அரைத்து நிழலிலுலர்த்தி உமிநீருஞ் சேர்த்திழைத்து மாதர்கள் முகத்திற்பூசி யணைந்திடவும், அவர்கள் பிரியாது எக்காலுங் கூடிச்சுகித்து வாழ்புரிந்திருப்பா.

## 328. இராஜவசியம்.

இதில் கூ - ஆனைவணங்கி, சு - ஆறுபுள்ளிவண்டு, கஉ - பேய்த்துமட்டி, எ - அண்டங்காக்கைத்தலை, ஆக ௬௪. இவைகளை தண்ணீரிலரைத்து

சாந்தாகவழித்து எ - நாள் வீட்டிற்குள் வைத்து நிழலுலர்த்தலாயுலர்த்தி யதை யுருண்டையாக்கி தன் வாயிலடக்கிச் செல்லவும், வழக்குகள் வெல்லுவதுடன் எதிரிவாய் பேசாதிருப்பன். இராஜவசியமுமாம்.

## 329. புணரப் பொடிவசியம்.

இதில் கரு - மயூர்சிகைப்பூடு, உ - சுழல்வண்டு, கச - சிறியாநங்கை, ரு - மண்டுகேப்பிச்சு, ஆக ஙச. இவைகளை நல்ல யேககத்திற்பொடிசெய்து இப்பொடியிற்கொஞ்சம் வாயிலிட்டு மாதர்களைப்புணரவும், அவர்கள் எக்காலும் பிரியாது விசுவாசமாயிருப்பர்.

## 330. சித்கியுண்டாக.

இதில் அ - சத்திச்சாட்டாணை, கஉ - இந்திரகோபம், கூ - ஆனைவணங்கி, ரு-மண்டுகேப்பிச்சு, ஆக ஙச. இவைகளைக் கூட்டி சித்தயோகத்தில் பொடிசெய் தரைத்து நெய் தேன்கூட்டிச் சாரித்து, க-மீ தான் புசிக்கவும், யாவுஞ் சித்தியுடையவராய்ச் சித்தராவார்கள்.

இக்கிரியைகளில் பாகை ச - க்கு இலககம் ஙச - ஆக, மூலம் - உ, சிவன் - உ, இன்னு மற்றதைக்கொண்டு செய்யுந்தொழின்முறை யாவுந் தவறின்றி நடந்தேறும். இதில் மண்டுகேப்பிச்சிலும் மனிதர்பிச்சதிக நலம்.

இலக்கக்கக்கிஷக்கிரியைகள் முற்றிற்று.

## 331. விரற்புறட்டு.

ஒருவன் லலாடத்தில் தனது வலதுகை நால்விரல்களையுமடக்கி ஆள் காண்டி விரலினைமாத்திரம் நெற்றியின் புருவமையத்திலூன்றி வலதுகண்ணைமூடி இடதுகண்ணாற், பார்த்தாலும், இடது கண்ணைமூடி வலதுகண்ணாற்பார்த்தாலும் அவன்கைவிரலானது கோணலாகவே வளைந்து புறண்டிருப்பதுபோலவே யிருக்கும்.

## 332. காசுவிழிப்பு.

ஒரு டம்ளரில் அடிப்புறம் கரடுமுறடில்லாததில் தண்ணீரையூற்றி அதில் காலணாவைப்போட்டு மேலொரு கடிதத்தைவைத்து மூடிக்கவிழ்த்துப்பார்க்கவும், அதினுள் காலணாவொன்று, அரையணாவொன்று இருக்கும். மறுபடியும் அதையூற்றிவிட்டு நிமிர்த்தியெடுக்கவும் அக்காலணாவொன்றுதானிருக்கும்.

## 333. லிகிதப்பதிப்பு.

(நைட்ரேட் ஆப் சில்வர்) என்பதை இருட்டுவீட்டில் தண்ணீரிற் கரைத்து அதைக் கடிதத்தின்மேற்பூசி அதின்மேல் ஒரு மெல்லிய கடிதத்திலெழுதியபடம், அல்லது மாப்-பத்திரமுதலிய தெதுவாகிலும் அதினோடு பொருந்தவைத்துப் பிகிந்து அப்படியே வெய்யலில்வைத்து ரு - நிமிஷம் பொறுத்து இருட்டில்வைத்து எடுத்துப்பார்க்கவும், வெறுங்கடிதத்தில் அவையனைத்தும் பதிந்திருக்கும். அதை வெய்யலில்வைக்கவும் விரைவில் மறைந்துவிடும். நிழலிலிருக்கவும் நெடுநாள் நீடித்திருக்கும்.

## 334. என்கிரேவர்செய்ய.

ஒரு செம்புத்தகட்டை உ - பக்கமுந்துலக்கி மெழுகையுருக்கி அதில் உ - பக்கமும்பூசி அங்ஙனம் எழுதவேண்டிய லிபிகளை ஊசியினாலெழுதி, நைட்ரிக் ஆசிட்டையும், ஆசெட்டிக் ஆசிட்டையும் ஒன்றாய்க்கலந்து இதையதிற்றேய்த்து ரு-நிமிஷம் பொறுத்தெடுத்து அம்மெழுகைத் துடைத்துப்பார்க்கவும், என்கிரேவர்செய்ததுபோல் அவ்வெழுத்துகள் பதிந்திருக்கும்.

## 335. நீரொட்டாதிருக்க.

லைக்கோ பொடியம் என்னும் பவுடரைக்கையிற்பூசி ஒருடம்ளரில் தண்ணீர்விட்டு அதில் ஒருசெம்புக்காசு அல்லது வெள்ளிக்காசைப்போட்டு அக்கையை விட்டெடுக்கவும், அத்தண்ணீரானது கையிலொட்டாது. ஷெகையில் ஈரமுமிருக்காது.

## ·336. மும்மலக்கரு.

பன்றிமலம், மனிதர்மலம், நீட்டுச்சீலை இம்மூன்றும் குழித்தைலமிறக்கி மூத்தாளைப்பூசித்து அதைத்தணலில் விட்டெறிக்கவும். இப்புகைப்பட்ட மனிதரெல்லாம் தலை சுற்றியாடுவார்கள். இதையே பலசெய்வினைகட்கு முபயோகிக்கலாம். இதில் நாலுக்கன்மலம் சேர்த்தாலுஞ் சேர்க்கலாம்.

### 337. தட்டோடுகுலைய.

குரங்குகள் வாசஞ்செய்யும் ஊரில் பகைவர் வீட்டின் ஓட்டின்மேல் கொஞ்சம் பொரிகளை இறைத்துவைக்கவும், அக்குரங்குகளானது அப்பொரிகளையெல்லாம் பொருக்கித்தின்னவும் அவ்வோடுகளைக் கிளரிக்கிளரி தின்று பின்னமாய் நாசப்படுத்திவிடும்.

### 338. தலைசுற்றிப்பேயாட.

ஆதிவாரங்காலையில் ஊமத்தங்கொடிக்குக் காப்புகட்டி வேரறுமற்றிடுங்கி வளையமாடி (ஹ்ரீம்) என்று ௱அ - உருசெபித்து அதை நெருப்பிற் புகைபோடவும், அப்புகைபட்ட மனிதரெல்லாம் தலைசுற்றிப் பேயாடுவார்கள். அவர்களைத் தண்ணீரில் முழுகவைக்கவும் அது நின்றுவிடும்.

### 339. சாவல்சாக.

செந்தகரைவேரை கோழிகளின் மூக்கின்மேற் றட்டவும், அது பட்டவுடனே செத்துவிடும். அதற்கு முறிப்பு:—பசுங்கொன்றைவேர் அல்லது ஆனிவிரைவேர் அதுகளின் மூக்கின்மேற் றட்டவும், அவைகள் உயிர்வந்து பிழைக்கும்.

### 340. பசியாதிருக்க.

நாயுருவிவிரையைப் பசும்பாலிற்பொங்கி அரைக்கால்படி சாதம்புசிக்கவும், அவருக்கு ௪0-நாள் அல்லது ஒருமண்டலம் பசியற்றிருக்கும். தினசரி அரைக்கால்படி பசும்பால் மாத்திரங்குடித்துவரவும். இதற்கு முறிப்பு: அப்பாலிற்கொஞ்சம் மஞ்சள்தூளைக்கலந்து சாப்பிட்டுவரவும், நன்றாய்ப்பசிதீபன முண்டாகும்.

### 341. மோகினியகல.

தான்குளித்து ஆசாரமாய் வெள்ளாயடுப்பினிடஞ் சென்று அங்கு பூசைநைவேத்தியம்வைத்து தூபதீபங்காட்டி வெளுக்கடிப்பேன் என்று ௱அ-உருசெபித்து அவ்வடுப்பினுள்ளிருக்கும் சாம்பலிற் கொஞ்சம் துணியில் முடிந்து மோகினிபிடித்தவன் அரையினிற் கட்டிவைக்கவும். அம்மோகினி அதுமுதல் அவனைத் துடாது விலகிவிடும்.

### 342. நீர்மேல்மிதக்க.

எவ்வித சலத்திலாகிலும் தான் மல்லார்ந்துபடுத்துக்கொண்டு இரண்டு கைகளையும் இடுப்படியில்வைத்து தண்ணீர்க்குமேற் றூக்கிநிறுத்தி பிரணவத்தையுச்சரித்து அவ்விரண்டு கைகளையும் இருபக்கம் நீட்டிவைத்து தான் மிதந்திருப்பதில், மூச்சுதம்பிடிக்கவும் நெடுநேரம் அசையாமலிருக்கலாம்.

### 343. சர்வாஞ்சனம்.

பெரிய அரணையின்பிச்சும், தலைச்சன்பேறு உத்திக்கொடியும் உலர்த்தி இதுகளை மையாநறுக்கி இதினோடு விஷ்ணுகாந்திச் செடியை ஞாயிற்பிடுங்கி

தூபதீபங்கொடுத்து சாபநிவர்த்தியுஞ்செய்து வேரருமலெடுத்து உலாத்திப் பொடித்து இம்மூன்றும் இரும்புக்கரண்டியிலிட்டு பசுநெய்விட்டு வறுத்து காகிதத்திற்றுழாவி கல்வத்திட்டு தன்னிலையைத்தியாளித்து அஞ்சனதேவியைப்பூசித்து மைபோலரைத்து வெற்றிலையிற்றடவிப் பார்க்கவும். வெளியிலுள்ள வெகுதூரசெய்திகள் புதையல் நிக்ஷேபமுதலியதி யாவுந்தெரியும்.

## 344. இலைகள்மூங்கில்கட்குசாயமிட.

தனக்கிஷ்டமாகிய சாயபவுடரை வாங்கிக்கொண்டு கொஞ்சம் படிகாரமும், வெண்காரமுஞ்சேர்த்து பானையில் தண்ணீரில்விட்டு பனையோலை, ஈச்சஞ்சோலை, கோரை, மூங்கிற்பத்தை முதலியதைப்போட்டு அடுப்பின்மீதேற்றி கொஞ்சநேரம் எரியவைத்து அதற்குப்பின் எடுத்துக்கொள்ள வேண்டியது.

## 345. மற்றொருவிதம்.

பனையோலைகட்கும், ஈச்சஞ்சோலைகட்கும், ஸ்ரீசூரணஞ் செய்யும் மஞ்சளுக்கு சாயங்கட்டுவதைப்போல் முன்னோர்கள் செய்துகொண்டிருந்தது சகஜம்.

## 346. புதுகத்திதுருபிடிக்காதிருக்க.

ஒருபெட்டியிலாகிலும், பாத்திரத்துள்ளாகிலும் சுண்ணாம்பு நீரைக்கொட்டி அதில் கத்திப்பிடிமேலிருக்க மற்றதுள்ளிருக்க அந்நீரில் எவ்வித கத்திமுதலிய வாயுதங்களைச் சொருகிவைத்து அது எத்தனைவருடமிருந்தபோதினும், முன் மெருகுடன் புதியதாகவேயிருக்கும். பிடியானது சுன்னநீரிற் படுமிடத்தில், மஞ்சள் சாயமாகக் காணப்படும். அச்சுன்னநீர் விபூதியைப்போல் வழவழப்பா யிருக்கவேண்டும்.

## 347. கத்திகளின் துருபோக்க.

துருவு பிடித்துள்ள கத்திகட்கு, ஸ்வீட் ஆயில் என்னும் எண்ணையை ஒரு நாளெல்லாந் தடவிவைத்து, மறுநாள் சீமைசுண்ணாம்பைப் போட்டுத் தேய்க்குமிடத்தில் அது புதியகத்திபோற் பிரகாசிக்கும்.

## 348. முட்டையின் மேலெழுத.

கோழிமுட்டையை நன்றாய்க் கழுவியெடுத்துக்கொண்டு மெழுகையுருக்கி அந்த முட்டையெல்லாம் பூசி அதன் மேலே எழுதவேண்டியவையெல்லாம ஊசியினாலெழுதி ஆஸிட்டிக் ஆஸிட்யென்னும் திராவகத்தில் மூழ்த்தி எடுத்துப்பார்க்க அப்பட்டமாகக் காணப்படும்.

## 349. கிளாஸ்புட்டி இதுகளை கத்திரிப்பது.

ஒரு புட்டியில் பச்சை மெருகெண்ணை (லின்ஸீட்ஆயில்) வார்த்து நன்றாய் உலையில் காச்சின இரும்புகம்பியை அந்த புட்டிக்குள் எண்ணைக்குட்படும்படி மெதுவாய்விடுமிடத்தில் அந்த புட்டிக்குள் எண்ணையிருக்கு மட்டத்துக்கு உடைந்து விடும்.

## 350. மற்றொருவிதம்.

இரீஸன் ஆயிலில் பருத்திநூலை நனைத்துக்கொண்டு தனக்கிஷ்டமான யிடம் வரையில் அந்த நூலை புட்டிக்குமேலே சுத்தி வைத்துக்கொண்டு அந்த நூல் சுத்தியிருக்கும் அடிமட்டம் வரைக்கும் முழுகும்படி ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து வைத்துக்கொண்டு இருந்தால் அது அறுந்துவிடும்.

## 351. இன்னொருவிதம்.

வைர ஊசியினுல் கண்ணாடிகளை யறுப்பது எளிதென்று யாவருக்குந் தெரிந்தவிஷயமே யல்லவா? அப்படியே கூழாங்கல்லை உடைக்குமிடத்தில் எங்கேயாகிலுமொரு பக்கம்கருக்குடைய ஊசியைப்போல விருக்கும். அதினுல் கண்ணாடிகள் புட்டிகள் முதலானவைகளை அறுத்துக்கொண்டு கொஞ்சம் காச்சின இரும்பு கம்பியை அந்த அறுத்தவாயில் வைத்தால் அது வரையில் உடைந்துபோகும். மேலும், புட்டியை இந்த கூழாங்கல்லினுலறுத்து பருத்திநூல் வற்றியைக்கொளுத்தி அந்த அறுத்த வாயில் காட்டிக்கொண்டே வருமிடத்தில் அதுவும் உடைந்துப்போகும். மேல்கண்ட இரண்டு விஷயங்களைப் பார்க்கிலும் இது சிறந்ததாகும்.

## 352. கிறுக்கியயெழுத்துதெரிய.

சிலர் தஸ்தாவேசுகள் முதலியவைகளில் எழுதிய யெழுத்துகளை கத்தியினுல் மெதுவாய்ச் சுரண்டிவிடுகிறார்கள். அதனை பொட்டகிராப் பெடுக்கும்பக்ஷத்திலும், இன்னும் அயோடைன் திராவகத்தின் ஆவியிற் பிடித்தபோதிலும் முன் கத்தியாற் சுரண்டியது நன்றாகக் காணப்படும்.

## 353. கிளாசுருவிற் பித்தளையொட்ட.

காஷ்டிக் சோடா பலம் க, காலோபோனியம் என்னும் ஒருதினுசு பிசினி பலம் ௩, தண்ணீர் பலம் ரு, இம்மூன்றுஞ்சேர்த்துக் கொதிக்கவைத்து பிளாஸ்டர் ஆப் மாரீன் என்னும் சீமை சுண்ணாம்புத் தூள் பலம் ௪௭, சேர்த்து நன்றாய்ப் பிசைந்துக்கொண்டிருக்கில் இலப்பமாகும். அதினுல் கண்ணாடிகள், புட்டிகள் முதலியவைகளில் பித்தளை வஸ்துக்களை பொருந்த ஒட்டிவைக்கலாம். இன்னும் சிம்னி பர்னரையும் ஒட்டலாம்.

## 354. மற்றொருவிதம்.

ஜலம் ௰ - பலம், காஸ்டிக் சோடா ௪ - பலம், ரொஸின் ௬ - பலம், பிளாஸ்டர் ஆப் பாரீன் பவுடர் ௬ - பலம், இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய்ப்பிசையுங்கால் இலப்பமாகும். இதினுல் ஒட்டவைக்கும் சாமான்களியாவும் பொருந்த ஒட்டவைக்கலாம். கிரீஸனுயில் விளக்குகளுக்குப் பர்னரைக்கூட ஒட்டவைக்கலாம். பிளாஸ்டர் ஆப் பாரீன்சுக்குப் பதிலாக ஒயிட்லெட்டையு முபயோகிக்கலாம். ஆயினும் அது விரைவாகக் காயாது.

## 355. மரச்சாமான்கட்கு வர்ணங்கொடுக்க.

உழமண்ணை ஜலத்திற்கரைத்து நாலைந்துதிறம் வர்ணங் கொடுக்கவேண்டிய சாமான்களைக்கழுவி தேங்காய்க்குடுமி நாரினாற்றேய்த்து பரிசுத்தஞ்செய்தபின் சுண்ணாம்பைத் தண்ணீரிற்கரைத்து அத்தண்ணீரால் மரச்சாமான்களை நனைத்து தேங்காய்நாரினால் தேய்த்துக் கழுவவும் அல்லது பொட்டிலுப்புப்போட்ட தண்ணீரினாலாகிலும் கழுவலாம். இப்படிச் செய்வதினால் மரச்சாமான்களிலிருக்கும் புகை, கறை, எண்ணெய்ச்சிக்கு முதலியவைபோகும். புதிய மரச்சாமான்கட்கு கடல்நுரையால் தண்ணீர்விட்டுள்ளே சுண்ணாம்பைப்போலிருப்பதினாற் றேய்த்துக் கழுவவேண்டும். எண்ணெ வார்னிஷ்போட்ட பழையசாமான்களை இதினாலேயே தேய்த்துச் சுத்தப்படுத்தவேண்டும்.

## 356 வர்ணம் பூசும்வகை.

தமக்கிஷ்டமான வர்ணத்தைவாங்கி அதிற் ஜலம்விட்டு கொஞ்சம் வேலன்பிசினிசேர்த்துப் பூசுவதற்குத் தண்ணிவர்ணமென்று பெயர். மேலும் அகத்தியெண்ணெயுடன் வர்ணத்தையரைத்துப் பூசுவது எண்ணெவர்ணமென்று பெயர். தண்ணீர் வர்ணத்திற்காகிலும் எண்ணெய்வர்ணஞ் சிறந்தது. தற்காலத்தில் எண்ணெவர்ணமே தயார்செய்து சீமையிலிருந்து விக்கிரயத்திற்கு வந்திருக்கின்றது.

## 357. வஜ்ஜிரமென்று பிளகியிருக்க.

௩௬ - பலந் தண்ணீரை ஒரு சட்டியில்விட்டு, அதில் [illegible] பலம் வஜ்ஜிரம்போட்டு சிறுகவெரித்து அது கரைந்தபின் இறக்கிக் கலக்கிக்கொண்டிருந்து அதில் ௩ - பலம் நைட்ரிக் ஆஸிட்டை கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்த்து கலக்கிவைத்துக்கொண்டிருந்து அதன்பின்பு புட்டியில் விட்டு வைக்கவேண்டும் வஜ்ஜிரம் நல்லதாயிராதபக்ஷத்திற் கட்டிவிடுமாதலால், அப்போது நைட்ரிக் ஆஸிட்டைக் கொஞ்சம் அதிகமாய்ச்சேர்க்கவும். இது தோல்கள், காலிகோ துணிகள் ஒட்டுவதற்கும், மரச்சாமான்களை ஒன்றோடொன்று ஒட்டுவதற்கும் பிரசித்தமாகியது.

## 358. கிரீசனாயில்தீபம் ஜ்வலிக்க.

கிரீசனாயிலில் கிஞ்சம் உப்பேனும் அல்லது கற்பூரமேனும் தூளாய்க் கலக்குமிடத்தில் மட்டக் கிரீசனாயிலாகிலும் பிரகாசமாக ஜ்வலித்தெரியும். அதில் நாற்றமுமிராது.

## 359. ஷை பர்னர் சுத்தமாக.

இரண்டுமாதங்கட்கொருதரமாகிலும் பித்தளைப்பர்னரை சோடாகலந்த வெந்நீரிற்போட்டு ஊறவைத்துப் பின்பு நன்றாய்க் குடைந்தெடுக்குமிடத்தில் சுத்தமாகவிருக்கும் கிரீஸனாயில் விளக்குகளுக் குபயோகிக்கும் வற்றிகளை (விளிகள்) காடியிலூறவைத்து நன்றாயுலர்த்தி அதற்குமேல் பர்னரிற்

போலேவது மெத்தவும் நன்மை. புதியபானையில் தண்ணீர்விட்டு அதிற் சிமினியைவைத்து சிறுகவெரித்துக் கொதிவந்தவுடன் அப்பானையை யிறக்கி ஓரிடத்தி லசையாமல்வைத்து ஆறியபின் பானையுள்ளிருக்குஞ் சிமினியை யெடுத்து அம்மோனியா போட்டுக்கலந்த தண்ணீரிலுற்கழுவி கன்றாய்க் காய்ந்ததின்மேற் றுடைத்து பர்னருக்கு மாட்டிடும்பக்ஷத்தில் எவ்வளவு சூடேறியபோதினும் அது உடையமாட்டாது.

## 360. அபிரோக்கு நவநீதஞ்செய்ய.

வெள்ளை அபிரேக்கை சிறுகக் கத்திரித்து காடித்தண்ணீரில் ஓரிராத்திரி ஊறவைத்து மறுநாளதனை கல்வத்தில் அல்லது அம்மியிலரைத்து சுண்ணாம்புடன்கலந்து சுவர்களை மொழுகுமிடத்தில் பளபளவென்று ஜ்வலிக்கும். அபிரேக் கதிகமாகில் உரலிற்போட்டு ருப்பிக்கொள்ளவும். இந்த மொத்தையை சுண்ணாம்புடன் கலக்காமல் சுவருக்குப் பூசுவதுமுண்டு. இது மகமதியர்கள் தேசாச்சாரம் வழங்குவதுண்டு.

## 361. காப்பர் பிளேட் பதிக்க.

உறப்பாகிய காகிதத்தில் கையினால் நல்ல இங்கியைக்கொண்டு எழுதவேண்டிய பேர்முதலியவைகளை எழுதி இங்கி யீரமாறுமுன்னம் அராபிக்கம் என்னும் பிசினியை நன்றாய்த் தூள்செய்துவைத்து, அவ்வெழுத்துகளின்மேற்போட்டு அது வுலர்ந்தபின் அவ்வெழுத்துகளில் அதிகமாய்ப்பிடித்திருக்கும் பிசினித்தூளை உதரிவிட்டு இக்காகிதத்தை கனத்த கண்ணாடிப்பில்லைமேல் எழுத்துகள் தெரியும்படி யொட்டி, அவ்வெழுத்துகள் சுற்றிலும் களிமண்ணினால் வரப்புகட்டி காய்ந்தபிறகு பழைய அச்செழுத்துகளை யுருக்கி எழுதிய எழுத்துகளின்மேல் வார்த்து ஆறியபின் எடுத்துப்பார்க்க, எழுத்துகள் அவ்வீயத்தினிற் செதுக்கினதைப்போல் காணப்படும். இதன்மேல் அச்சடி மையைப்பூசி துணியினாற் றுடைத்துவிடில், அந்த மை எழுத்துகளின் பள்ளந்தவிர மற்றவிடம்பிடித்திராது. இப்போது நனைத்த காகிதத்தை இதன்மேல்வைத்து பிளாட்டிங் பேபரினால் அழுத்தி யெடுக்கவும், பள்ளங்களிலுள்ள எழுத்துகள் காகிதத்தி லொட்டிக்கொள்ளும். கையெழுத்துகள் நன்றாய்க் காணப்படும்.

## 362. பிரதிபிம்பமச்சிட.

நல்ல இலவம்பஞ்சை மெல்லிய வெள்ளைத்துணியில் மூட்டைகட்டிப் பூரத்திராவகத்தில் அல்லது பென்ஜைன் திராவகத்தில் முன் மூட்டையை நனைத்து எழுதவேண்டிய காகிதத்தின்மீது பூசி அது நன்றாய் நனைந்தபின் இதுவரையில் எழுதவேண்டிய சித்திர மெழுதிய காகிதத்தைச் சமனுகிய மேஜையின்மீது விரித்துப்போட்டு அதன்மேல் முன் நனைந்த காகிதத்தைப் போட அச்சித்திர மியாவும் நன்றாய்க் காணப்படும். அப்போது பென்சலினால் அல்லது இண்டியன் இங்கியினால் எழுதிக்கொள்ளவும். காகிதத்திற் பூசிய திராவகம் விரைவிற் காற்றினா லுலர்ந்துவிடுமாதலால், அப்

போதிற்கப்போ திராவகத்தைப் பூசிவரவேண்டும். எழுதும்வேலை முடிந்தவுடன் அக்காகிதத்தை சற்றுநேரம் காற்றினில் வைக்கவும் அது பரிசுத்தமாகயிருக்கும்.

## 363. அச்சுப்படத்தை மறுபதிப்பெடுக்க.

பொட்டாஷினைத் தண்ணீரிற் கலந்ததில் காகிதத்தி லச்சுப்படத்தை ஒருமணிநேரம் ஊறவைத்தபிறகு டார்டாரிக் ஆசிட்டைக்கலந்த தண்ணீரிற் கொஞ்சம் ஊறவைத்துப் பின்பு அப்படத்தைக் கண்ணாடியின்மேற் பரப்பி நான்குமூலைகளைக் கொஞ்சம் பிசினியாலொட்டி அசையாது வைத்து, அச்சியந்திர வர்ஜ்ஜிரரோலனை பிரிண்டிங் மையி லுருட்டி இப்படத்தின்மேல் அந்த ரோலனையுருட்டவும், அச்சுப்படத்தில் மாத்திரம் அவ்விங்கிபட்டிருக்கும். மற்றவிடத்திற் கிஞ்சிற்றேனும் பட்டிராது. பிறகதின்மேல் நல்ல காகிதத்தைப்பரப்பி அழுத்தியெடுக்கவும், முன் அச்சுப்படத்தி லிருப்பதுபோ லிதிற் பதிந்திருக்கும். இவை பிம்பத்தைப்போற் பிரதிபிம்ப மெழுதவும், ஈயத்தில் அல்லது பித்தளையினுற் சித்திரிக்கவும், என்கிரேவிங் செய்யவும் உபயோகிக்க நன்மை.

## 364. செடிகளையுலறச்செய்ய.

மரத்தினது உச்சிவேரிற் றுளைசெய்து அதில் க - பலம் பாதரசம்விட்டு மெழுகினுல் வாய்மூடவும், அல்லது கெந்தகம் க - பலம், வெள்ளைப் பாஷாணம் க - பலம், இவ்விரண்டையும்பொடித்து மரத்தினது தாய்வேரைத்துளைத்து அதற்குள்ளடைத்து மூடிவிடவும், அன்றுமுதல் க - மீக்குள் அம்மரமுலர்ந்துவிடும். இது கோயில், குளம், கோபுரம், மண்டபம், சத்திரமுதலியவிடங்களில் அபாயமாயிருக்கின் இதைச்செய்யுங்கால் அம்மரங்களுலர்ந்துவிடும்.

## 365. சிடைப்புழுக்கள் மடிய.

செப்புக்கம்பி யொன்றும், துத்தநாகக்கம்பி யொன்றும், ஆக இரண்டையுஞ்சேர்த்து சிடைப்புழுபிடித்த செடியினது ஆணிவேறில் சுற்றிவைக்கவும், எவ்வகைப் புழுக்கள் பிடித்திருந்தபோதிலும் ஐந்து நாளைக்கு ளியாவும் நசிந்துவிடும்.

## 366. மெழுகைச் சுத்திசெய்ய.

தேன் அடையைப் பிழிந்தவுடன் அம்மெழுகை யோரோனத்திற்போட்டு அடுப்பேற்றி எறியவிட்டுக்காச்சி வேறொருவாயகன்ற பாத்திரத்தினிறைய சுண்ணும்பின் தெட்டைத் தண்ணீரைவிட்டு இரும்புக்கம்பி ஜல்லடையிலுருகிய மெழுகைவார்த்து, மறுபடியும் அம்மெழுகை யுருக்கி முன்போல வடிகட்டவும், இவ்விதம் எழுவிசைசெய்யுங்கால் அம்மெழுகு மிகத்துல்லியமாகவிருக்கும். அன்றியும் ஒவ்வொரு தடவைக்கும் சுன்னத்தெட்டைத் தண்ணீர் புதியதாயச் சேர்க்கவேண்டும்.

## 367. ஆடைகட்குச்சாயமேற்ற.

சிவப்புசேலை முதலியவைகட்குப்போடுஞ் சிவப்புசாயத்திறகு அல்ஜரின் என்பதற்குக குழம்புசாயமெனப் பெயர். இதன்பாகமானது:—ஓராத்தலிடையுள்ள வெள்ளைத்துணி யல்லது வெள்ளை நூலுக்குச் சாயமிட, அராத்தல் நூலெடுத்ததில் கஞ்சியிருக்கின, அதைத் தண்ணீரினில் நன்றாய்த் தோய்த்து அக்கஞ்சியைப்போக்கி, நல்லெண்ணை படி - ௧, அப்பளாகாரம் வீசை - ௨, ஒரு பாத்திரத்தில் தண்ணீர்விட்டு அப்பளாகாரத்தை யதிற்போட்டுக் கரைத்து அதின்பிறகு நல்லெண்ணை யதில்விட்டுக் கரைத்திடுங்கால், அது பால்போல் வெள்ளையாயிருக்கும். இந்தக் காரத்தண்ணீரில் முன் கஞ்சிபோக்கிய துணி யல்லது நூலை நனைத்தெடுத்து தொட்டியிற்போட்டு காலினால் நன்றாய் மெரித்து, பின்பு அதனைப் பிழிந்து காயவைக்கவேண்டும். இப்படி காலுக்கோ ராவர்த்தி பத்துநாள் பத்து வேளை மிதித்துக் காயவைத்து அதற்குமேல் நல்ல ஜலத்தில் நன்றாய் அழுக்குப்போகும்படி தோய்த்துக் காயவைக்கவேண்டும்.

பிறகு ஒரு அண்டாவினிற் றண்ணீர்விட்டு உலர்ந்த அல்லியிலை ௨ வீசை, தூளிடித்து அத்தண்ணீரிற் கொட்டி ௧ - மணிநேரம் ஊறவைத்து அதன்பிறகு அல்ஜரின் என்னும் சிவப்பு சாயத்தில் ௧௨ - பவுன் அதிற்போட்டுக் கலந்து பின்பு காரம்போட்டு செவ்வையாய் நூல் அல்லது துணியை அதிற்போட்டு முழுதும் படும்படி நன்றாய்க்கலக்கி ௨ - ௪ - ௬ - ௮ - மணிகள் நேரம் வரையிலும் அல்லது ஒருநாள் முழுதிலும் ஊறவைக்கலாம். அப்படி யதிகமாய் ஊறவைப்பதிலும் நன்மையாம். ஆயினும் ஒரு நாளிற்கு மேற்பட ஊறவைக்க வேண்டியதில்லை. அதற்குமேல் தவலையுடன் அடுப்பின்மீதேற்றிக் காச்சிடவும், அஜ்ஜலத்திலிருக்கும் சாயமானது துணியில் அல்லது நூலிற்பிடிக்க, அத்தண்ணீர் தேட்டையாகும் வரையில் எறியவிட்டிறக்கவேண்டும். பிறகதை நல்லஜலத்திற்போட்டு அலச்சி யுலர்த்தி பின்பு மடித்துவைக்கவேண்டும். அ - ராத்தல் துணிக்கு அல்லியிலைவீசை ௨, சாயம் பவுன்-௧௨, கணக்காய் துணி யல்லது நூலினுடைய இடைக்குத் தக்கபடி இவைகளை யதிகஞ் சேர்த்துக்கொள்ளவும். காரத்துக்கு நல்லெண்ணை ௧ - படி முதல் ௪ - படி வரையிற் சேர்ப்பதன்றி, எவ்வளவு அதிகஞ் சேர்க்கினும் அவ்வளவு கெட்டிசாயமாய்ப் பிடிக்கும். இந்த சாயத்தினுசுகள் விலைக்குத் தக்கபடி ௧0 - ௧௫ - ௨0 - ௩௨ - ௪0 - ௭0 - ௧00 - என்னும் டிக்கிரியை யனுசரித்திருப்பதில், உயர்ந்த டிக்கிரீ சாயமாயிருக்கின், அச்சாயங் கெடாது வெகுநாள்வரையில் கெட்டியாகவும், நிறமுள்ளதாகவுமிருக்கும். இந்த அல்லியிலை ஜலத்திலிருப்பதல்ல, மலைகளிலுள்ள செடிகளிலிருக்கும் இலை. இதற்கு காசாம்வீறகினிலை யென்று பெயர்.

## 369. ஊசியஸ்திரம்.

ஒரு கருவக்கெகிரிச் சற்றுதூரத்தில்நின்று அதின்பக்கமாய் ஒரு ஊசியையெடுத்தெறிய, அது அக்கதவின்பலகையிற்பட்டு அதிற் குத்திக்கொள்

ளாது கீழேவிழுந்துவிடும். ஆனால் அவ்வூசியின் ஒரு துண்டு நூலைக்கோர்த்து எறிய, தப்பாது அக்கதவிற்றானே அம்புபோலக் குத்திப்பாய்ந்தூருகி நின்றுவிடும். இவ்வாறே அம்புகட்குச்சிறகு கட்டினாற்றான் நெடுந்தூரமோடும்.

## 370. காசுமறைய.

ஒருவன் கை பெருவிரலில் கொஞ்சமெழுகைத்தடவி மற்றொருவனது நெற்றியில் ஒருதம்படி அல்லது அரைக்கால் ரூபாயைவைத்து, தன்பெருவிரலால் அழுத்தியெடுக்கவும் அக்காசானது தன்கையோடேவந்துவிடவும், அவன் நெற்றியில் தான் அழுத்தியகாசை அவனெற்றியிலெடுக்கச் சொன்னால் அங்கொன்றுமிராது. மறுபடியும் நாம் முன்போல பெருவிரலைவைத்தெடுத்துக் கொடுக்கவும் பிரமிப்பார்கள். இப்படியே எத்தனை தடவை செய்தாலுஞ் செய்யலாம்.

## 371. கற்குறிசொல்ல.

ஒருமனிதன் வலதுகையில் எவ்வளவுதுகை வைத்திருக்கிறானோ அதை ௩ - லும் இடதுகையில் வைத்திருப்பதை உ - லும் பெருக்கச்சொல்லி இருதுகையுங் கூட்டியமொத்தம் ஒத்தையா அல்லது இரட்டையாவென்று கேட்டு, ஒத்தையாகில் வலதுகையில் இரட்டையும், இடதுகையில் ஒத்தையும், இரட்டையாகில் வலதுகையில் ஒத்தையும், இடதுகையில் இரட்டையும் இருக்குதென்று சொல்லச் சரியாயிருக்கும்.

## 372. நேத்திரப்பரிக்ஷை.

ஒரு பூதக்கண்ணாடி ௪-இஞ்சு குருக்கள வுள்ளதை ஒரு கண்ணில்வைத்து மற்றொருகண்ணைமூடி இருட்டுவீட்டில் விளக்கேற்றிவைத்து உ0 - அடி தூரத்தில் நின்றுபார்க்கவும், அவ்விளக்குத் தெரியாமல் தன்கண்ணிலுள்ள நாடி நரம்பு சருமமுதலிய தெவையுந்தோன்றும்.

## 373. பிரதிபிம்பபேதம்.

காகித அட்டைகளில் பக்ஷி, மிருகம், மனிதர்முதலிய உருவங்களை வெட்டி அதின்கால்களிற் சிறியகம்பிகளைமாட்டி மல் துணியிற்றிரைகட்டி உள்ளே விளக்கி னெதிரிற்பிடிக்கவும், அதின்சாயல் அத் துணிதிரையில நிழல்வடிவமாய்த் தோன்றும். அதை விளக்கருகில் கொண்டுபோக பேர்ப் பெரிதாயிருக்கும்.

## 374. பிரதிபிம்பமசைய.

முற்கூறிய திரைக்குள் அனேக வுருவங்களைக்காட்டி அதில் ஒரு விளக்கை அசைத்தாட்டவும் எல்லாப்பிரதிபிம்பங்களும் அவ்வாறே அசைந்தாடும். உ - விளக்குக்கு இரண்டத்தனை உருவங்கள்தோன்றும். இதில் ஒரு பட்டாளராணுவ வீரர்களுக்கு எத்தனை விளக்குகள் காட்டுகிறோமோ அத்தனை ராணுவ வீரபட்டாளமுந் தோன்றும்.

## 375. கிளிக்கூண்டு.

ஒருகடிதஅட்டையின் மத்தியில் அல்லது குருக்களவில் ௪ - அங்குல மிருக்கவும் வட்டமாய்வெட்டி, அதின்மத்தியில் ௨ - முனைகளிலும் ௨ - நூல்கயிறுகளைக்கட்டி, அந்த அட்டையின் ஒருபக்கத்தில் கிளிக்கூண்டும், மற்றொருபக்கத்தில் ஓர் கிளியுமெழுதி, அந்த அட்டையிற் கட்டியிருக்கும் ௨ - கயிறுகளைப்பிடித்து ஷை அட்டையைத் துரிதமாகச் சுழட்டில், அட்டையின் இரண்டுபக்கத்திலும் அக்கூண்டில் கிளியானது வசிப்பதுபோல் தோன்றும்.

## 376. இருட்டிற்பேயைக்காட்ட.

பிசின்சலத்திற் றுபாக்கிமருந்தைக்கலந்து ஓர் இருட்டறையின் சுவர்களில் பயங்காரமான பிசாசுவுருவங்களையெழுதி அதுவுலர்ந்தபின் பார்ப்பவர்களை அச்சுவரின் எதிரே சற்றுதூரத்தில் நிற்கச்செய்து நெருப்புக்குச்சியால் அவ்வுருவக்கோடுகளில் எங்கேயாகிலும் அதிற்பற்றவைக்கவும், அவ்வுருவமுழுதும் சடுதியிற்பற்றவே எதிரிலிருக்கும் ஜனங்களுக்கு ஷை உருவங்கள் திடீரெனத்தோன்றி மறைந்துவிடும். ஆனால் அவ்வுருவக்கோடுகளெல்லாம் ஒன்றோடொன்றுபடிந்து கலந்திருக்க எழுதவும்.

## 377. எழுத்துகள்மறைய.

மயில்துத்தமும், முயூரியேட் ஆப் அமோனியாவும் சமனாய்ச் சலத்திற் கலக்கி யெழுதவும், அவ்வெழுத்தொன்றுந் தெரியாது. ஆனால் அதை அக்கினியருகில் சூடெழக்காண்பிக்கவும், அவ்வக்ஷரங்கள் மஞ்சள் வர்ணமாய்த் தோன்றும். ஆயினும் அக்காகிதங் குளிரக்குளிர எழுத்துகள் மறைந்துவிடும்.

## 378. எழுத்துகள் ஈரத்திற்றெறிய.

நைட்ரேட் ஆப் பிஸ்மத்தை சலத்திற்கலந்து அதை நன்றாய்க்கலக்கி எழுதிக்கொண்டுவரவும், அதுவுலருகிறவரையில் அவ்வெழுத்துகள் தெரியும். அதன்பின் மறைந்துவிடும். அக்காகிதத்தை சலத்திற்றோய்த்துப் பார்க்கவும் முன் எழுதிய எழுத்துகள் மறுபடியுந்தெரியும்.

## 379. பச்சைஎழுத்துமறைய.

பச்சை நிறமுள்ள முயூரியேட் ஆப் கோபால்ட்டை சலத்திற்கலக்கி யெழுதவும், அவ்வெழுத்தொன்றுந் தெரியாது. ஆனால் அக்கடிதத்தை வெய்யலில் அல்லது நெருப்பெதிரில் சற்று சூடுண்டாக்கவும் அதிகபிரகாசமான பச்சைநிற வெழுத்துகளாய்த் தோன்றும். அக்காகிதங்குளிரக்குளிர அவ்வெழுத்துகளும் மறைந்துவிடும்.

## 380. பாம்பொதுங்க.

வீட்டிற்குள் பாம்பானது திசைதப்பி வந்துவிடின், அவவிடத்திற் கொஞ்சம் உப்பை யெடுத்து விசிறிப்போட்டெறிய, அப்பாம்பு வெருண்டோ

டிப் போய்விடும். இதைச்சிலர் உப்போதி மந்திரித்துப் போடுவேனென்ப தில், வீட்டு உப்பே பாம்பிற்கு சத்துரு. உப்புப்டாணியிற் பாம்பை விட் டால் உடனே செத்துவிடும்.

### 381. பேன்மாள.

ஒரு சிட்டிகை மூக்குத்தூளில் தலைப்பேனை எடுத்து அதில் கோவாமல் விட்டால் உடனே இறந்துவிடும். அம்மூக்குத்தூளையே தலையிற் றண்ணீரி லாகிலும் சும்மாவாகிலுந் தேய்த்துக்கொண்டால் அப்பேன்களெல்லா மா ண்டுவிடும்.

### 382. சர்ப்போற்பத்திவித்தை.

கீழாய்நெல்லி பூமியைப் பார்த்து வளைந்திருக்குஞ் செடிக்கு-நசி-மசி-என்று ௱அ-உருசெபித்து வேரறுமற்பிடுங்கிச் சமூலத்தை வளையமாடி பிள் ளைபெறமாட்டாத கர்ப்பணியின் இடதுகால் பெருவிரலிற்போட்டு வைக்க வும், வயற்றிலிருக்கும் பிண்டம் கீழேவிழும்.

### 383. களர்நிலமாற.

எபபூமியிலாவது களர் அதாவது சவுட்டுமண், உழமண், பூநீர், உப் புமண் முதலியவையிருப்பதிற் கெல்லி முழம் அல்லது கெஜமாழத்தில் ம ண்ணைப்புறட்டி காணி க - க்கு கடலைப்புண்ணாக்கு பாரம் க - ஆகப்போட் டிடித்து தூவிக் கலந்து ௨-அல்லது க-மண்டலஞ்சென்று மண்கலந் தூரவா கிய பின் உழுதுப் பயிரிடக் களர்நிலமாறி நன்றாய் விளையும்.

### 384. நெருப்புமிதிக்க.

தாளிச்சமூலம் கொத்தான்சமூலம் மருக்காரைப்பூ உப்பு இவைகளைப் பசும் பாலிலரைத்து இரண்டுள்ளங்காலிலும்பூசி ஒவ்வொருவரும் நெருப் பின்மேல் நடக்கக் கால்கள் சுடாது.

### 385. நீரில்மிதக்கும்லோகம்.

பொட்டாஸிய மென்னும் லோகத்தை தண்ணீரிற்போட அது மிதந்து கொண்டே அதிகப்பிரகாசத்தோடு பற்றியெரிந்து ஜொலிக்கும். இவ்வுலோ கத்தை வெய்யலிற்போட எறிகிறபோது சிவப்பேறியிருக்கும். இருட்டிற் போட மின்னலைப்போலவுமிருக்கும்.

### 386. அம்மியெழும்ப.

சிறுபுள்ளடியும் வெள்ளைசாரணையும் சேர்த்தரைத்து அம்மிமேல் அ ப்பிவைத்து அதின்மேல் ஒருசொம்பை அரக்கிவைத்து அச்சொம்பின் உத ட்டைப்பிடித்துத் தூக்க அடியம் மியும் கூடவேயெழும்பிவரும்.

### 387. தெய்வமோகனம்.

மருளூமத்தைச் செடிக்குக் காப்புக்கட்டி (ஓம்தேய்வமோகினி உருகவ ரு என்று ௱அ-உரு செபித்து வேர்பிடுங்கிச் சமூலமுங் கருக்கி மையத் தரித்துத் திலர்தமிட்டுச் செல்ல தெய்வமோகனமாம.

### 388. இராஜமோகனம்.

ஆலம்விழுதை ஒரு வெட்டாய் வெட்டி கீழேவிழாது பிடிக்கும்போது (ஓம் மாயமோகினி மகாமோகினி முனியமோகினி செயசெய)வென்று இம்மந்திரஞ்சொல்லி எடுத்துவந்து புதுசட்டியிற் கருக்கிச் சித்தாமணக்கெண்ணெவிட்டுழைத்து நெற்றியிற்றிலர்தமிட்டுச் செல்ல இராஜமோகனமாம்.

### 389. மாங்கொட்டைமுளைக்க.

அழுஞ்சிவிரையை உடைத்துத் தூளாக்கித் தண்ணீரிலூறவைத்து உரலிற்போட்டு ருப்பி மயனமானபின் யதை ஒரு சட்டியிற்போட்டு சாய்த்துவைக்க அதிலோர் பக்கத்தில் அச்சலமெல்லாங் கசிந்துநிற்கும், அச்சலத்தில் வேண்டிய எவ்வகை வித்துகளையும் நனைத்துநனைத்து நிழலிலுலர்த்தி யுலர்த்தி அச்சலமெல்லாமூட்டி வைத்துக்கொண்டு வேண்டும்போது மாங்கொட்டைமுதலிய வ்வொரு வித்துகளை மண்ணில் நட்டு அடிக்கடி சலந்தெளித்துமூடிவைததுத் திறக்க முளையாகிச் செடியாகி இளையாகிப் பூவாகிக் காயாகிப் பழுக்கும்.

### 390. பாம்புக்குடம்.

பெருங்காயம், வசம்பு, கள்ளிப்பால், பூண்டு, இந்நான்குமரைத்து கைகளிற் பூசியபின் ஒரு குடத்திற் பாம்பைவிட்டு அக்குடத்தினிற் றன்கையைவிட, அதினுள்ளிருக்கும் பாம்பானது கடியாது. அது மயக்கந்தியக்கங்கொண்டு பழுதையாய்கிடக்கும். மற்றொருவிதம்:—ஒருவனைப் பாம்புகடித்தமாத்திரத்தில் அவன் றலையிற் குருமான மணல் மூட்டை அல்லது ஒரு கருங்கல்லைவைத்துச் சுமந்துக்கொண்டிருக்கக் கடித்த விஷம் அவன் றலைக்கேறாது. கீழேவிழவுமாட்டான். இதற்குள் வேண்டிய சிகிற்சைகளைச் செய்வதில், உயிர்தப்பிப் பிழைப்பானென்பதற்கு உறுதியான வாக்கியமாகக்கொள்ளவும்.

### 391. ஒட்டுக்கல்.

பழைய சிட்டங்களைப் பேர்த்து சூரணஞ்செய்து சோரங்கொட்டைபால்வார்த்தரைத்து பிளவு கருங்கல்லின் வாய்ப்புறத்திற்றடவிவிட்டு மருதண்டுக்கல்லைப் பொருந்தவைத்து க ௳ நாள் நிழலுலர்த்தி வைத்துக் கல்லைபேர்த்தால் பேராது. யானையைக்கட்டி இழுத்தாலும் அது பேராது. ஆளுற் றட்டக்கூடாது.

### 392. கரைத்தச்சாம்பலெடுக்க.

சாம்பலைக் கொஞ்சந் தண்ணீரிற் போட்டு நன்றாய்க் கலக்கியபின் அதில் நெருஞ்சி விரையைத்தூளாக்கித் தூவிடில், அப்போது தண்ணீர்வேறு சாம்பல்வேறாய்ப்பிரிந்துவிடும். அதைக்கையினாலெடுக்க அச்சாம்பல் மொத்தையாய்த்திரண்டு வரும். அதை மறுபடியுங் கரைக்கக் கரையும்.

## 393. இரப்பர் ஸ்டாம்புசெய்ய.

இரப்பர் ஸ்டாம்பை எம்மாதிரிசெய்ய நினைத்தீர்களோ அம்மாதிரி முன்னுதாய் அச்செழுத்துகளாற் பதிந்துக்கொண்டு, ஸோப்ஸ்டோன் பவுடர் என்பது பலப்பக்கல் தூள் ௧ - பவுன், ௩ - அவுன்சுகளும், உயர்ந்ததாகிய டெண்டல் பிளாஸ்டர் ௧-பவுன், நன்றாய்ப் பொடித்து சைனுகளிமண் ௧ - பவுன், இதுகளைத் தனித்தனி பொடித்துக் கலந்து ஒரு சல்லாத்துணியில் வஸ்திரகாயஞ்செய்து டெக்ஸரைன் பிசினி. ௧ - பங்கை, ௮ - பங்கு, வெந்நீரிற்போட்டு சற்றாறியபின் முன் வஸ்தரித்த தூளில் ௧-பிடி தட்டைப்பீங்கானில்வைத்து அதில் மேற்படி பிசினித்தண்ணீரிற் கொஞ்சம்விட்டு நன்று யிலப்பத்தைப்போற் பிசைந்து ௭ - யங்குலங் கனமுள்ள இரும்புத்தகட்டின்மேல்வைத்து அகலமாகத்தட்டி சமமாக்கி கொஞ்சங் கந்தைத்துணியை கிரீஸனுயிலில் நனைத்து அச்செழுத்துகளின் மேல் சுமாராகப்பூசி இரும்புத்தகட்டிலுள்ள இலப்பத்தை எழுத்துகளின்மேல் ஜாக்கிரதையாக வைத்து ௭ - யங்குலம் ஆழமாகும்படி சமனாயழுத்தி யெடுக்கவும், இலப்பத்தில் அவ்வெழுத்துகள் பள்ளமாய்க் காணப்படும். இதை நெருப்பனலில் வைத்து ௧௭ - மணி நேரம்பொறுத் தெடுக்கில், அந்த இலப்பம் காய்ந்து கல்லைப் போற் கெட்டியாயிருக்கும். சிலசமயங்களில் சூடதிகரிக்கில் விடைவிடுவதுமுண்டு. அவ்விடைவிடாதிருக்க ஒரு துணியை நனைத்துப் பிழிந்து நாலைந்து மடிப்பாய் மடித்து ஈரமாய் இலப்பத்தின்மேற்போட்டு அதன்மேல் ஒரு அச்சத்தகட்டைப்போட்டு அனல்மீதுவைத்து சிறுகவெரிக்கில், விடைவிடாது. நன்றா யுலர்ந்தபின் எழுத்துகளின்மீதிருக்கும் தூம்பு நாசுகாயற்றி (ஸால்ட் பேபர்) உப்புகாகிதத்தால் தேய்த்து அவ்வெழுத்துகள் பள்ளங்களிலுள்ள தூம்பையூதி, மறுபடியும் அனலில் வைத்து ௨0 - டிக்கிரி சூடேற தர்மாமெட்டரினுல் சோதித்தெடுத்து அக்கணமே லெட்டர் பிரஸ் அடியில்வைத்து ஸ்டாம்புசெய்ய தனியாக விற்கும் இரப்பரைவாங்கி அதிலொரு துண்டைக் கத்திரித்து அதின்மேல் பலப்பத்தூளைக் கொஞ்சமாய்த் தூவி பிரஸின்கீழ்வைத்த இலப்பத்தின்மேல்வைத்து அதன்மேல் ஒரு தகரத் தகட்டைவைத்து இரப்பரை எழுத்துகளின் பள்ளங்களில் பொருந்தும்படிவைத் தழுத்தி பிரஸைச்சூட அனல்மேல் வைத்து சுமார் ௫ - நிமிஷங் பொறுத்தெடுத்து இரப்பரைப் பேர்த்தெடுத்துப் பார்க்கவும், அதனுள் ளெழுத்துகள் நன்றாய்ப் பதிந்திருக்கும். இலப்பத்தின் சூடு ஆறிவர, ௧0-நிமிஷம் வரையில் பிரஸில்தானே வைத்திருக்கவேண்டியது. ஈதனுடைய தத்தாற் தெரியவரும் பிரஸைவிற்குமீறி அனலில் வைக்குங்கால், இரப்பர்கெட்டுவிடும். இரப்பரை பிரஸினின் றெடுக்குமுன் ஊசி நுனியால் இரப்பரைக் குத்திப்பார்க்க, உடனே சந்து மூடிக்கொள்ளுஞ்சமயம் எழுத்துகள் இரப்பரில் நன்றாய்ப் பதிந்திருக்குமென்றறியவும். அப்படி சந்துமூடாதாகில் பின்னுங் கொஞ்சநேரம் பிரஸிலேயே வைக்கவேண்டும்.

ஷ இரப்பரைப் பிரஸிலிருந் தெடுத்தவுடன் அவ்வெழுத்துகளின்மேல் கொஞ்சம் பலப்பக்கல் தூளைத்தூவி வேண்டிய அளவுக்குக் கத்திரித்து கைப்பிடிமாட்டி யுபயோகிக்கவும்.

இரப்பருக்குப் பதில் கட்டபேர்ச்சா என்பதனை கொதிஜலத்திற் கொஞ்சநேரம் வைக்கில் உருகிவிடும். உடனே அதனை மேற்கண்ட இலப்பத்தின்மேல் வைத்து நன்றாயழுத்தி யெடுக்கவும், கட்டபேர்ச்சாவில் எழுத்துகள் பதிந்திருக்கும். இதற்கு முன்போற் கைப்பிடி யொன்று போட்டு இதனை யுபயோகிக்கவும்.

கையெழுத்துகளைப்போல் இரப்பரினால் செய்யவேண்டிய அக்கையெழுத்துகளை மரத்தில், ஈயத்தில், அல்லது பித்தளையில் செதுக்கி, அதிலிருந்து இலப்பத்தில் பதிந்துகொண்டபின் பதை இரப்பரில் மேற்கண்டபடி செய்யவும் நன்மை.

இரப்பர் ஸடாம்பு செய்யும் வேலைகளின் சாமான்களெல்லாம் பொம்பாயில் ஜேம்ஸ் கம்பெனியாரிடங் கிடைக்கும்.

## 394. இரப்பர்ஸ்டாம்பு சிவப்பிங்கி.

இரண்டு அவுன்சு அம்மோனியா திராவகம், அரைக்கால் அவுன்சு கிளிஸரைன் திராவகம், அரைக்கால் அவுன்சு டெக்ஷரைன் திராவகம் இவைகளை ஒன்றாய்க் கலந்து இதினுடன் கார்மைன் அல்லது ரஜிண்டா பவுடர் கால் அவுன்சாய் சேர்க்கில் அது சிவப்பு இங்கியாகும்.

## 395. பேற்படி ஊதா இங்கி.

வைலெட் ஊதாபவுடர் - அவுன்சு, ஆல்கஹால் கு - அவுன்சு, கிளிஸரைன் திராவகம் கு - அவுன்சு, இம்மூன்றுஞ்சேர்த்து கிளாஸ் புட்டியில் போட்டு அடுப்பேற்றி யெரித்துப் பொங்கிடற் காரம்பிக்கும்போதே இறக்கிக்கொள்ள அது ஊதா இங்கியாகும்.

## 396. மேற்படி நீல இங்கி.

பிரஷியன் பிளூ யென்னும் நீலவர்ணம் க - அவுன்சு, தண்ணீர்விட்டிழைத்து அதில் டெக்ஷரைன் திராவகம் க - அவுன்சு சேர்த்து, வேண்டுமளவு தண்ணீர்விட்டுக்கொள்ள அது நீல இங்கியாகும்.

## 397. மேற்படி கறுப்பு இங்கி..

பிளாக்டானின் க - அவுன்சு, நல்லஜலம் க - அவுன்சு, கிளிஸரைன் உ - அவுன்சு, இம்மூன்றுஞ் சேர்த்து நன்றாய்க் கலக்கி வைத்துக்கொள்ள அது கறுப்பு இங்கியாகும்.

## 398. காகப்பொன் ஜொட்டும் பிசினி.

கோதுமை மாவை அல்லது அதின் நொய்யை துணியில் மூட்டைகட்டி கொஞ்சந் தண்ணீரில் அதை முழுகும்படி ஊறவைத்து ச - அல்லது

ரு - மணிநேரஞ் சென்றபின் பெடுத்து அம்முட்டையை யவிழ்க்காது பிசைய, அத்துணிக்குமேல் வெண்மையாய்க் கஞ்சியைப்போல் பிசினிவரும். அதையெடுத்து அதிற் கொஞ்சம் சுண்ணாம்பைக்கலந் திழைத்துக்கொண்டு அதினால் காக்கைப்பொன், அபிரேக்கு முதலியதை ஒட்டவைக்க, அது நன்றாய்ப் பிதிர் தொட்டிக்கொள்ளும். சிலர் இதினால் பிடில், தம்பூர் முதலியதை ஒட்டுகிறார்கள்.

## 399. வேறொரு பிசினிசெய்ய.

கோதுமை ரவையை இரண்டு கைகளிலும் வைத்து அதில் தண்ணீர் விட்டு மெதுவாய்த் தேய்த்துக்கொண்டிருக்க, அதிலுள்ள மாவெல்லா மகன்று கையினுள் மெழுகைப்போல் அந்த ரவையானது திரண்டு வருவதில் கொஞ்சஞ் சுண்ணாம்பைச் சேர்த்திழைக்க அது பிசினியாய்வரும். அதையெடுத்து பிடில் முதலிய பலவித கருவிகளையும் ஒட்டி ரிப்பெயர் செயவது பெரும்பாலும் வழக்கம்.

## 400. பூதஸ்தம்பனம்.

கல்லுருவிச்சமூலம், தலைமயிர், கறுங்கழுதை தொப்புள்மயிர், இம்மூன்றுங் கட்டுக்கயிற்றில் முடிந்து தெருவாசற்படி இறப்பின்மேற் சொருகி வைக்க, தலைசுற்றியாடும் பூதப்பிரேத பசாசுகள் ஆடாது நின்று விலகியோடிப்போய்விடும். மறுபடியும் அதை யெடுத்துவிட்டு அவ்வீட்டைச் சுத்தி செய்து நூதனமாய் வேறு பதிவைத்து தெய்வங்களை வரவழைத்து விளக்கிற் பொருந்த பூதோச்சாட்டனஞ்செய்ய, அது வந்து விளையாடி வாய்மொழிசொல்லி முடிகொடுக்கும். ஈதன்றி, ஒத்தைப்பேய்மிரட்டியை அல்லது கொத்தானை இறப்பிற் சொருகினாலும் ஆடாது.

## 401. நீலயெழுத்துமறைய.

பிரஷியட் ஆப் பொட்டாஷ்மருந்தில் ௩-கடுகளவெடுத்து சலத்திற் கரைத்து காகிதத்திலெழுதிவரவும் அவ்வெழுத்தொன்றுந் தெரியாது. அதிற் கொஞ்சம் அன்னபேதிகரைத்த சலத்தை அக்காகிதத்தின்மேற் றடவவும். முன்னெழுதிய எழுத்துகள் நீலநிறமாகத்தெரியும்.

## 402. கறுப்பெழுத்துமறைய.

அன்னபேதிகரைத்த ஜலத்தால் காகிதத்திலெழுதி அதையுலறவைக்கவும் அவ்வெழுத்துக ளொன்றுந்தெரியாது. ஆனால் கடுக்காயூறின சலத்தை அக்கடிதத்தின்மேற் றடவவும் முன்னெழுதிய எழுத்துகள் கறுப்புநிறமாய்த்தெரியும்.

## 403. வெள்ளிச்செடிமுளைய.

ஒரு பெரியபுட்டியில் முக்காலவுன்சு - சுத்தநீர் அல்லது மழைச்சலம் பிடிநான்று அதில்வார்த்து அச்சலத்தில் எவ்வளவுகரையவேண்டுமோ அவ்வளவு ஸில்வர் நைட்ரேட் அல்லது லெட் ஆசிடேட் என்னுமருந்தைப்போட்

டு அப்புட்டி நவிற்சலத்தில் ஒரு துத்திநாகத்துண்டை கயிற்றுற்கட்டித் தொங்கவிட்டு அசையாதோரிடத்தில்வைத்து கஉ - மணிநேரம் பொறுத்துப்பின்பு பார்க்கவும், அத்துத்திநாகத்தின்மேல் வெள்ளிச்செடிகள் படர்ந்திருப்பதுபோற் காணும்.

## 404. இரும்பிற்செம்புகிலிட்டிடட.

மயில்துத்தம் கரைத்தசலத்தில் பளிங்குபோற் சுத்தமாய் துலக்கிய இரும்புசாமான்களைப் போட்டு சற்றுநேரம் பொறுத்தெடுத்துப் பார்க்கவும் அச்சாமான்கள் மேற்புறமெங்கும் செம்பு முலாம்பூசியது போலிருக்கும். அதில் துருசுசெம்புதான் கிலிட்டாகப்படிந்து செம்புநிறங்காட்டும்.

## 405. ஈயக்குண்டுபொருந்த.

ஒரு ஈயக்குண்டெடுத்து அதைக் கத்தியால் இரண்டாகக் காடில்லாது வெட்டி மெதுவாயும் பளபளப்பாயுமிருக்கையில் இருபாதியையும் ஒன்றுய்ச்சேர்த்துக் கையாலழுத்தி நெருக்கியபின் இரண்டு மொன்றுய்ச்சேர்ந்துவிடும். பின்பு இலேசாய்ப் பிரியாமல் வெகுகட்டாயத்தின்பேரிற்பிரியும்.

## 406. ஈயக்குண்டுகள்நெருங்க.

இரண்டு ஈயக்குண்டுகளை ஒன்றோடொன்றுபடாமல் அரைக்கால் அங்குலதூரத்தில் ஒன்றின் பக்கத்திலொன்றை மெல்லியகயிற்றுற்கட்டித் தொங்கவிட்டுவைக்கவும் அவைகள் தங்கள் நேர்தூக்கைவிட்டு ஒன்றுக்கொன்று சற்றுசமீபித்து சேர்ந்துவிடும்.

## 407. ஊசிசலத்தில்மிதக்க.

ஒருபாத்திரம் நிறைய சலம்விட்டு காற்றுனது போக்குவரவின்றிவைத்து சுமார் ௪ - அங்குலம் சுற்றளவுள்ள காற்றுடிக்காகிதத்தை சமமாய்விரித்து சலத்தின்மேற் ஜாக்கிரதையாய்வைத்து மிதக்க இக்காகிதம் சலத்திலூறி யமிழ்ந்து போகுமுன் துருவும் அழுக்கும் ஈரமுமில்லா ஊசியைக் காகிதத்தின்மேல் மெதுவாய்வைக்கவும். அக்காகிதமூறி அமிழ்ந்தபின் அவ்வூசியானது தண்ணீரின்மேல் பாரமில்லாவஸ்துவைப்போல மிதந்திருக்கும்.

## 408. நாடியோட்டங்காண.

ஒரு மிளகிற்பாதி மெழுகுண்டையை கைநாடிமேல் வைத்து இரசம் பூசிய ஒரு சிறுகண்ணாடித்துண்டை அம்மெழுகின்மேல் பதியவைத்து வெய்யலிற்பிடிக்கவும் சூரியப்ரஸ்பி அக்கண்ணாடியினின்று தெரித்து தூரத்திருக்கும் சுவரில்விழும் இவ்வாறு விழாவிடின் அக்கண்ணாடியைச் சற்று திருப்பிக்கொள்ளவும். அப்பொழுது சுவரிலுள்ள வெய்யிலைக் கவனித்துப் பாரப்போமாயின், நாடி ஓட்டப்படி வெய்யிலுந்துள்ளும். கைத்தால் நாடிமூலமாய் இரத்தமானது வேகமாய்ச் செல்லுகிறபடியால், நமது நாடி துரிதமாய்த் துடிப்பது சுவரிற்றேன்றும் வெய்யிலைக்கவனித்து நோக்கின் நன்குவிளங்கும். இவ்வுபாயத்தால் ஒரு நோயாளி நாடி நரம்பின் குணகுணத்

னை பலர் ஏககாலத்தில் ஏற்கெனவேயறியுந்திறத்தை யடைவதோடு நோயாளியை யணுகாமலே நாடியின் பலாபலனைச்சொல்ல வெளிதாகும்.

## 409. குருவிக்கூச்சல்காண.

ஒரு கார்க்குத்துண்டை சலத்திற்சற்றுநேரம் ஊறவைத்து பின்பு ஒரு திராட்சியானபுட்டி, விளக்குச்சிமினி, கண்ணாடிக்குழாய் இவைகளொன்றின்மே லூறிய கார்க்குத்துண்டால் பரபரவென்று தேய்க்கவும் குருவிகளெல்லாங் கூட்டமாய்க்கூடி ஒன்றோடொன்று சம்பாஷித்தலைப்போல் கேட்கும். அண்டையில் பூனையிருந்தால் கூவுங்குருவிகளைக்கண்டு பிடிக்கவேண்டுமென்று நாலாபக்கமும் தேடியோடும். இதைக்கேட்ட மற்ற உயிருள்ளகுருவிகளும் இதோடுசப்திக்கும்.

## 410. புகைமோதிரம்.

ஆடுங்காகித அட்டைகளால் ஒரு சிறிய பெட்டியானது அக்காகித அகல நிகள உயரம் அளவாய்ச்செய்து அதில் யாதொருசந்தின்றி நன்றாயொட்டியபின் ஒரு பக்கமத்தியில் முக்கால் பட்டாணியளவு வட்டமாய்த் துளைசெய்து அப்பெட்டியுள் சுருட்டுப்புகையை நிறப்பியபின் அத்துவாரத்தை நன்றாய்மூடி விட்டினுள் காற்றிராவிடத்தில் நின்று பெட்டியின் பக்கத்தில் சுட்டுவிரலின் முனையில் வெகுமெல்லெனத் தட்டவும் பெட்டியின் வாயிலிருந்து புகை மோதிரங்கள் புதைபாணம்போற் புறப்படும். சுருட்டுப்புகை நேரிடாவிடின் பெட்டியின் சந்தில் நுழையத்தக்க அவ்வளவுகனமான கறுப்புக் கந்தைத்துணியைச் சுருட்டி ஒரு முனையைக்கொளுத்தி அப்பெட்டிக்குட் போட்டுவிடவும். அது உள்ளே புகையப்புகைய பெட்டிக்குட்புகைசேர்ந்துகொண்டே யிருக்கும். இப்படி நெடுநேரம் வரையில் வேடிக்கைக்காட்டிக்கொண்டே யிருக்கலாம்.

## 411. வெண்கலத்தோசைகேட்க.

தட்டிப்பார்க்க மணிபோல் ஒலிக்கும் ஒரு வெண்கலக் கிண்ணியை மேசையின்மேற் கவிழ்த்து கறுப்புமெழுகில் ஒரு சுண்டையளவு எடுத்து தட்டையாய்த்தட்டிப் பாத்திரமேற்புறத்தின் நடுவிலழுத்தி வைத்தபின் சுமார் இரண்டடி நிகளமுள்ள மெல்லிய பிரம்புக்கோலின் மேற்புறமுழுவதும் ஷை மெழுகை இலேசாய்த்தடவி அப்பிரம்பின் ஒரு முனையை வெண்கலப் பாத்திரத்தின்மேல் வைத்திருக்கும் மெழுகில் பதிய வூன்றவைத்து இரண்டுகைபெருவிரற் சுட்டுவிரலாலும் மாற்றிமாற்றிப் பால்கறப்பதுபோல் பிரம்பின் மேலிருந்து அடிவரையிலும் விடாது தடவியுருவவும் நாவிதன் ஊதும் சுத்திபோல் வெகு இனிமையும் நாதமுமான ஒலிகேட்கும். இவ்வாறே தவலையிலும், மேளத்தின்மேலுஞ் செய்யவும் இவ்வித நாதமானது கேட்கும்.

## 412. மணியிலோசைகேட்க.

ஒரு பெரிய வெண்கல மணியின் அடிவாய்ப்புறத்தில் முன்போல் மெழுகைப்பூசி, வேறொரு சாணு நீளமுள்ளதும், ஒரு அங்குல கனமுள்ளது

மான கட்டையிலும் அம்மெழுகைப்பூசி ஷ்டி மணியை வாட்டமாய்ச்செய்து கைப்பிடிவைத்து அப்பிடிக்கடியினுள் சின்னகொலுசுமாட்டி அக்கொலுசுக்கடியில் ஒரு உருத்திராட்சம் அல்லது இலேசாகிய சின்ன மணியைமாட்டி யிருப்பதில் தான் இடதுகையில் மணியின் பிடியைப்பிடித்து சாய்வாக நாட்டி வலதுகையில் அக்கட்டையைப் பிடித்து அடிமுனை யோரத்திற்பட சுழட்டிக் கொண்டேவரவும் அது ஒருவித சங்கோசை உட்சங்கிலி மணியினுலும் மெழுகு பூசிச்சுழட்டிவருங் கட்டையினுலுங் கேட்கும்.

## 413. பெருஞ்சப்தவோசை.

ஒரு மட்பாண்டம் அல்லது செப்புப்பானையின் வாயை மிருகத்தின் ஜவ்வால்மூடி அதுவுலர்ந்தபின் அத்தோலினடுவில் ஊசிபூர ரந்தனஞ்செய்து அதில் ஒரு குதிரைமயிரைமாட்டி அம்மயிரில் ரோசனம் அல்லது சாம்பிராணிதடவிப் பால்கறக்கும்வாறு இருகைப் பெருவிரல் சுட்டுவிரலாலு மிழுக்கவும் இராட்சதன் உரு மிக்கூவுகிறுப்போலிருக்கும். அது பலர்க்குங் கேட்கும். சிலதேசங்களில் உழவோர்கள் கழனிகட்டுகளில் இரவிற் பயிர்நாசஞ்செய்யும் பன்றி முதலியவைகளைப் பயமுறுத்தித் துறத்திவிட இக்கருவியை உ யோகிக்கின்றனர்.

## 414. பட்டாணியந்தரத்தேக.

சுமார் வ - அடிகளமும், வ - அங்குலம் குருக்களவுள்ளதுமான ஒரு சிறுகுழையை நிமிர்த்திப்பிடித்து மேல்முனையில் ஒரு பட்டாணியைவைத்து அதினடிமுனையை வாயில்வைத்து மேலூதவும் அது குழையின் மேற்புறத்துக்குக் கொஞ்சம் உயரத்தில் அப்பட்டாணியானது எழும்பி அந்தரத்திற் சுழன்று கொண்டேயிருக்கும்.

## 415. ஈய் கொசுகுநசிய.

ஈய் கொசுகுகளின் தொந்தரவு வீட்டினுள் அதிகப்படின், (ரெசின்) ௬ - பாகம், வெல்லம் - க - பாகம் (லின்சிட் ஆயில்) க - பாகம் இவ்வளவாகவெடுத்து ஒன்றாய்க் கொதிக்கவைத்து ஒரு அகலகாகிதத்திற்றடவி இதை ஈய், கொசுகுகளிருக்குமிடத்தில் தொங்கவிட்டு வைக்கவும், அக்காகிதத்தின் மேல் வந்துட்கார்ந்த ஈய்கள், கொசுகுக ளியாவும் மடியும்.

## 416. தேவஸ்தம்பனம்.

பன்றியினைச்சியைக் கொஞ்சஞ் சுட்டுக் கருக்கிப் பொடிசெய்து அதின் மூத்திரப்பிச்சியிலிருக்கும் நீரைவிட்டு கலுவத்தில் நேகவரைத்து உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டியபொழுது அவ்வுருண்டையைத் தண்ணீரிலாவது அல்லது தன் சிறுநீரிலாவது வுரைத்து நகத்தில் வைத்துக்கொண்டு ஆவேசக்காரர், தெய்வக்காரர், குறிக்காரர், சிலகசிக்காரர்மேல் தட்டிவிட, யாவும் அடங்கிநின்று விலகியோடிப்போம். பின்பு யாதொன்றும் அங்கு நடவாது. இதனைக் கருவென்றுஞ் செல்லுவது சகஜம்.

## 417. பந்தமெறியக் கையேந்த.

கற்றாழைச் சோற்றைப் பில்லைபில்லையாய்த் தரித்து, இரண்டு உள்ள ங்கைகளின்மேல் வைத்துப் பரப்பிச் சல்லாத் துணியை மூடி அதின்மேல் பந்தங்களைவைத்து எண்ணைவிட்டுக் கொளுத்திவிடப் பந்தங்களெறியும். மறுபடியும், எண்ணை விட்டுக்கொண்டேயிருக்க நன்றாயெரியும். சல்லா வும் பற்றாது, கைகளுஞ் சுடாது, அவ்வாறே தலையின்மேல் ஒரு பந்தமும் வைத்துக் கொளுத்தினாலுங் கொளுத்தலாம். இதனை அக்கினி கட்டென் றுஞ் சொல்லுவர்.

## 418. குறித்தீபக்கட்டு.

சுடுகாட்டிற் பிணத்தைச் சுற்றிவந் துடைக்குந் தோண்டி யோட்டில் ஒரு தம்படியகலத் துண்டை பதிவிளக்கின்கீழிருக்குஞ் சாணிக்குட்பதிந்து மறைத்துவைக்கவும், அங்கு எவ்விதக் குறிகளும் நடவாது. தேவதைக ளும் நிற்காது. இதையே பூதஸ்தம்பனத்திற்கும், தேவஸ்தம்பனத்திற்குஞ் செய்யலாம்.

## 419. மார்பில்கிலிட்டு.

ஒரு புட்டியில் ஆக்வா போர்ட்ஸ் திராவகத்தைவிட்டு அதிற் செம்பின் துண்டுகளைப்போட்டுக் கரையவைத்து அதிற்கொஞ்சம் இரும்புத்தூளைப் போட்டுவிட்டால் அப்புட்டிக்கடியில் செம்புத்தூளிருக்கும். அதையெடு த்து வெந்நீரில் அடிக்கடி கழுவிக் காயவைத்துப் பதனஞ்செய்ததை வேண் டும்போது எடுத்து மார்பிலில் ஏதேதிற் கிலிட்டுப் படியவேண்மோ அதில் முன்னுதாய்ப் பிசினித் தண்ணீர்தடவி இப்பவுடரை யெடுத்து அதின்மேல் வைத்து மெருவுதோலினாற் றேய்க்க அதில் நன்றாய்க் கிலிட்டேறும்.

## 420. சாராயெரியாதிருக்க.

ஒருடம்லரில் ௧0-துளி சாராயத்தைவிட்டு அதில் ஒரு காசைப்போட் டு அதின்மேல் ஒரு பூதக்கண்ணாடியைப் பிடித்து குறிப்பாய்ச் சூரியரஸ்மி படக் காண்பிக்க, அச்சாராயானது தானாய்ப்பற்றியெறியும்.

## 421. உலோகப்பிரிவினை.

வெள்ளியை மூடிய பொன்னகைக் கட்டங்களில் வெள்ளியை வேறா யெடுப்பதெப்படியெனில், அந்நகையில் வெள்ளித்தெரிய ஒரு சிறுதுளைசெ ய்து அதை ஆக்வாபோர்ட்டிஸ் திராவகத்திற் போட்டுவைக்கச் சற்று நே ரத்தில் அவ்வெள்ளியெல்லாங் கரைந்துவிடும். பொன்மாத்திரமோ அப்படி யே யிருக்கும்.

## 422. மரந்தந்தமாக.

அதிக காரமுள்ள பிராந்தியில் ஐஸிங்கிளாசும் கோழிமுட்டை ஓடுங் கொஞ்சம் போட்டுக் கலந்து உருண்டை செய்துக் குழம்பாக்கி அக்குழம் பில் சித்திரபபணி அல்லது மற்றெவ்விதச் சாதாவேலை செய்த மரங்களை

ரு நாள் ஊறவைத்தெடுக்க அதுகள் அசல் ரத்தங்களாகத்தோன்றும். மூன்குழம்புமிதத்திற்குப் பிராந்தியேவிட்டுக் கலக்கவும்.

## 423. நீரைப்பாலாக்க.

தேத்தான்கொட்டையைப் பசும்பாலிலரைத்து நிழலிலுலர்த்தியபின் அதை நல்லதண்ணீரிற் கரைக்கப் பாலாகும் அதை வெய்யிலில் வைக்க, தண்ணீராகும். மறுபடியும் அதிற் சுக்குத்தூளிட முன்போலப் பாலாகும்.

## 424. புஷ்பக்கிளைபதனம்.

எவ்வித புஷ்பங்களையுங் காம்போடறுத்து அதைக்கொஞ்சம் உப்புக லந்த நீரிற்போட்டுவைத்து அப்புஷ்பங்களை சிலதினம் பொருத்தெடுக்க அப்பொழுதுதான் அறுத்ததைப்போல் அழுகாமல் வதங்காமல் மெலியாமலிருக்கும்.

## 425. செக்கெண்ணைவராதிருக்க.

வாணியன் செக்காடுகையில் அதற்குள் நீர்முள்ளிவிதையைப் போட்டுவிட அவ்வெள்ளெல்லாம் தொக்கிப் பிசறிக்கொண்டு மொத்தையாய்த் தைலம் இறங்காமலிருக்கும். ஈதன்றி, எந்தவிதையைச் செக்காடினாலும் அதனைக் கருக்கி அச்செக்கிற் போட்டுவிட, அதிலுங் கிஞ்சிற்றேனும் எண்ணையிறங்காது. ஈதிரண்டிற்கு முறிவு, தயிர்விட்டுப்பிசறிச் செக்காடத் தாராளமாய் எண்ணையிறங்கும்.

## 426. சாராயிறங்காதிருக்க.

சாராயைப் பட்டியிற் காச்சும்போது அவ்வடுப்பு வெரிகையில், அதிலுள்ளே சிறுகுறிஞ்சான் சமூலத்தை அடுப்பிற் போட்டுவைக்கத் தீயெரூது. சாராயுமிறங்காது. பட்டியுங்காயாது. அடுப்பிற்போட்டதை யெடுத்துவிட்டாற்றான் அதிற் சாராயிறங்கும்.

## 427. ரோசாப்பூமஞ்சளாக.

ஒன்று அல்லது பல ரோசாப் புஷ்பங்களை யாவரும் பார்க்கக் காண்பித்து, மறுபடியும் அதிற் பயர்பாக்ஸ் குச்சியைக் கொளுத்தி புகையை யப்புஷ்பங்களிற் காட்டி, அப்புஷ்பத்தைப் பார்க்க அச்சிவப்புமாறி முழுதுமஞ்சள் நிறமாயிருக்கும்.

## 428. சர்ப்பத்தைக் கட்ட.

நல்லபாம்பு வீட்டினிடமாகிலும் மற்றெவ்விடமாகிலும் விடுபட்டு வந்துவிட்டால், அதினருகில் வெள்ளைப்பூண்டை நசுக்கிப்போட்டுவிட. அது யக்கங்கொண்டு ஓடாமல் படமெடுத்தாடாமல் அங்கேயே நின்றுவிடும்.

## 429. வாயில்நெருப்பெரிக்க.

பொட்டிலுப்பைக்கொஞ்சம் நீரிற்போட்டு அது நன்றாய்க்கரைந்தபின் இலவம்பஞ்சை அதிற்போட்டு நனைத்து நனைத்து அந்நீரை டெல்லாம் ஷுதி

லூட்டி உலர்த்தியபின் அதிற் கொஞ்சம் எடுத்து கந்தைத்துணியிற்சுருட்டி வாயிற்போட்டு ஊத துணியுமெரியும், புகையுங்கிளம்பும், வாயுஞ்சுடாது.

### 430. செந்நிறத்தீபம்.

இந்திரகோபப்பூச்சியை யுலர்த்திப் பொடிசெய்து பஞ்சியிலிட்டுத் திரித்து அகலில்வைத்து எண்ணெய்விட்டு விளக்கேற்றி எறிய, அதில் வீடெங்குஞ் செந்நிறமாயிருக்கும். ஆனாற் றெளிவுள்ள எண்ணெய்தான் வார்த்து விளக்கேற்றிவைத்தல்வேண்டும்.

### 431. சுத்தியாற்றட்டுவெடி.

சால்ட் என்னும் உப்பு இடை உ, குழாய் கெந்தகம் இடை க, இவ்விரண்டையும் வெவ்வேறாயரைத்து மறுபடியும் ஒன்றாய்க்கலந்து கொஞ்ச மெடுத்துக் கருங்கல்லின்மேல்வைத்துச் சுத்தியாற்றட்ட அதில் வெடிகிளம்பும்

### 432. தகரச்செடி.

நைட்ரிக் ஆசிட் திராவகம் க-அவுன்சும், முரியாடிக் ஆசிட் திராவகம் ரு-அவுன்சும், தண்ணீர் உ-அவுன்சும் சேர்த்து நெருப்பிற் காய்ச்சிச் சூடாயிருக்கிற தகரத்தின்மேலூற்ற, அத்தகட்டின்மேல் விநோத விநோதமான வுருவங்களாய் நிறைந்திருக்கும்.

### 433. கற்பூரச்செடி.

தீயேறிய அடுப்பின்மேல் ஒரு செம்புச்சட்டியைவைத்து அதில் ஸ்பிரிட்ஸ் ஆப் வைன் சாராயத்தையூற்றி அதில் எவ்வளவு கர்பூரங்கரையுமோ அவ்வளவு போட்டு எல்லாங்கரைந்த பின் இக்குழம்பையெடுத்து ஒரு குளிற்சிபொருந்திய கண்ணாடிபில்லையிலூற்றிச் சற்றுநேரம் பொறுத்துப் பார்த்தால் அக்கண்ணாடியின்மேற் செடியைப்போல் பலவிசித்திரங்கள் தோன்றும்.

### 434. சாயமெடுக்க.

துணிகளிலுள்ள எவ்விதச் சாயங்களையு மெடுக்க வேண்டில், அதுகளைக் காற்று வாட்டத்திலே நன்றாய்விரித்துப்பிடித்து குளோரைனைப்போட்டால் அத்துணிகளிலுள்ள எவ்வகைச் சாயங்களும் நீங்கிப் பிரிந்துவிடும். ஆனாற் பழைய துணிகட்குதவாது.

### 435. கசப்பிணிக்க.

நைட்ரேட். ஆப் ஸில்வரும், ஐபோஷல்பேட் ஆப் ஸோடாவுங் கலந்துவிட்டால், உ - ங்கசப்பாயிருப்பது தித்திப்பாகவேயிருக்கும். இவ்விரண்டினுள் ஒன்றை முன்பாக வாயிலடக்கக் கசக்கும். உ - ஞ்சேர்த்தாற் றித்திக்கும்.

### 436. புட்டியிற்கற்சுழல.

ஓர் பெப்பர்மெண்டுபுட்டியில் எலுமிச்சம்பழரசத்தை நிறையவிட்டு அதில் ஷஸ்டோன் அதாவது கல்காரியஸ் ஸ்டோன் அதிற் போட்டுவைத்தால்

11

அக்கல்லானது அப்புட்டியில் என்னோமுஞ் சுழன்றுக்கொண்டே மாரு திருக்கும்.

## 437. கம்பிளிச்சட்டை.

உடம்பெங்குங் கம்பளிச்சட்டைகளைப் போட்டு அதில் ஒருமட்டிக் கடிதத்துண்டை எடுத்துத் தன்றுடைமேல்வைத்துக் கெண்டைகையினுல் அழுத்தி நெருப்புப் பரக்கத் தேய்க்க, அதிலிருந்து நெருப்புப் பொசிபரக்கும். அப்பொழுது இருகை ஆள்தூண்டிவிரல்களை முடக்கிச் சற்றுவிட்டுப் பிடிக்க தீபொரிப் பற்றியெழும்பும்.

## 438. வசியத்திலர்தம்

கோரோசினையை வெள்ளி, நாயரில் தேனிலும், திங்கள், வியாழத்தில் நெய்யிலும், செவ்வாய், புதனில் பாலிலும். சனியில் தயிரிலும், இழைத்து நெற்றியில் திலர்தமிட்டுச் செல்லவும், தேவர் முதலிய யாவரும் வசியமாகி வணங்குவர்.

## 439. ஆடா முனி யாட.

தமிழ்பாஷையின் முதலெழுத்தும், வெண்ப வின் பின்னெழுத்தும், முடிவிற் கடையெழுத்தும், ஆகிய மூன்றுஞ் சேர்க்க அபின், அதை சிறுபயர்வீதம் வெற்றிலைக்குள்வைத்து மடித்து, பேயாடுபவர்க்கு உள்ளுக்கேற்றிவிடவும், உடனே நன்றுய்தலைசுற்றி விளையாடி வாய்மொழி சொல்லி முடியங்கொடுக்கும். ஆனுல் அப்பொழுதே முடியறுத்துவிடவும். இல்லாவிடில், அவிழ்த்துக்கொண் டோடிவிடும்.

## 440. வாழைப்பழமறுபட்டிருக்க.

சோடாவாட்டர் கம்பியை முனையில் டகரவடிவாய் வளைதது, வாழைப்பழம் வால்புறத்தில் துழைத்துச் சுழட்டிக்கொண்டே யேற்றி, மறுபடியும் இறக்கிப் பிடுங்கிக்கொண்டு, ஒரு சீப்பெல்லாம் இப்படியேசெய்து ஆளுக்கொவ்வொன்று புட்டுக் கொடுப்பதில், அவர்க ளுரிக்குமுன்பு அத்தனையும் உள்ளே பில்லைபில்லையாய் அறுத்திருக்கும்.

## 441. வாணப்பாம்பாட.

பேரோ ஸர்பென்ட் என்னும் வாணப் பாஷாணத்தை வாங்கி அதில் ஒருதுண்டை தணயில்வைத்துக் கொளுத்தவும், அது பாம்புபடம்போற் றலையெடுத்து யெழும்பிநின்றுடுவதில், அதைப் பாம்பெனப் பார்ப்பவர் சொல்லுவர். அது சற்றுநேரத்திற்கெல்லாம் நின்றுவிடும்.

## 442. தலைநோயகற்ற.

ஒற்றைத்தலைநோய் வந்தவர்க்கு வலதுக்கிடது இடதுக்குவலதுகை நாடிகளோடிடத்தில், சற்று அழுத்திப் பிடித்திருக்கும் வரையில் அந்நோயானது தவணையாயிருக்கும். விட்டுவிட்டால் மறுபடியுந் நோயெடுக்கும அ

தற்குப் பரிகாரம் ஓர் தம்படியாகிலுஞ்சரி, அல்லது அவ்வகலம் ஓடாகிலுஞ் சரி சீலையில் முடிந்து அங்கு கப்பணமாய் அழுத்திக் கட்டி வைத்திருப்பபி லக்நோயானது தீரும்.

### 443. தண்ணீர் நெய்யாக.

சப்ஜாவிரையைத் தூள்செய்து அதிற்கொஞ்ச மெடுத்துத் தண்ணீரிற் போட்டுக் கையினாலரக்க, அது நெய்யைப்போலிருக்கும். இவ்வாறே துளசிவிரையினுஞ் செய்யலாம். அல்லது ஸ்கூல்விரையிலுஞ் செய்யலாம்.

### 444. வெந்நீர் தேத்தண்ணீராக.

நெல்லிக்காயைச் சாச்சிய பாலிற்போட்டுத் தொக்கித் துவைத்து உலவைத்து உதிரியாக்கி அதிற் கொஞ்சமெடுத்து வெந்நீரிற்போட்டுச் சர்க்கரைகலந்து குடிக்கக் கொடுத்தால் தேத்தண்ணீரென்பார்கள்.

### 445. மீன்கள்மிதந்திட.

நஞ்சுக்கொட்டை, காக்குப்பூச்சி, சாதம், வகைக்கு ஒவ்வொரு பிடியாய்வைத்துச் சேர்த்தரைத்து மொத்தையாக்கி உதிர்த்துக் கிணர், துறவு அலலது குளங்களில் தூவிடவும், அம்மீன்களெல்லாம் அலைந்தின்று மிதந்து விடும். வேறு :—பேய்க்கொட்டையுஞ் சாதத்தி லரைத்துப்போட மீன்களியாய் மிதந்துவிடும்

### 446. க - கோலை - உ - ஆய்காட்ட.

கண்ணுக்கெதிரிற் சுமார் உ - அடிதூரத்தில் க - கோலும், அதற்கப்பால் சற்றுதூரத்தில் இன்னொரு கோலும், நேராய் நிற்கவைத்து கண்ணுக்கு முன்னிருக்குங்கோலை கவனித்துப் பார்க்கவும் மற்றொருகோல் இரண்டாகத் தோன்றும் உ - வது கோலைப் பார்க்கில் ஒரு கோல் இரண்டாகத் தோன்றும். ஆனால் ஒரு கண்ணைமூடிக்கொண்டு பார்க்கில் இவ்விதத்தோற்றந் தோன்றாது.

### 447. கிண்ணத்திலோசைகேட்க.

சுமார் ரு - அங்குலம் அகலமான அ - ஒயின் கிளாசுகளை ஒருமேசைமேல் வரிசையாய்வைத்து முதற்கிளாசில் கொஞ்சம்சலம், உ - ம் கிளாசில் இன்னுங் கொஞ்சம் சலம், இவ்விதமாகப் படிபடியாய் சலம்வார்த்து ஒரு கோலால் மெல்லென ஒவ்வொன்றையுந் தட்டவும், முறைமுறையே காதுக்கினிய சபதங்கள்கேட்கும். இது பியானுப் பெட்டியைப்போலிருக்கும்

### 448. இரத்தக்குழாய்காட்ட.

செவிமேயாரமாய் கண்ணுக்கருகில் நேத்திரத்திற் படாதபடி ஒரு விளக்கைமேலுங் கீழுமாய் ஆட்டிக்கொண்டு இருண்ட வீட்டில் சற்று தூரத்திலிருக்கும் ஒரு வெள்ளைச் சுவரைப்பார்த்தால் தன் கண்ணுக்குள்ளிருக்கும் அணுப்பிரமாணமான இரத்தக் குழாய்களின் உருவங்கள் அச் சுவரின்மே அநேகவிதமாகத் தோன்றும்

### 449. வானவில்தோன்ற.

சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கையில் தன்வாய் நிறைய சலத்தைவிட்டு சூரியன் புறமாக தன் முதுகைத்திருப்பி நின்று குளம் அல்லது ஏரியில் ஜலமிகவும் அசையாமல் சற்று அமரிக்கையா யிருக்கையில், வாயிலிருக்கும் நீரை நுட்பமான துளிகளாய் விழும்படி உமிழ்ந்தால், அது சலத்திலிருந்து ஆகாயத்தில் வானவில் தோன்றும். இதிற் சிலசாக்குறிகளைப் பார்ப்பது முண்டு.

### 450. கயிற்றின்மேல்நடக்க.

ஒருவனுக்குக் கயிற்றின்மேல் நடக்க விருப்பமிருக்கின், இருகடையில் பாரமேறிய சற்று நீளமாகிய கொம்பு அல்லது மூங்கிலைக் கையிற்பிடித்து தான் ஒரு பக்கமாய் நேரேவிட்டுச் சாயும்போது மறுபக்கத்துக்கு தன்கையிலிருக்குங் கோலை அதிகமாய் நீட்டிக்கொண்டிருந்தால், கனமத்தி சரியாய் நிற்கப்படும். அதில் அவன்விழவுமாட்டான். இதில் நன்றாய் நடப்பதற்கு கொஞ்சம் அப்பியசித்தல்வேண்டும் இல்லாவிடிற் பிசகும்.

### 451. வடக்குத்தெற்குக்காட்ட.

காந்தமேற்றிய ஊசியின்மத்தியில் மயிரிழைபோன்ற நூலாற்கட்டி சமமாய்த் தொங்கப்பிடித்து அதின் போக்குவரவின்படி விடவும், அதிலொருமுனையானது வடபக்கமாயும், மற்றொருமுனை தென்பக்கமாயும் காட்டி நிற்கும், இச்சூட்சமறிந்து மாலுமிகட்குத் திசைகாட்டுங்கருவி யொன்று கண்டுபிடித்தனர். இதிற் கப்பல்யாத்திரை செய்யவும், மப்பு மந்தாரங் காரிருளில் திக்குத்திசையறிந்து போகவும், இதினால் அனுகூல முண்டாகின்றது.

### 452. நீர்மட்டங்காண.

ஒரு புட்டியானது கால் - அல்லது காலேயரைக்கால் அடிநீளமும், அரை - அல்லது அரையே யரைக்கால்-அங்குலமும் உள்ளதில் ஒரு துவரையளவு குறைவாய் தண்ணீரைவிட்டு வாய்க்குக்கார்க்குப் பிகிந்து மூடியபின் அதைப்பூமியில் படுக்கவைத்துப் பார்க்கவும், மேடுபள்ளம் எச்சுதக்கு சமன் காணும் ஏதோர்கருவியாகின்றது. அதில் துவரையளவு குறைவாயுள்ள தண்ணீரில் காற்றேறி அது இரசம்போற்றோன்றி அத்தண்ணீரானது தெரியாது இக்காற்றானது அசைவாடி நிற்கும்.

### 453. வாத்துநீந்தியோட.

ஒரு கார்க்குத் துண்டை தண்ணீரில் நீந்தும்வாத்துபோற்செய்து அதின் மூக்கில் காந்த ஊசியொன்று அதின் வாயிற்கொஞ்சம் நீண்டிருக்கும்படிச் சொருகி தண்ணீரில் மிதக்கவிட்டு வேறொரு காந்த ஊசியை தன்கையிலெடுத்து இதின் தென்முனை பட்சியின் மூக்குக்கருகில் கொண்டுபோகவும், இதைக் குத்தவருவதுபோல் அந்த வாத்தானது வரும். ஆனால் காந்தத்தின் வடமுனையைக் காண்பிக்க அப்பட்சி விலகிப்போம்.

### 454. பரிசாரோபமறிய.

ஒரு கையின நடுவிரல் முனையை அதேகையின் சுட்டுவிரல் நகத்தின் மேல்வைத்து நடுவிரல் முனையை பெருவிரற் பக்கமாய்ச் சற்று திருப்பி ஒரு கோலிக்குண்டையெடுத்து, இந்தசுட்டு நடுவிரல்களின் உச்சியைத் தொடும்படிவைத்து நிதானமாய்ப் பரிச்சித்துப் பார்க்கவும், இரண்டு கோடுகளிருப்பதுபோல் மனதுக்குத் தோன்றும்.

### 455. கண்ணாடிமேலெழுதுமிங்கி.

ஸோடியம் ஸிலிகேட் ௩ - அல்லது ௪ - பாகம், சைனீஸ் வொயிட் ௧ - பாகம் இவைகளைக்கலந்து ஒரு புட்டியில்வார்த்துக் கார்க்குப்போட்டு பத்திரமாய் வைக்கவும். இதை உபயோகிக்குமுன் அப்புட்டியை நன்றாய்க் குலுக்கியதை எஃகு பேனாவால் கண்ணாடிமே லெழுதவும்.

### 456. நீர்க்குமிழிபந்து.

தேங்கா யெண்ணை சோப்பில் ௨ - அவுன்ஸ் எடுத்து பில்லை பில்லையா யறிந்து ௫ - பயின்ட் ஜலத்திற்போட்டு அது நன்றாய்க் கரைந்தபின் அடுப்பேற்றி ௨ - ௩ - நிமிஷங் கொதித்தபின் இறக்கி ௫-அவுன்ஸ் கிளிஸரைன் திராவகங்கூட்டி சூடுதணிந்தபின் ஒரு சிறுவைக்கோற் காம்பின் ஒரு முனையை ஷை சலத்திற் றோய்த்து மற்றொருமுனையை வாயில்வைத்து மெதுவாயூதவும், நீர்க்குமிழிபோல் நீருருண்டைகள் புறப்பட்டு ஆகாயத்திற் செல்லும். இக்குமிழியானது நெடுநேரம் அழியாது நிலையாய் நிற்கும்.

### 457. நீர்க்குமிழிவிநோதம்

ரோசனம் பலம் - ௪௬, கனடபிளஸம் பேபர்வார்னிஷ் பலம் ௫௩, கலந்து நெருப்பின்மேல்வைத்து உருக்கி இதிற் பந்து துளி டர்ப்பெண்டின் ற்பூரத்திராவகம் விட்டு இது சூடாயிருக்கும்போதே மேற்சொன்ன வீசு ஞ்செய்யவும். அதிற்குமிழிகளுண்டாகும். இதுகொஞ்சத்தில் அழியாது நெடுநேர மிருக்கும். உயரவும் எழும்பிப்பரக்கும்.

### 458. கடிதஞ்சுற்றிவர.

முன்கடிதத்தைக் கம்பிளியின்மேல்வைத்துக் கடலை்லீதம் சடையைக்கின்ளி அக்கடிதத்தின் பக்கம்வைக்க அச்சடை கடிதத்தின் மத்தியிற்போய் நிற்கும். அப்பொழுது ஒரு ஊசிக் கறிளைப்பிடித்து அதினருகிலிழுக்க அச்சடைத் துண்டுகளானது அதின்கூடவே திரியும்.

### 459. அயத்தூளுலாவ.

மூன் கம்பிளியின் மேல்வைத்த கடிதத்தின்மேல் அயப்பொடித்தூள்களைப் போட்டுவைத்து அதின்கீழ் ஒரு காகிதத்துண்டைக் கையாற்பிடித்து இழுத்துக்கொண்டேவர, அதின்மேல் இரும்புத்தூள்களானது அதற்குநேர் சுழன்றுக்கொண்டே திரும்பிவரும்.

## 460 கண்ணாடியிற்பென்ஸலாலெழுத.

சந்திராவகம் ௧00, சாண்ட்ராக் ௨, மாஸ்டிக் ௨, பென்ஸைன் ௨0-பாகங்களாய் ஒரு புட்டியில் வார்த்து அது நன்றாய்க் கரைந்தபின் இந்தவார்னிஷில் அகலதூரி அதாவது பிரஷினைத் தோய்த்து சுத்தமான கண்ணாடியின் மேற்புறத்தில் இலேசாய்ப்பூசி யுலர்ந்தபின் அதன்மேல் எழுதவேண்டியவைகளைச் சாதாரண பென்ஸலால் எழுதி சந்திராவகம், மாஸ்டிக் இவைகளொவ்வொன்றில் ௩ - பாகமெடுத்து நன்றாய்க்கலந்து இந்த வார்னிஷை எழுதின உருவத்தின்மேற் பூசவும், அது வுலர்ந்தபின் படம் வெகு அழகாயிருக்கும்.

## 461. கடிகாரம்நிற்க.

நம்முடைய இடதுள்ளங்கையில் ஒரு துண்டுக் காந்தத்தைவைத்து அதின்மேல் ஓடுங் கடிகாரத்தை வைத்துப் பிடிக்க, அக்கடிகாரம் ஓடாது நின்றுவிடும். மறுபடியும் அதை வலதுள்ளங்கையில்வைக்க, அது முன்போலவேயோடும். இப்படி எத்தனைதிறஞ் செய்தாலுஞ் செய்யலாம்.

## 462 நாணயமுருக.

எவ்வித நாணயத்தையாகிலும் வளைத்து ஒரு கொட்டாங்கச்சியிற் போட்டு அதில் ௩ - பங்கு உலர்ந்து தூள்செய்த பொட்டிலுப்பு ௧ - பங்கும் கெந்தகப்பூவும் வைத்து, அதின்மேற் சன்னமா யறுபட்ட வாள்தூளைப்போட்டு அதிலொரு பயர்பாக்ஸ் குச்சியைக் கொளுத்திவைக்க எல்லாம் பற்றியெரியாமுன அந்நாணயம் உருகிவிடும். ஆனாற் கொட்டாங்கச்சிமாத்திரம் உள்ளே கொஞ்சம் பற்றிருக்கும்.

## 463. தேங்காய்வெடிக்க.

ஒரு தேங்காயைச் சுண்ணாம்புக்காளவாய் எறிவதற்கு முன்னே அதினுட்சொருகித் துறந்துவைத்து அக்காளவாயெறிந்தபிறகு அத்தேங்காயையெடுத்துக் காண்பித்து அதின்மேற் றண்ணீரைத்தெளித்து ஒருவர் கையிற்கொடுக்க, அக்காயானது இரண்டாய் வெடித்துவிடும்.

## 464. எண்ணெய்வெண்ணெயாக.

ஒரு ஏனத்திற் கொஞ்சந் தண்ணீரைவிட்டு அதிற்கொஞ்சந் தாளிச்ச சுண்ணாம்பைக்கரைத்து மறுபடியும் அதில்வேண்டிய நல்லெண்ணெயை விட்டு இம்மூன்றையுங் கீழுமேலும் அடித்து உராய்ந்து சிலுப்ப, அந்த எண்ணெயானது மேற்படி சுண்ணாம்பிலிறுகி வெண்ணெயாய்த் திரளுவதில், து நெய்மணந்தான் வரும்.

## 465. நெய்வெண்ணெயாக.

கொஞ்சஞ் சுண்ணாம்பைத் தண்ணீரிற் கரைத்து அதில்வேண்டிய நெய்யைவிட்டு முன்போல கீழுமேலும் அடித்து உராய்ந்தச் சிலுப்ப, அந்த

நெய்யெல்லாம் மறுபடியும் வெண்ணெயாய்த் திரளும். அதைத் தின்றாலும் அம்மணமானது மாறாது.

### 466. கடிதத்தப்பஞ்சுட.

ஒரு துண்டுக் கடிதத்தை விளக்கின்மேற் றூக்கிப்பிடித்து அதில் நல்லெண்ணெய்விட்டு நன்றாய்க் காய்ந்தபின் அதில் வடை பணிகாரமுதலிய பலகாரவர்க்கங்களைப் போட்டுச்சுட்டு வெந்தபின்னெடுத்து உபயோகிக்கவும். ஆனாற் காகிதம் எரியாதிருக்கும்.

### 467. நீரிற்றீபமெரிய.

மெழுகைக் கம்பியோற்றிரியாயுருட்டி அதின்மேற் சல்லாத்துணியை வற்றிபோற்சுற்றி அதை அத்தப்பாவில் ௪-௫-தினந் தோய்த்துத் தோய்த்து உலரவைத்து அவ்வற்றியை ஒரு அகலிற்போட்டு அதிற் றண்ணீரைவிட்டு விளக்கேற்றிவைக்க, அவ்வற்றி நெடுநேரம் அவியாது எரியும்.

### 468. சூளைநொறுங்க.

குலாலன் சட்டிபானைகளின் சூளையையடுக்கி அதிற் றீயிட்டுக் கொளுந்தாததற்குமுன் அச்சூளைக்குள் ௰-கெச்சைக்காய்களை ௪-பக்கமும்போட்டு வைக்க, அது எரியும்போது அக்காய்கள்வெடித்து ௪-பக்கமுஞ்சிதறியோட, அடுக்குண்ட சட்டிப்பானைகள் தூள்தூளாய் நொறுங்கி உடைந்துவிடும்.

### 4 ͦ9. முருங்கைக்காய்புழுவா

ஒரு முருங்கைக்காய்க்கு முழுமிளைஞ் சுண்ணாம்பைப் பூசி வெய்யிலில் வைக்கச் சற்றுநேரத்திற்கெல்லாம் சீயனைக்க, அதிலிருந்து ஒருமாதிரி புழுவைப்போல் வெளிவரும். ஆகிலும் அது அசல் புழுவல்ல

### 470. பட்டுத்தீபமெரிய.

தம்பலப்பூச்சிகளில் ௨0-பிடித்து அவைகளையெல்லாம் சல்லாவிலேற்றி வற்றி திரியாகத் திரித்து அதை யப்படியே நெய்யிற்போட்டு விளக்கெரிக்க அவ்வெளிச்சத்தில் வீடெங்கும் பட்டுச்சோம்பாயங்கள் போட்டுப் பரப்பியதைப்போலிருக்கும்

### 471 பாலானது தயிராக.

குருணிப்பாலில் வாழைக்கிழங்கை யுலர்த்தி வஸ்திரகாயஞ் செய்த தூளில், உழக்கை யதிற்போட்டுக் கலக்கத் தயிராகும். இன்னும் நாணற்புல்லைப் போட்டாலும், அந்தப்பால் தயிராகத் திரளும்.

### 472. மோரானது தயிராக.

கடைந்தெடுத்த அரைப்பானை மோருக்கு விளாங்காயை யுலர்த்திப் பொடித்துக் கானாகவியதில் உழக்கு அதிற்போட்டுச் சிலுப்பி மூடிவைக்க, அது தோய்ந்தாற் தயிராய்க் கட்டிவிடும்

## 473. கரக்கும்பாலுதிரமாக.

தம்பலப்பூச்சியைப் புல்லிற்சேர்த்துச்சுருட்டிக் கரவற்பசுவுக்குத் தின்னக்கொடுக்க, அப்பசுவானது மேய்ந்துவந்தபின் பதைக் கரக்கவும், அதின் பாலெல்லாம் வெறும் உதிரமாகச் சொரியும். இதற்கு மாற்று :—தொட்டியைச்சுத்திசெய்து நல்லஜலம்விட்டு அதிற் சுக்குத்தூளைப்போட்டுக் கலக்கிக் குடிப்பாட்டிக் கட்டிவைக்க, அது உ - ரு - வேளையிற் சுவஸ்தமாகும். கரக்கும் பாலும் வெளுத்திருக்கும்.

## 474. தேவர்களைத்தரிசிக்க.

பாஸ்பரஸ் என்னுந் தீமுருகல்பாஷாணத்தைத் தண்ணீரிற் றேய்த்து ஙாத்து ஒரு ஆளுருவமாயுள்ள பொம்மை முன்புறத்திற்பூசி இருள் வீட்டிற்குள்ளே நிற்கவைத்து, பார்ப்பவர்கட்குத் தேவனொன்றும், பசாசுவென்றும், இறந்துபோனவனென்றும், அவனெழுந்துவந்தானென்றுஞ் சொல்லி, அவனை வரவழைத்தேன் பாரென்றுங் காண்பிக்க நம்பிடுவர்.

## 475. கேழ்வரகு முளைக்க.

கோழிமுட்டை யொன்றில் ஊசிபுக ரந்தனஞ்செய்து அதிலுள்ள அம்புலியைப்போக்கி அம்முட்டையுள் தளர்த்தியாய்க் கேழ்வரகு விளையை ஒவ்வொன்று யதனுள்ளேற்றி அத்துளையை மூடி, அம்முட்டையை அவையங் காக்கும் முட்டையோடு சேர்த்துவைத்து தினந்தின மதைப் பார்த்துவந்து குஞ்சுபொரிக்குஞ் சமயத்தில், அதைப்பார்த் தெடுத்துக்கொண்டு, இப்படி ௨ - கோழி அவையத்தில் வைத்தெடுத்து, அக்கேழ்வரகுவிளைகளிற்கொஞ்சமெடுத்து செம்மண்ணிற் பாத்திகட்டி அதில் விளைத்து ஜலந்தெளித்து மூடிவைத்து உடனே திறக்க, அதில் முளையுருகி நாத்தாகும். மறுபடியும் மூடிமூடித் திறக்கப் பயிராகிக் கதிராகி முத்தியிருப்பதை யறுத்து அப்பொழுதே யாவர்க்கும் கொடுத்துத் தின்னச்சொல்லியும் சமைக்கச்சொல்லியுங் கொடுக்கவும் ஆச்சரியப்படுவர்.

## 476, பிணாகணக்கெடுக்க.

ஒருதுண்டு சலவைச் சல்லாவை விரித்து முகத்தின்மேற்போட்டுமூடி அண்ணாந்து வானத்திற் சந்திரனைப்பார்க்க, வரிவரியாய்க் கோணங்கள் தெரியும். அதில் திதியித்தனையென்றும், பிறையித்தனையென்றும், ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்ளலாம்.

## 477. பித்தளை சாமான் கண்ணாடியிலொட்ட.

காஸ்டிக் சோடா - க, காலோபோனியம் என்னும் ஓர் வகைப்பிசின் ஜலம் ரு - பாகங்களாய்க்கலந்து கொதிக்கவைத்து இதோடு ஜிப்ஸம். அல்லது பிளாஸ்டர் பாரிஸ் என்னும் ஓர் வகைச்சுண்ணாம்புத் தூளில் பாதியளவுகலந்து நன்றாய்ப் பிசைந்துகொண்டிருக்கவும், இலப்பம்போல்வரும். அதை யுபயோகிக்கவும்.

## 478. கண்ணாடிபுட்டியைவெட்ட.

ஒரு புட்டியிற் குளிர்ந்த ஜலம்விட்டு அப்புட்டியின் உடலைவிட குறுக்களவில் ஒரு அங்குல விசாலம் ௨ - அங்குலங் கனமுள்ள இரும்புக்கம்பிவளையத்தை செந்நிறமாய் உலைக்கடத்திற்காச்சி புட்டியின்மேல் நுழைத்து புட்டிக்குள் ளிருக்கும் ஜலம்மட்டத்திற் சமமாய்ப் பிடிக்கவும், அப்புட்டியம்மட்டத்துக்குச் சரியாய் வெடிக்கவும் ஆரம்பிக்கும். அந்தசப்தத்தைக் கேட்டவுடன் அக்கம்பியை யெடுத்துவிட்டு புட்டியின் மேற்பாதியையும் ஜாக்கிரதையாய்ப் பிரித்துவிடவும்.

## 479. பாம்புவிஷமீள.

ஒருவனைப் பாம்பு கடித்தநேரத்தில் தன் சிறுநீரிற் சிரங்கைபிடித்து அப்படியே குடித்துவிட, உடனே அவ்விஷமீளும். கடியுண்டவனும் பிழைப்பன். மற்ற விஷகாலி நஞ்சுவகைகட்கு மிதையுட்கொடுக்கவும் மேற்பூசவும் கடிவாயிற்றடவவும் நன்மை.

## 480. கண்ணாடியைப் பொடிசெய்ய.

ஒரு கண்ணாடிப்பில்லையை நெருப்பில்வைத்து செந்நிறமாய்ச் சூடாக்கி சடீரெனக் குளிர்ந்தஜலத்திற் றோய்க்கவும். அது தூள் தூளாய் வெடித்து விடும். அதையரித்துத் தெள்ளி நுண்ணிய தூளைப் பிரித்து வைத்துக் கொள்ளவும், முன் னுருகியிருக்குங் கண்ணாடியைத் துளித்துளியாய்க் குளிர்ந்த ஜலத்தில் விழவொட்டாமல் ஒவ்வொரு துளியும் ஜலத்திற் பட்டவுடன் வால்முளைத்த கோழிமுட்டை வடிவா யுருவமையும். அதி லொன்றையெடுத்து அதின் முனையைச் சற்றுடைத்தால் திடீரென பெருஞ் சப்தத்தோடு வெடிக்கும்.

## 481. விசித்திர காகிதப்படம்.

ஒரு டம்ளரில் கொஞ்சஞ் ஜலம்விட்டு அதிற் கரையுமளவுள்ள பொட்டிலுப்பைச் செவ்வையாய்ப் பொடித்துப்போட்டு அது நன்றாய்க் கரைந்தபின் அதில் பிரஷைத் தோய்த்து ஒரு காகிதத்தில் யானை முதலிய மிருகம், பக்ஷி, மனித ருருவங்களைத் துடர்ச்சிக்கோடுடையதாய் வரைந்து, அதுவுலர்ந்தபின் இக்காகிதத்தை உயரத்திற் றொங்கவிட்டு கோடிருக்குமிடத்தில், எங்கேயாவது நெருப்புப் பொறியாற் சுடவும், அத்தீயானது மெதுவாக உருவமுழுதும் பற்றிக்கொண்டேபோகவும், அவ்வுருவங்கள் அக்காகிதத்தினின்று கீழேவிழும்.

## 482. எறும்புபுத்தடங்க.

எறும்புகள் புத்தானது எவ்விடத்திருக்கிறதோ அவ்விடத்திற் கொஞ்சம் முட்டைச்சாம்பலை தூள்செய்து அப்புத்துகளின்மேற் போட்டுவைக்கவும், அவ்வபுத்துகளிலுள்ள இறக்கைமுளைத்த எவ்வித எறும்புகளும் வெளியி

னில் வாராது உள்ளேயே யடங்கிவிடும். இச்சாம்பல் பாம்புமுதலிய விஷ ஜாலிகட்குச்சத்துருவாகும்.

### 483. வேறு - டிராயிங் இங்கி.

அதிக சூடாகிய ஜலத்தில் வெண்காரத்தைக் கரைத்து அதில் ஷெல் லாக் கென்பதைச்சேர்த்து அதுவுங் கரைந்தபின், ஒரு தட்டைப்பீங்கானிற் கொஞ்சம்விட்டு இண்டியன் இங்கியை யரைத்துச் சேர்க்கவும். இதில் டிராயிங் பேனவைத் தோய்த் தெழுதியபின் அதை ஆல்கஹால் திராவகத் திற் கழுவிச் சுத்தஞ்செய்யவும்.

### 484. வேறு - பளபளப் பிங்கி.

பிரின்டிங் ஆபீஸ் மையில் லவண்டரெண்ணெயைவிட்டு நன்றாயரைத் து பேனவைத்தொட்டு நல்லமெருகுகாகிதத்தி லெழுதவும், அவ்வெழுத்து கள் வெகு பளபளப்பாயும், சேர்த்தியாயும், விநோதமாயுமுள்ள நல்ல இங்கி யாயிருக்கும்.

### 485. வேறு - கண்ணாடி இங்கி.

எவ்வித மெழுகாவ தொன்றை யுருக்கி வேண்டிய கண்ணாடிப் பில்லை யின்மேல் நன்றாய்ப்பூசி, அம்மெழு கிறுகியபின் எழுதவேண்டிய விஷயங் களை ஓர் கூறாகிய ஊசியின்முனை அக்கண்ணாடிப் பில்லையைத் தீண்டும்படிக் குக் கீறி யெழுதி, பேரியம் ஸல்பேட் ௫ - பங்கும், அம்மோனியம் பிளோ ரைட் ௧ - பங்குமாய் இவைகளை யொரு கர்புட்டியிற் கலந்து இதிலுள்ள அம்மோனியங் கரைந்துவிட்டபின், ஷை திராவகம் பால்போலத் தோன் றும் வரையில், கந்தகத்திராவகம் போதுமானதுவிட்டு கொஞ்சநேரம் பொ றுத்து தண்ணீரிற் கழுவிவிடவும், ஷை கண்ணாடியில் எழுதிய வெழுத்து கள் மாத்திரம் அழியாமலிருக்கும்.

### 486. அழியாத இங்கி.

ஜங்கால்பச்சை ௯ - பங்கு, நவாச்சாரம் க௮ - பங்கு, ராம்பிளாக் ௨ - பங்கு, ஜலம் அ௯ - பங்குகளாய்ச் சேர்க்கவும், அது ஒன்றோடொன்று கலந்து சேர்த்தியான இங்கியாயிருப்பதில், அது எழுதுவதற்குமுன் அப்புட் டியை நன்றாய்க் குலுக்கியபின் னெழுதவும்.

### 487. அக்கினிஜொலிப்பிங்கி.

தீமுருகல்பாஷாணம் ௯ - டிராம், கருவாப்பட்டைத் தைலம் ௯ - அ வுன்சு, இரண்டு மொரு புட்டியிற்போட்டுக் கார்க்குப்பிகிந்து அப்புட்டியை ச் சற்று சூடேற்ற அதி னுள்ளிருக்கு மருந்து வுருகிவிடும். இதிற் பேனா வைத்தொட் டெழுதி அதை இருட்டுவீட்டில் அக்காகிதத்தைக் கொண்டு போய் பார்க்கில் அவ்வெழுத்துக ளியாவும் அக்கினிமயமாய்த் [illegible] ஜ்வ லித்திருக்கும்.

## 488. இலைநரம்பெடுக்க.

ஒரு குவார்ட்டு நல்ல சலத்தில் ஒரு தேக்கரண்டி குளோரைட் ஆப் லைம்போட்டு அதில் இலைதழைகளை அழுத்திவைத்து ச-மணிநேரம் பொறுத்தூறியபின்னெடுத்து அவைகளை நல்லசலத்திற் கழுவி தூசுகள்படாமல் வெய்யிலில் உலரவைத்தால் அவ்விலைகளின்தழைகளெல்லாம்போய்வெறும் நரம்புகள் மாத்திரமிருக்கும் ஆனாலிதையே அச்சிடுவதுமுண்டு. அல்லது அல்லாகூண்டு முதலியவை செய்வதுடன் இன்னும் அபிரோக்கை அமைப்பதுமுண்டு.

## 489. பூனையிற் றீப்பொரிபட.

மழைகாலத்தில் ஒரு கறுத்தப்பூனையைப் பிடித்து ரோமங்கட் செறிந்து வால்புறமிருந்து தலைப்புறமா கையிலேற்றடவி விசையாயுருவிவர, அம்மயிர்களில் மின்சாரமுண்டாகி நெருப்புப் பொரிகள் பறக்கும். இன்னுமிதிலிருந்து பல்வலசிந்தனைச் செய்வதுமுண்டு.

## 490. கடிதம் நகர.

ஒருபக்கம் வாயுள்ளதும் மற்றொருபக்கம் வாயில்லாததுமான கண்ணாடிக் குழையைப் பட்டுத்துணியின்மேற் றேய்த்து நெருப்புப் பறக்கும்போது அதை ஒரு கடிதத்துண்டின் பக்கத்தில் வைக்க அக்கடிதம் அசைந்துக்கொண்டே வந்து இக்குழையி லொட்டிக்கொள்ளும்.

## 491. கடிதமிழுக்க.

கொஞ்சநீள மெழுகு எடுத்துத் தீயிற்காச்சி கொம்புபோலாக்கி அதைக் கைகீண்டாக் கம்பளியின்மேற்றேய்த்து நெருப்புப் பறக்கும்போது ஒரு கடிதத்துண்டை வைக்க அது நகர்ந்துவந் தொட்டிக்கொள்ளும்.

## 492. ஆவித்தநண்டோட.

ஒரு சரிசமைக்கத் தட்டத்தில் ச - ரு - நண்டுகளை உயிரோடுவிடுத்து, அதின்மேல் கொஞ்சம் சலாமோனியாக ஊப்போட்டு கொஞ்சந் தண்ணீர் விட்டுப்பிசகிவிட அது சமைத்தசரிவைப்போலிருக்கும். அதைக் காட்டியபின் அந்நண்டுகளை வெளியிலெடுத்து வேவவேறாய்விட, அவைகள் பரபரென்று ஓடுகிறதைப் பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்

## 493. மஞ்சள்திபம்.

கொஞ்சம் கொதிக்கவைத்து விதவிதென்றிருக்குஞ் சாராயத்தில் உப்புப்பட்டபோட்டு அச்சாராயத்தைக் கொளுத்திவிட்டால் வீடெல்லாம் மஞ்சளாகப் பிரகாசிக்கும். அப்பொழுது மனிதருடைய முகமெல்லாம் ஒரு மாதிரியாகத் தெரியும்.

## 494. இரும்பிற் பொன்கிலிட்டிட.

ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர்விட்டுப் பளிங்குப மணியளவு இரும்புத்துண்டுகளை அதிற்றேய்த்து உடனேயெடுத்துவி

டு மறுபடியும் குளிர்ந்த தண்ணீரிற் ரேய்க்க, அதிலுயர்ந்த பொன்இலிட்டா னது நன்ருய்ப் படிந்துவிடும்.

**495.** பலவர்ணங்காட்ட.

லஸ்தர்களின்கீழ் தொங்கவிட்டிருக்கும் கண்ணுடித்துண்டில் ஒன்றை யெடுத்து அதைச் சூரியன் முன்பிடிக்க அந்தரஸ்திப்பட்டவீட்டின் சுவரெல் லாம் பொட்டு பொட்டாக பஞ்சவர்ணங்களாய்த் தோன்றும். அதை எப்ப டித் திருப்பினுலும் அப்படி யெல்லாம் திரும்பும்.

**496.** இரும்பொட்டாதிருக்க.

வண்டிசக்கரப் புறத்திலுள்ள சற்றளவு இரும்புச்சட்டத்தைப் பூமியில் வைத்து விரட்டியினுற் புடம்போட் டெரியும்போது அதில் ஒரு சிறுதுண் டு பித்தளையைப்போட்டுவைக்க, அவ்விரும்பு சட்டத்தைக் கொல்லன் இரு முனைகளையும் பற்றவைக்கும்போது அது ஒன்றிற்கொன்று ஒட்டாது வெவ் வேருகத்தானிருக்கும். மறுபடியும் அதை வேறு புடமிட்டெரித்து முன் போல பொருந்தச்செய்ய ஒட்டிக்கொள்ளும்.

**497.** காற்றில் விளக்கவியாதிருக்க.

மெல்லிசுசங்கைத்துணியில்உப்புத்தூளைப்போட்டு எவ்வித எண்ணையா கிலுஞ்சரி விட்டுக்கொளுத்தி வெளிப்புறத்தில் வைக்க,எவ்வித காற்றடித்தா லும் அவ்விளக்கவியாது வாயினுல் ஊதினுலும் நிற்காது.

**498.** மறைவிக்கிசெய்ய.

ஜியாபர் எடுத்து கைட்ரோ முரியேடிக் திராவகத்திற் கலந்து கொஞ் ந் சலம்விட்டுக் கரைத்துப் பேனவிற்றெட்டுக் கடிதத்தி லெழுதிப்பார்த் தால் எழுத்தொன்றுந் தெரியாது. அக்கடிதத்தை அடுப்பின் அனலிற் காச் சிப் பார்க்கப் பச்சையிங்கியினு லெழுதியதைப்போற் றெரியும். அக்காகிதங் குளிரக் குளிர எழுத்துகளு மறைந்துவிடும்.

**499.** தீபசலம்.

அதிக சிறிய தவளைக்குஞ்சுகள் தண்ணீர்குட்டையைவிட்டு மேடேறி வந்து மேய்வதில் ச-(ங) - பிடித்துவந்து முன்போற் சல்லாவிற்பரப்பி வற் றியாகத் திரித்து நெய்யில் விளக்கேற்ற, வீடெங்குந் தண்ணீருற்றி குளிர்ச் சியாய் வைத்திருப்பதுபோற் ரேன்றும்.

**500.** குளிசங் குதிக்க.

எவ்வித லோகங்களிலாவது ஒரு தாயித்தைச்செய்து அதில் பாதரசத் தைவிட்டு மூடிச் சந்தில்லாமற் பொருத்தி அதையெடுத்து நெருப்பின்மேற் போடச் சற்றுநேரத்திற்கெல்லாம் அக்குளிசமானது தணல் பொறுக்கமாட் டாமல் மேலெழும்பிக் கீழே குதிக்கும். எத்தனை விசைபோட்டாலும் அப் படிதான் யெகிறும்.

கலியுகமாராட்டமென்னும் கண்கட்டுவித்தைகள்
முற்றிற்று.

# மூட்டுப் பூச்சிகள் நாசயந்திரம்.



இஃது சேழமணவை சத்திரகவி தேவேந்திரநாத பண்டிதரியற்றியது.

அங்கரணியாசம், கரணியாசம், நியாசம், மஹாநியாச முதலிய கிரியா மந்திரோச்சாட்டணஞ்செய்து, பகாயுகமாய் வெளிப்படாத இம்மூட்டுப்பூச்சி நிர்மூல வியந்திரமானதை வாங்குவோர்கள் சந்தேகமின்றி, தாங்கள் வசிக்கும் ஒவ்வொரு வீடுகளின் அறைகளிலுள்ள கும்பு தூசுகளை நன்றாய் விளக்கி சுவர்முதலிய ஸ்தானங்களைச் சுத்தப்படுத்தி, அங்கு கொஞ்சம் பெருங்காயத்தைத் தண்ணீரிற் கரைத்து கீழ்மேல் முழுதுந் தெளித்து, இவ்வியந்திரங்கள் ௩-க்குந் தூபங்காட்டி வாசற்படியருகில் ௧-பக்கம்விட்டு மற்ற ௩-பக்கம் ௩-இயந்திரங்களை சுவர்களின்மேலிம்மாதிரி தூக்கியொட்டி-வும், அங்குள்ள மூட்டுப்பூச்சிகள் ௩-தினத்துள் வழிந்தோடி விலகிவிடும்.

இதைச் சில அச்சியந்திரசாலைத்தலைவர் இவ்வாறு இவ்வியந்திரத்தைப் பதிப்பித்து விற்பனைசெய்துவந்ததில், அது யாவர்க்கும் பயனின்றி மூட்டுப் பூச்சிகளொன்றேனும் விலகாமையால், இவ்வியந்திரத்தை வாங்கியவர்கள் வியர்த்தமெனக்கருதி, வெகுவாயவர்களை வைதிடல் விற்பவர் வெட்கி; இதை பிரகடனியாது மறுதலித்து, விற்பனைசெய்வதை யொழித்துவிட்டனராதலால், இம்மாதிரி வேறொருவரிடம் வாங்குவது வியர்த்தமேயாம், இதையே பாலக்கிரக முதலியதாகும், பசாசு பிடித்தவர்க்கும், பயிர்-செடி-கொடி-காய்-கனி-வெற்றிலைத்தோட்டம்-முதலியதில், பூச்சிகள்-புழுக்களை பிழுத்ததற்குக் குளிசமாடிக் கட்டிட, யாவும் விலகி விரைவில் நசிந்துவிடும்

இவை வேண்டுவோர்கள் எமதிடத்திலும், சென்னை-சூளை அஷ்டபுஜந் தெருவு 23-வது கிருகத்தில் இந்நூலாசிரியர் செ. சி. தேவேந்திரநாதபண்டிதரிடத்திலும் இதோடு இன்னுஞ்சில நூதனபுத்தகங்களைப் பெறலாம்.

இவ்வியந்திரம் ௩-க்கு அணா ௩, வெளியூரார்க்கு அணா ௧

இதை வாங்குபவர்க்கு, ௧0-க்கு ௧-செட்டு பரிசளிக்கப்படும்.